கல்கி

புத்தாண்டு சிறப்பிதழ்

KALKI 14-4-1974 50 காசு



FOUR AND A HALF MILLION PEOPLE READ THE WEEKLY...

...*NATURALLY!*

It is Asia's finest illustrated magazine.

It gives you:

* Current Topics. The Weekly helps you to keep pace with tomorrow: lively comment on topical subjects—political, social, economic, cultural.

* Communities. The Weekly helps you know your neighbours—their origins, customs, rituals, their problems and their achievements.

* General Features. The latest in books, films, music, theatre, painting, short-stories, humour and satire, a fun-filled page for children; jokes—new and stale; your Fortune from the Stars, and loads of other interesting material.

All written by experts, yet lively and readable.

All illustrated by the finest photographers, artists and cartoonists of the country.



The Illustrated Weekly of India


"ட்ரூ-டோன்"
சமமாகவும்
சீராகவும் பரவும்!"
திருமதி வின்னி சங்க்
"ட்ரூ-டோன்" பாதுகாப்பானது, எளிதாக உபயோகிக்கலாம்"
ஜென்னி லீ
இண்டர்காண்டினென்டல், புது தில்லி.
"ட்ரூ-டோன்" வழங்கும் பளபளப்பான இயற்கை வண்ணம் பார்க்க பிரமிப்பூட்டுவது"
"ட்ரூ-டோன்" உங்கள் கேசத்திற்கு அதன் இயற்கையான வண்ணத்தை வழங்குகிறது"
மாண்டி
ஷெரடன், பம்பாய்-1.
HELENE CURTIS
TRU - TONE
பெரிய மற்றும் நடுத்தரமான பாக்குகளில் கிடைக்கிறது
ARMS-HC-4030-140 TAM
முன்னணியில் நிற்கும் கேச அலங்கரிப்பாளர்கள் ஒருமித்து சிபாரிசு செய்வது
ஹெலென் கர்ட்டிஸ்
ட்ரூ-டோன்
ஹேர் டை
ஹெலென் கர்ட்டிஸ் ஆண்களுக்கும் பெண்களுக்குமென, உலகிலேயே மிகப் பெருமளவு விற்பனையாகும் கூந்தல் சாயம்.
ட்ரூ-டோன் கறை நீக்கியும் கிடைக்கிறது.
தயாரித்து வழங்குவோர்: ஜே.கே. ஹெலென் கர்ட்டிஸ் லிட்., பம்பாய்-1

உங்கள் வாழ்க்கையில் இசையின் இன்ப வெள்ளம் ஓடட்டும்

வாழ்க்கையுடன் இணைந்தது இந்தியன் பாங்க்!
சேமிப்பது, முதலீடு செய்வது, உற்பத்தியை
பெருக்குவது என்பது வாழ்க்கையின் நியதி.
இந்த இலட்சிய வெற்றிக்கு இந்தியன் பாங்க்
மையமாக திகழ்கிறது. சிக்கன வாழ்விற்கு
இது சிறப்பான சேவை புரிந்து உங்களுக்கு
உதவுகிறது. இந்த தமிழ் புத்தாண்டு தினத்தில்
தனது ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இந்தியன் பாங்க் நல்வாழ்த்து கூறுகிறது.


இந்தியன் பாங்க்

(இந்திய அரசுக்கு முழுதும்
சொந்தமானது)

தலைமை அலுவலகம்:
17, வடக்கு கடற்கரை சாலை,
சென்னை-600001



இந்தியாவெங்கிலும் 442 கிளைகள். அவற்றுள் சென்னையில் 51 கிளைகள், கோவையில் 7, மதுரையில் 7, சேலத்தில் 4, திருச்சிராப்பள்ளியில் 9, மற்றும் கூனூர் R.S., கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், காரைக்குடி, கும்பகோணம், மன்னார்குடி, மாயவரம், மேட்டூர் அணை, நாகபட்டினம், நாகர்கோவில், நெய்வேலி, உதகமண்டலம், பழனி, ராஜபாளையம், ராமேஸ்வரம், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் முதலிய இடங்களில் கிளைகள் உள்ளன.



மூட்டமான நாளிலே முகமலர்ந்த முறுவல் ...



புதிய ஆக்பா ஐஸோலி 1 உசித அளவுக்குக் குறைவான வெளிச்சத்திலும் ஒயில்மிளிரும் படங்களை எடுத்துதவுகிறது — தேர்ந்தெடுக்க 2 லென்ஸ் ஸ்டாப்புகளோடு.



விலை: ரூ. 143/- எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. பிற வரிகள் தனி.

ISOLY-I

AGII

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்,

உண்மையுள்ள உங்கள் ஐஸோல்.

Simoes/AG/IS/ Tam

நான் புகைபிடிப்பதை
விடவேண்டும் அல்லது
சிரிக்காமல்
இருக்க வேண்டும்.



ஐயோ! சொத்தைப்
பல்வலியால் உயிரே
போய்விடும்
போலிருக்கிறது.



பாக்குத் தூள்
மெல்லும்போதெல்லாம்
பற்களுக்கு இடையே
சிக்கிக் கொள்கிறது.



பற்களைத் துலக்கும்போது
ஈறுகளிலிருந்து இரத்தம்
கொட்டுகிறது.



வறுத்த கோழி எனக்குப்
பிடித்தமானதுதான்,
எனினும் பல்லிடுக்குகளில்
ஒட்டிக் கொள்கிறதே!



ஐஸ் க்ரீம் சாப்பிட
ரொம்ப ஆசை...ஆனால்
முடியவில்லையே!



உங்கள் விருப்பம் எதுவாயினும் சரி பொருத்தமானது—வீட்டா டூத்ப்ரஷ்

1. வீட்டா கோல்ட்
2. வீட்டா காண்ட்டினென்டல்
3. வீட்டா ஜூனியர்
4. வீட்டா பேபி
5. வீட்டா டீலக்ஸ்
6. வீட்டா டிப்-க்ளீன்
7. வீட்டா ஸ்டாண்டர்ட்

மெல்லிய அல்லது வலிய ஈறுகள் மற்றும் வலிதருகின்ற, வளைந்த அல்லது தெற்றியுள்ள பற்கள் போன்ற ஒவ்வொருவிதமான தேவைக்கும் ஏற்ப கிடைக்கிறது வீட்டா. தேவைக்குத் தகுந்தபடியான டூத்ப்ரஷைத் தேர்ந்தெடுத்து உபயோகிக்காவிட்டால், ஒரு பயனும் இல்லை. பற்களைத் தூய்மையானதாக வைத்திருக்க ஒரு நல்ல டூத்பேஸ்ட் மட்டும் போதாதே!

வீட்டா ப்ரஷ் ஒவ்வொன்றும் விஞ்ஞான முறைச் சோதனைகளுக்கு உட்பட்டு 23 ஆண்டுகள் புகழ்வாய்ந்து நிற்கும் வீட்டாட்ரான் குச்சங்கள் கொண்டது. வீட்டா ப்ரஷ்கள் கவர்ச்சியான பல வண்ணங்களில் கிடைக்கின்றன.

அடுத்த முறை நீங்கள் டூத்ப்ரஷ் வாங்கும்போது, உங்கள் தேவைக்கேற்பத் தயாரான வீட்டாவையே கேட்டு வாங்குங்கள்!



தேவைக்கேற்றபடி
வகைவகையான ப்ரஷ்கள்

Vita®
டூத்ப்ரஷ்கள்


வீட்டா ப்ரஷ் கம்பெனி
பம்பாய்–400 001

AIYARS-VT. 2 REV. TH

க்ளாக்ஸோ பேபி பவுடர்
அன்னையின் அன்பென அணைக்கும் அதிமென்மை



க்ளாக்ஸோ மற்றும் 'பாப்பாவுக்குப் பயனுகும்' படைப்புகளின் நம்பகமான பாரம்பரியத்தில் இன்னென்று...



மென்மையின் உருவம்! ஏனெனில் உங்கள் பாப்பாவும் மென்மையானது தானே! அது அதிசன்னமாகத் தயாரிக்கப்பட்டிருப்பதால், சீராட்டிய பின்னரும், இடுப்புத் துணியை மாற்றிய பின்னரும் உங்கள் பாப்பாவின் பட்டு மேனியில் மென்மையைப் பொழிகின்றது. உங்கள் நம்பிக்கைக்குகந்த அதே க்ளாக்ஸோவின் தயாரிப்பு.

100 கிராம் மற்றும் 400 கிராம் டின்களில் கிடைக்கிறது.

பெற்ற மனமறியும்—பிள்ளைக் கனியமுதுக்குப் பேராதரவு—க்ளாக்ஸோ

க்ளாக்ஸோ

CMGBT-4-203 TM

பொருளடக்கம்

ஆனந்த, சித்திரை 1 — ஏப்ரல் 14, 1974



மேலட்டை: பாவையின் பலநிற எழிலைக் கோலம்,
புத்தாண்டின் பொலிவுக்கு நல்வரவு கூறும்!
வண்ணப்படம்: நரசிங்கம்

கல்கியில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நீங்கள் எம்பிராய்டரியினால் அனேகமாக எதையுமே அழகு மிளிரச்செய்யலாம்.

கோட்ஸ் ஆங்கர் நூல்கள் உங்கள் எம்பிராய்டரியை பல வருடங்கள் பளிச்சென்றும் புதுமையுடனும் வைத்திருக்கும்!





மிகச் சிறந்த பருத்தியிலிருந்தே பெறக்கூடிய உறுதியும், பளபளப்பும் கொண்ட கோட்ஸ் ஆங்கர் எம்பிராய்டரி நூல்கள் மிகச் சிறந்த பயன்களைத் தருகின்றன. பல சலவைகளுக்குப் பிறகும் பளபளப்பும், பொலிவும் குன்றாத வகையில் கெட்டிச் சாயம் தோய்த்த அழகழகான பற்பல வகைகளிலிருந்து எவற்றையும் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். கோட்ஸ் ஆங்கர் பலபயனுள்ளது. கை மற்றும் மெஷின் எம்பிராய்டரிக்கென தனித் தனியான விசேஷமான பற்பல வகை நூல்கள் உள்ளன. கோட்ஸ் ஆங்கர் பிரசுரங்களில் ஏராளமான பல டிசைன்கள் உள்ளன! நீங்களாகவே எம்பிராய்டரி செய்து



கொண்டாலும், எம்பிராய்டரி செய்த துணிகளை வாங்குவதானாலும் கோட்ஸ் ஆங்கர் நூல்களே வேண்டுமென்று கேளுங்கள்.

ஆங்கர்

எம்பிராய்டரி நூல்கள்

கோட்ஸ்

சிறந்த நூல்களைத் தயாரிப்பவர்கள்

Grant.22.TH

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா --பாரதியார்

மலர் 33 :: இதழ் 37

ரயில்கள் ஓடட்டும்; சுபிட்சம் ஓங்கட்டும்!

ரயில்வே ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் ஏப்ரல் 10ந் தேதிக்குப்பின் பொது வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

சம்பளக் கமிஷன் நியமிக்கப்படுவதற்குமுன், ரயில்வே ஊழியர்களின் சம்பள விகிதங்கள் இதர மத்திய அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்குக் குறைவாகவே இருந்தன. ஆகையால் தங்களுடைய சம்பளம், பஞ்சப்படி போன்ற எல்லா அம்சங்களையும் சம்பளக் கமிஷனே தீர்மானம் செய்து, மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போலவே தங்களுக்கும் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். இது செய்யப்பட்டுவிட்டது.

இப்போது இது அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. சம்பளக்கமிஷன் சிபாரிசுகள் தங்களைப் பொறுத்தவரையில் கைவிடப்பட வேண்டும் என்றும், சர்க்கார்த் துறைத் தொழிலகங்களில் அமுல் இருக்கும் சம்பள விகிதங்களின்படி தங்களுக்கும் ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ரயில்வே ஊழியர்கள் இப்போது கோருகின்றனர். சர்க்கார்த் துறைத் தொழிலகங்களின் ஊழியர்களுக்கும், ரயில்வே ஊழியர்களுக்கும் ஒவ்வொரு மட்டத்திலும் சமத்துவம் ஏற்படுத்துவது முடியாத காரியம். அப்படி ஏற்படுத்த முயன்றால் இரண்டிலும் எங்கெங்கே உயர்ந்த விகிதங்கள் அமுலில் இருக்கின்றனவோ அவற்றையே ஊர்ஜிதப்படுத்தவேண்டி வரும். அது மற்றொரு கோரிக்கையாக மாறும். இம்மாதிரி கேட்டுக்கொண்டே போனால் முடிவே காண முடியாது.

ரயில்வே ஊழியர்கள்தாம் நாட்டில் அதிக எண்ணிக்கையுள்ள தொழிலாளர் வர்க்கம். இத்தகைய ஒரு பெரிய, சக்தி வாய்ந்த தொழிலாளர் சமூகம் தேசத்தின் முன்னேற்றத்தில் தங்கள் ஆக்க சக்தியையும் கூட்டுச் சக்தியையும் பிரயோகிக்கவேண்டும். அவ்வாறின்றி நாட்டு முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் விதமாகத் தங்கள் பலத்தைப் பிரயோகிக்கலாகாது.

பேச்சுவார்த்தைகள்தாம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள உகந்த ஆயுதம், வேலைநிறுத்தம் அல்ல என்ற நிலைமையிலேயே ரயில்வே ஊழியர்களின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

சமரச முறையில் அமைதியை நிலைநாட்ட முடியவில்லையானால், ரயில்வே ஊழியர்கள் சம்பள விகிதங்களைச் சட்ட மூலம் நிர்ணயித்து விடுவது நல்லது. அந்நிலையில் எந்த மாறுதலாவது தேவைப்பட்டால், சட்ட மூலமேதான் செய்ய வேண்டியிருக்கும். பார்லிமெண்டின் பொறுப்புக்குள் இவ்விஷயம் வந்துவிடும். இம்முறை நாட்டுக்கும் உகந்தது; நிர்வாகத்தினருக்கும் ஒரு தலைவலி தீர்ந்து போகும்.

ரயில்வே துறையில் பொது வேலைநிறுத்தம் என்றால் தொழில்களுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டங்களைச் சொல்லி மாளாது. வேலைநிறுத்தங்களைத் தாங்கக்கூடிய நிலையில் இன்றைய இந்தியப் பொருளாதாரம் நிச்சயமாக இல்லை.

ரயில்வேத் தொழிலாளர்களை வேலைநிறுத்தத்தில் தூண்டிவிடுவது, ''நாட்டுக்கு எதிராகச் செயல்படும் சதிகாரர்கள் சிலருடைய திட்டமிட்ட நடவடிக்கையாகும்'' என்று பிரதமர் எச்சரிக்கை செய்துள்ளதை முக்கியமாக ரயில்வே ஊழியர்கள் கவனித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு சொல்லும்போது தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நாம் மறுப்பதாக அர்த்தமில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியாயமான கோரிக்கைகள் அமுல் செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதையோ, இவ்விஷயத்தில் அசிரத்தை காட்டப்படுவதையோ வன்மையாகக் கண்டிக்கவே வேண்டும். சமீபத்தில் நியாயமாகத் தரப்பட வேண்டிய அலவன்சு தொகை கொடுக்கப்படாததால் ரயில் பாதை மீது உட்கார்ந்து மறியல் நடத்த வேண்டிய நிலை ரயில்வே ஊழியர்களுக்கு ஏற்பட்டது. இதுபோன்ற நிர்வாகக் குறைபாடுகள் வேகமாக, கட்டாயமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

தனி வன்னிய மாநிலம்

மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பற்றிய கவலையும் வருத்தமும் அடைந்து சிந்திக்கும் மக்கள் இப்போது அதைவிடக் கவலை தரும் மற்றொரு விபரீதக் கோரிக்கையையும் காண நேரிடுகிறது. தமிழ் நாடு உழைப்பாளர் பொதுநலக் கட்சியின் பொதுக் குழுவில், ராமசாமிப் படையாச்சி தலைமையில், ''வன்னியர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களையும் பகுதிகளையும் ஒருங்கிணைத்துத் 'தனி வன்னிய மாநிலம்' அமைக்கச் செயல்படுவது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். காதால் கேட்கவே என்னவோ போல் இருக்கும் இப்படிப்பட்ட சில தீர்மானங்களைச் சிலர் போடும் அளவு நாடு சீரழிந்திருக்கிறதே என்று நினைக்கும்போது தான் வேதனையாயிருக்கிறது. தி.மு.க. மாநில சுயாட்சி என்ற விபரீதத்தை முன் வைத்திருக்கிறது என்றால் ராமசாமிப் படையாச்சி அதைவிடக் கேவலமான நிலைக்குப் போய்விட்டார். ராமசாமிப் படையாச்சி கேட்கும் வன்னிய மாநிலத்துக்குப் பின் தி.மு.க.வுக்கு, மாநில சுயாட்சி கேட்க என்ன மீதமிருக்கிறது என்பது கேள்வி. இவற்றைப் பற்றி அற்பமான நினைவுகள் என்று கூறுவது தவிர என்னென்பது?

இட்டிலியின் உலகப் பெருமை

தமிழகத்தின் இட்டிலியின் பெருமைக்கு உலக உணவு விவசாய நிறுவனத்தின் டைரக்டர் டாக்டர் பி. பி. சுகாத்மே என்பவர் பேசிய சமீபத்துப் பேச்சு ஒன்று சான்றாக அமைகிறது. புனாவில் அவர் பேசும் போது, ''குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சத்துணவில் சிறந்தது இட்டிலிதான். குழந்தைகளுக்கு மிகவும் அதிகமாசத் தேவைப்படுகிற புரதச் சத்து இட்டிலியில்தான் போதுமான அளவு இருக்கிறது'' என்று தெரிவித்திருக்கிறார். இட்டிலியின் பெருமை உயருகிறது.

கார் அவசியமற்றதா ?

தமிழ் நாடு சட்டசபையில் நடைபெற்ற ஒரு விவாதத்தின்போது போக்குவரத்து அமைச்சர் ராமச்சந்திரன், ''கார் வைத்திருப்பது அத்தியாவசியத் தேவை என்பதை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. சென்னை போன்ற நகர்களில் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு கார்கள்தாம். கார்களை இல்லாமல் சென்னையில் சாலைப் போக்குவரத்து எவ்வளவு சீராக இயங்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்'' என்று கூறியிருக்கிறார். சாலைப் போக்குவரத்துக்குத் தனியார் கார்கள்தான் இடையூறு என்பது போல் அமைச்சர் கூறியிருப்பதாகப் படுகிறது. தனியார்களில் பலரைக் கேட்டால் பல்லவன் போக்குவரத்து பஸ்கள்தான், சாலைகளில் பெரிய இடையூறு என்று குற்றம் சாட்டலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி பெருகியிருக்கும் காலத்தில் கார்களை ஓடாத சாலைப் போக்குவரத்து பற்றிய கற்பனையில் அமைச்சர் ஈடுபடுவது விநோதமாக இருக்கிறது. இதைவிட அதிகமான சாலைப் போக்குவரத்து உள்ள மேற்கு நாடுகளில் அவற்றை எப்படி அருமையாகச் சமாளிக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கும்படி அமைச்சரை வேண்டுகிறோம்.

சேவையில் சிறந்தவர்

சென்னை ரோட்டரி சங்கம் ஒவ்வோராண்டும் சமூகத்துக்கு அரிய சேவை செய்யும் ஒருவரைக் கௌரவிக்க விருது சூட்டிப் பாராட்டுவது வழக்கம். இந்த ஆண்டில் அந்த அரும் பெரும் கௌரவத்தைச் சென்னை ரோட்டரி சங்கம் டி. வி. எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலதிபர் டி. எஸ். கிருஷ்ணா அவர்களுக்கு வழங்கியிருக்கிறது.

''இந்திய நாட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேல்நாட்டுத் தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு சிறப்படைந்தவர் என்றும், தொழில் திறன், விவசாயம், தொழிலாளர் நல்லுறவு போன்ற பல துறைகள் மூலம் நாட்டுக்குச் சேவை புரிந்தவர் என்றும், தம்மிடம் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டி வருபவர் என்றும் டி. எஸ். கிருஷ்ணா அவர்கள் இந்த வைபவத்தின்போது பாராட்டப் பட்டிருக்கிறார். பொருத்தமான பாராட்டுக்கள் பொருத்தமான மனிதருக்குத்தான் கிடைத்திருக்கின்றன.

நெசவாளர் தீர்மானம்

மார்ச் மாத இறுதிவாக்கில் சென்னையில் கூடிய தமிழ்நாடு நெசவாளர் சங்கம் சில முக்கிய முடிவுகளைச் செய்திருக்கிறது. அதில் முதலாவது முடிவு, ''கைத்தறி நெசவு சம்பந்தமான தொழில் பிரச்னைகளை ஆராய்ந்த சந்தானம் குழுவினரின் சிபாரிசுகளை (கூலி நிர்ணயம் பற்றிய சிபாரிசு ஒன்று தவிர). அரசாங்கம் உடனே அமுல் நடத்த வேண்டும்'' என்பது. தமிழ்நாடு அரசு நியமித்த 'கைத்தறி நெசவாளர் குறைந்த பட்சக் கூலி நிர்ணயக் கமிட்டி'யின் அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும் என்றும், விலைவாசி உயர்வைச் சமாளிக்கக் கைத்தறி நெசவாளர்களுக்கு 50 சதவிகிதக் கூலி உயர்வு கிடைக்கச் செய்ய அரசாங்கம் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பருத்தி நூலின் விலை விதியோகக் கட்டுப்பாட்டை மத்திய அரசு ரத்துச் செய்த தன் விளைவாக 15 முதல் 40 சதவிகிதம் வரை நூல் விலை கூடியுள்ளதனால் தமிழ்



நகரமாட்டேன்
தேவை ஒரு பி.ஸி.லால்!
5-வது திட்டம் இன்று ஆரம்பம்
நிதி
ஏப்ரல் 1
ஏப்ரல் ‘பூல்’ பண்றீங்க?
மக்கள்
இனி நீங்கள் வழி சொன்னது போதும்!
அரசாங்க உணவு தானிய வியாபாரம்
முதல் மந்திரி
ஆ, பலே!

நாட்டில் உள்ள நெசவாளர்கள் அனைவருக்கும் அரசே தன் பொறுப்பில் நூல், சாயம், மற்றும் ரசாயனப் பண்டங்களை விநியோகிக்க வேண்டும் என்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. ஆதிமுதல் நெசவாளி எனப்படும் திருவள்ளுவரைக் கொண்டாடும் அரசு அவர் வழிமுறையினரையும் கொண்டாடிப் பாதுகாக்கும் என்று நம்புவோமாக. கோரிக்கைகள் நிறைவேறாவிடில் போராட்டம் என்ற பயமுறுத்தலும் இருக்கிறது. அந்தப் பயமுறுத்தலுக்கு இடமே இன்றி அரசு செயற்படுமா?

இளம் தலைமுறைத் தலைவர்

தென் பிராந்திய இந்திய – அமெரிக்க வர்த்தக சங்கத்தின் தலைவராக 1974–75ம் ஆண்டுக்கு ஸ்ரீ டி. டி. வாசு இரண்டாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அவருடைய சீரிய சேவைக்கு வர்த்தகர்கள் அளிக்கும் கௌரவம் ஆகும். ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் புதல்வர் ஸ்ரீ வாசு, தந்தையின் பெயரைத் தாங்கிச் செயலாற்றிக் கொண்டு வரும் பல தொழில் நிறுவனங்களின் நிர்வாக டைரக்டர் என்பதுடன் இதர பல தொழில்களையும் ஆரம்பித்து, ஆடம்பரமின்றி மிகத் திறமையுடன் நடத்திக் கொண்டு வருபவர். இளம் தலைமுறைத் தொழிலதிபர். அமெரிக்க – இந்திய கூட்டுறவையும் நட்பையும் தொழில் துறைப் பகுதியில் விசேஷமாக விரிவடையச் செய்வதில் நாட்டம் கொண்டு இயங்கும் இவ்வர்த்தக சங்கம் சுறுசுறுப்புள்ள ஓர் இளம் தொழில் அதிபரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பது போற்றத்தக்கது.

இன்னும் கள் விற்கிறது

சட்டப்படி தமிழ்நாட்டில் கள்ளுக் கடைகள் மூடப்பட்ட பின்னரும் சில இடங்களில் சட்ட விரோதமாகக் கள் விற்பனை நடப்பதாகப் பத்திரிகைகளில் படிக்கிறோம். அதுவும் சேலம் மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களிலேயே அப்படி நடக்கிறது என் பதை அறியும்போது மிகவும் வருத்தமாயிருக்கிறது. தமிழ் நாட்டில் முதல் முதலாக மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்ட சேலம் மாவட்டத்துக்கா இந்தக் கதி? ஏழை எளியவர்களின் வாழ்வைப் பாழாக்கும் கள் விற்பனைக்கு யார் உடந்தையாக இருந்தாலும் அவர்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். கள்ளுக் கடைகளை மூடிய அரசாங்கம், ''நான் அடிக்கிறாற் போல் அடிக்கிறேன். நீ அழுகிறாற்போல் அழு'' என்பதைப் போல் இதை விட்டுவிடக் கூடாது. சட்டத்தைப் போடுவதை விட முக்கியமானது அதை மீறுபவர்களைத் தண்டிப்பது.


சிறுகதைச் சிந்தனை

தமிழ் வார, மாத இதழ்களில் வரும் சிறுகதைகளைப் படித்து மாதந்தோறும் திறனாய்வு செய்து சிறந்த சிறுகதைக்குப் பாராட்டு இதமும், சன்மானமும் அளித்துக் கௌரவிக்கும் சிறப்புப் பணியைப் புரிந்து வரும் இலக்கியச் சிந்தனைக்கு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. இவ்விதம் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து ஆண்டுதோறும் ஒரு நூலாக வெளியிட்டு வருகின்றனர். தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று (14–4–74) இலக்கியச் சிந்தனைக்கு நான்காவது ஆண்டு விழா. 1973ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை மதிப்பிடுபவர் திரு இந்திரா பார்த்தசாரதி. விழாத் தலைவர், நீதிபதி கே. எஸ். வேங்கடராமன். சிறப்புரை வழங்குபவர் கவிஞர் மா. கண்ணப்பன்.

தமிழ் எழுத்தில் ஆர்வமுள்ளவர்கள், சென்னை ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் கூடி ஊக்கம் பெறலாம்.

ராஜாஜி சிந்தனை

எந்த ஸ்தாபனமும் எந்த ஒரு நடைமுறையும் நாளாவட்டத்தில் சில சுயநலக்காரர்கள் கையில் சிக்கி அவர்களுடைய சுயநலத்துக்குக் கருவிகளாகிவிடும். அப்படியே மத ஸ்தாபனங்களும் மதங்களும் கூடக் கெட்டிருப்பது உண்மை. ஆனால் பின்னால் நடைபெறும் சீர்கேட்டைப் பார்த்துவிட்டு, அந்த ஸ்தாபனத்தையோ அல்லது நடைமுறையையோ ஆரம்பித்து வைத்த மகான்களை அவமதிக்கலாகாது. அது ஆராய்ச்சி முறையாகாது. சாக்கடையைப் பார்த்து மேகத்தில் அழுக்கிருக்கிறது என்று எண்ணலாமா? மேகத்தையும், மழையையும் எவ்வளவு கௌரவமாக நோக்க வேண்டுமோ, அவ்விதமே ஆதி ரிஷிகளையும் அவர்கள் இயற்றிய தரும நூல்களையும் கௌரவித்துப் படிக்க வேண்டும். திருடனைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டில் சோதனை செய்ய நுழையும் போலீஸ்காரருடைய மனோபாவத்துடன் கீதையையும் பிற மதத்தார்கள் கௌரவிக்கும் மார்க்க தரிசன நூல்களையும் படிப்பதில் பயனில்லை. மார்க்க நூல்களைப் படிக்கும்போது தகப்பனிடம் மகன் நெருங்குவது போல் பக்தியும் அன்பும் கொண்டு நெருங்க வேண்டும்.





DC.G.49 TM

கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி—கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

பூரண பல் பாதுகாப்பிற்கு
கால்கேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைய—15 ரகங்கள்.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்திசஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் II

ஊர்	தேதி	நேரம்		தங்கும் இடம்
கோவில்பட்டி	12	காலை	10-00 -- 11-00	மணி அண்டு கோ., மெயின் ரோடு.
திருநெல்வேலி ஜங்க்ஷன்	12	மாலை	3-00 -- 6-00	பாம்பே துணி லாட்ஜிங் தரவுஸ், மெயின் ரோடு
அம்பாசமுத்திரம்	13	காலை	9-00 -- 10-00	Dr. மகாதேவ அய்யர் வீடு, கீழ ரத வீதி.
தென்காசி	13	மாலை	3-00 -- 5-00	ஷண்முகம் மெடிகல் ஸ்டோர்ஸ், வடக்கு ரத வீதி.
ராஜபாளையம்	14	காலை	10-00 -- 11-00	ஸ்ரீ R. A. முத்துசாமி பிள்ளை மெடிகல் ஸ்டோர்ஸ், பாங்கு ரோடு.
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை	11-30 -- 12-30	ஸ்ரீ A. L. நாராயணய்யர், ஜவுளிக்கடை, கந்தாடைத் தெரு.
பெரியகுளம்	14	மாலை	5-00 -- 6-30	யுனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திண்டுக்கல்	15	காலை	8-00 -- 9-30	K. M. மெடிகல் ஸ்டோர்ஸ், அம்மன் சன்னதி தெரு.
நாமக்கல்	15	மாலை	3-30 -- 4-30	கஸ்தூரிபா மெடிகல் ஸ்டோர்ஸ், பரமத்தி ரோடு.
ராசிபுரம்	15	மாலை	5-30 -- 6-30	ராசிபுரம் மெடிகல் ஸப்ளைஸ்.
சேலம்	16	காலை	9-11	லக்ஷ்மி ராஜ்பவன், (டவுன் ஸ்டேஷன் எதிர்புறம்)
,,	16	மாலை	3 - 5	
,, செவ். பேட்டை.	16	மாலை	1-30 -- 2-30	பிரபாத் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
தர்மபுரி	17	காலை	10-30 -- 12-00	P. S. வெங்கடேஸ்வரய்யர் வீடு, யூனியன் ஆபீஸ் தெரு
கிருஷ்ணகிரி	17	மாலை	4-00 -- 5-00	No. 4, சென்னை ரோடு.
திருப்பத்தூர் N. A.	18	காலை	9-00 -- 10-30	சாரதா மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
வேலூர் N. A.	18	மாலை	4-00 -- 5-00	A. S. A. அண்டு கோ., லாங் பஜார்.
பெரிய காஞ்சிபுரம்	19	காலை	9-00 -- 10-00	H. மாதவன் அண்டு கோ., ராஜ வீதி.
சென்னை	19	மாலை	3-30 -- 5-00	SP. S. S. கெமிஸ்ட்ஸ், பாண்டிபஜார், தி. நகர்.
சென்னை	20	காலை	9-00 -- 11-00	P. L. R. அண்டு கோ., 68, பெரிய தெரு, திருவல்லிக்கேணி.
சென்னை	20	மாலை	3-00 -- 5-00	P. L. R. அண்டு கோ., தெப்பக்குளம், மைலாப்பூர்.
செங்கற்பட்டு	21	காலை	10-00 -- 11-00	அம்பீஸ் ஸ்டோர்ஸ், பெரிய செட்டித் தெரு.
திண்டிவனம்	21	மாலை	3-00 -- 4-00	ஜெயராம் மெடிகல் ஸ்டோர்ஸ், கடைவீதி (முன்சிப் கோர்ட் எதிர்புறம்)
விழுப்புரம்	21	மாலை	5-00 -- 6-00	பீஜூட்டி நியாக்கோ கம்பெனி, திரு. வி. க. ரோடு.
திருவண்ணாமலை N. A.	22	காலை	8-30 -- 10-00	பாரத் லாட்ஜ், கிழக்கு ரத வீதி.
திருக்கோவிலூர்	22	காலை	11-00 -- 12-00	ஸ்ரீ கிருஷ்ண மெடிகல் துணி, சன்னதி தெரு.
கடலூர் N. T.	22	மாலை	4-00 -- 5-30	மணி பார்மஸி, நேபியர் ரோடு, மஞ்சக்குப்பம்.
நெய்வேலி	23	காலை	8-00 -- 11-00	ப்ளாக் 13, வைதிக சமாஜம், தீபசாலை.
சிதம்பரம்	23	மாலை	3-00 -- 4-00	பாரதீய ஆயுர்வேத அமிர்த நிலையம், கமலேஸ்வரன் கோயில் தெரு.
விருத்தாசலம்	23	மாலை	5-00 -- 6-00	K. குப்புசாமி நாயுடு வீடு, கடைவீதி.
கள்ளக்குறிச்சி	24	காலை	8-30 -- 9-30	தி மெடிகல் சப்ளைஸ், கடை வீதி.
ஆத்தூர்	24	காலை	11-00 -- 12-00	வாஸவி மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
துறையூர்	24	மாலை	3-30 -- 5-00	M. V. மளிகை அண்டு ஷாப், கடை வீதி.
பெங்களூர்-3	26	காலை	9-11	14, V. கிராஸ் ரோடு, மல்லேஸ்வரம்.
,,		மாலை	3 - 5	

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 3 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை, B-II, 1வது கிராஸ், தில்லைநகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை,

கரூர் (போன்: 87)
திருச்சி ஜில்லா

அம்பாளை உபாசிப்பதன் பலன்–1

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

அம்பாளை உபாசிப்பதே ஜன்மா எடுத்ததன் பெரிய பலன். அன்பு மயமான அம்பிகையைத் தியானிப்பதைவிடப் பேரானந்தம் எதுவும் இல்லை. பெரிய பெரிய சித்தாந்தங்கள், மதங்கள் எல்லாம் எத்தனையோ இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் முடிவாக, பயனாகக் கிடைக்கிற பெரிய பலன் அம்பாளைத் தியானிப்பதால் லகுவாகக் கிட்டி விடுகிறது. ''அம்மா! நான் எத்தனையோ தோஷம் உள்ளவன். என்றாலும் உன்னை நம்பிவிட்டேன். நீ கடாக்ஷித்துவிட்டால் எத்தனை தோஷமானாலும் தூர ஓடிவிடும். நான் எப்படி இருக்க வேணுமோ அந்த மாதிரியாக இருக்கும்படியாக நீயே பண்ணு'' என்று அவளிடம் நம்மை ஓயாமல் ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்தாலே போதும்— அதைவிடப் பெரிய மதமோ, சித்தாந்தமோ, அநுஷ்டானமோ இல்லை. எல்லாம் அவள் சித்தப்படி 'ஆகட்டும் என்று விட்டுவிட்டு, நாம் பஞ்சு மாதிரி மனசில் எந்த கனமும் இல்லாமல் இலேசாகிவிட்டால் அதைவிடப் பேரானந்தம் இல்லை.

அம்பாளை உபாசிப்பதற்கு வேறு பலன் எதுவும்' வேண்டாம். அதுவே அதற்குப் பலன் — ஆனாலும் இந்த லோகத்தின் மாயையில் நாம் எல்லோரும் நன்றாகச் சிக்கிக் கொண்டிருப்பதால், 'நான்' என்பதைவிட்டு, அவளை அவளுக்காகவே உபாசிக்கிற ஆனந்தம் நமக்கு ஆரம்ப தசையில் புரியமாட்டேன் என்கிறது. நமக்கு என்று எதெதையோ எதிர்பார்த்து அதை எல்லாம் அவள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காக அவளை உபாசிக்கத் தொடங்குகிறோம். இந்த நிலையில் அவளும்கூட நம்மை விட்டுப் பிடிக்கிற மாதிரி, நம் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வைக்கிறாள். தர்மத்துக்கு விரோதமாக இல்லாத வரையில் நாம் செய்கிற பிரார்த்தனைகளுக்குச் செவி சாய்க்கிறாள்.

மநுஷ்ய ஸ்வபாவம் ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். அம்பாள் உபாசனையால் ஜனன நிவிருத்தி கிடைக்கும், மோக்ஷம் கிடைக்கும் என்று சொன்னால் யாரும் அதில் ஈடுபடமாட்டார்கள் என்பது ஆசார்யாளுக்குத் தெரியும். அதனால் அம்பாளை உபாசிப்பதன் பலன் இன்னின்ன என்று 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்கிறபோது முதலில் படிப்பு, செல்வம், அழகு முதலியன கிடைக்கும் என்கிறார்.

'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா' என்று ஆரம்பிக்கிற சுலோகத்தில் அம்பிகையை ஆராதிப்பதால் கிடைக்கிற பலன்களை வரிசையாகச் சொல்கிறோம். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், சாதாரணமாக ஒவ்வொரு ஸ்துதியின் முடிவிலும் கவி, 'இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்வதால் இப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும்' என்று சொல்வது ஒரு மரபு — இதை 'பலச்ருதி' என்பார்கள். ஆனால் துளிக்கூட அகம்பாவமே இல்லாத ஆசார்யாளோ, 'ஸௌந்தரியலஹரி பாராயணத்துக்கு இது பலன்' என்று சொல்லாமல் ''அம்மா, உன்னை பஜிப்பவனுக்கு நீ இப்படியாகப்பட்ட அநுக்கிரகங்களைச் செய்கிறாய்'' என்கிறார்.

முதல் பலனாக ஸரஸ்வதீ கடாக்ஷம் கிடைக்கும் என்கிறார். அதாவது நல்ல கல்வி, உண்மையான கல்வியின் பயனான நல்ல குணம் கிடைக்கும் என்கிறார். பிறகு, லக்ஷ்மீ கடாக்ஷம் கிடைக்கும் என்கிறார். அதாவது நிறைய சம்பத்து கிடைக்கும் என்கிறார்.

பொதுவாக யாரும் பணத்தை விரும்புகிற மாதிரி குணத்தை விரும்பிப் பிரார்த்திப்பதில்லையே. ஆனால் குணம் இல்லாத இடத்தில் பணம் இருந்து பிரயோஜனம் இல்லை. நாம் பணத்தை விரும்பியே உபாசித்தாலும்கூட அம்பாளோ, 'இந்தப் பிள்ளை அசட்டுத்தனமாகப் பிரார்த்தனை பண்ணுகிறது. விவேகம் ஏற்படுகிறதற்கு முன்பு அர்த்தத்தை (பொருளை) பணத்தைக் கொடுத்தால் அது அனர்த்தமே ஆகும். எவ்வளவுக்கெவ்வளவு பணம் தருகிறோமோ அத்தனைக்கத்தனை பாபத்தையே விலை கொடுத்து வாங்கிக் கொள்வான். எனவே பணத்தை எப்படித் தர்ம மார்க்கத்தில் பிரயோஜனப்படுத்துவது என்கிற விவேகத்தை முதலில் தந்து, பிறகு தனத்தைத் தரலாம்' என்று எண்ணுகிறாள். குழந்தை பட்சணம் கேட்டால் அதைச் செய்து கொடுக்கிற தாயார் பிற்பாடு அதனால் கெடுதல் ஏற்படாமல் விளக்கெண்ணெய் தருகிறாள். அம்பாளோ அவளுடைய குழந்தைகள் விரும்புகிற பொருளைக் கொடுப்பதற்கு முன்னாடியே சித்தத்தில் கழிவடைகள் சேராமல் விவேகம் என்கிற விளக்கெண்ணெயைத் தருகிறாள். ஸரஸ்வதி கடாக்ஷத்தைத் தந்து அப்புறம் லக்ஷ்மி கடாக்ஷத்தைத் தருகிறாள். தைத்திரீயோபநிஷத்திலும் இப்படியேதான், முதலில், ''மேதை (நல்ல புத்தி) யைக் கொடு'' என்று சொல்லி, அப்புறம் ''ஸ்ரீயை (செல்வத்தை)க் கொடு'' என்று சொல்லியிருக்கிறது. இதற்கு ஸ்ரீ ஆசாரியாள் பாஷ்யம் செய்யும்போது, ''மேதையில்லாதவனுக்கு ஸ்ரீயைத் தந்தால் அனர்த்தம் உண்டாகும்'' என்கிறார். 'பஜகோவிந்தத்திலும் 'அர்த்தம் அனர்த்தம்' என்கிறார்.

அம்பாளை உபாசிப்பவர்கள் தனியாக லக்ஷ்மி, சரஸ்வதிகளை உபாசிக்க வேண்டியதில்லை. அவர்கள் இரண்டு பேரும் இவளுக்கு இரண்டு பக்கத்திலும் சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. (ஸ சாமர ரமா வாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா). சகல சக்திக்கும் ஆதாரமான பராசக்தியை உபாசித்தால் இவளே சரஸ்வதியையும் லக்ஷ்மியையும் கடாக்ஷிக்கச் செய்கிறாள்.

உங்கள் குடும்பத்தினரின்
உடல்நலம் ஓங்கியிருக்க
அவசியம் அளியுங்கள் மிகச்
சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.

விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

எதற்கெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிஜ சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வனப்மிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.

விவாவையே தேர்ந்தெடுங்கள்.



ASP/JIL-V-IA/73 TAM

இந்தியாவில் தயாரிப்பவர்,
ஜகஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விவா

உற்சாகமான ஆரோக்கிய வளர்ச்சிக்கு தினமும் விவா.



இருபத்தாறும் அத்தியாயம்

இருளில் ஒரு குரல்

க்ஷண நேரம் ஜொலித்து உலகை ஜோதி வெள்ளத்தில் மூழ்குவித்த மின்னலின் ஒளியிலே புத்த பிக்ஷு ஏரிக்கரையில் நின்று கைகளைத் தூக்கிப் பேய்ச் சிரிப்புச் சிரித்த காட்சியைக் கண்டதும் சற்று நேரம் குண்டோதரன் பீதியினால் கைகால்களை அசைக்க முடியாதவனாய் மரத்தோடு மரமாக நின்றான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, சேற்றில் தட்டுத் தடுமாறிக் கரைமேல் நடந்தான். கரையைப் பிளந்து கொண்டு தண்ணீர் ஓடிய இடத்தை நோக்கி உத்தேசமாக அவன் நடந்த போது மறுபடியும் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று வீசியது. அதன் ஒளியில் கரையில் வெட்டப்பட்டிருந்த கால்வாய் முன்னால் பார்த்ததைக் காட்டிலும் அகன்றிருப்பதையும், தண்ணீர் முன்னை விட வேகமாகக் கரையைப் பிளந்து கொண்டு போவதையும் பார்த்தான். புத்த பிக்ஷு நின்ற இடத்தில் அவரைக் காணவில்லை. ஆனால், மண்வெட்டி மட்டும் கிடந்த இடத்திலேயே கிடந்தது.

உடனே, குண்டோதரனுடைய மனத்தில் சிறிது தைரியம் உண்டாயிற்று. கால்வாயை ஒரே தாண்டாகத் தாண்டி



அப்பால் குதித்தான். அக்கரையில் கிடந்த மண்வெட்டியைக் கையினால் தடவி எடுத்துக் கொண்டு அவசரம் அவசரமாக மண்ணைச் சரித்து வாய்க் காலில் தள்ளத் தொடங்கினான். அப் படித் தள்ளிக் கொண்டிருக்கும்போதே, 'ஆஹா! இது வீண் பிரயத்தனம் போலிருக்கிறதே!' என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது.

அதே சமயத்தில் அவன் கழுத் தண்டை ஏதோ ஸ்பரிச உணர்ச்சி ஏற் படவே, சட்டென்று மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் எதிரே கும்மிருட்டில் ஆஜானு பாகுவான ஒரு கரிய உருவம் நின் றது. அது புத்த பிக்ஷுவின் உருவம் தான் என்பதையும் அவர் தம் இரும்புக் கைகளால் தன்னுடைய கழுத்தைப் பிடித்து நெரிக்க முயல்கிறார் என்பதை யும் ஒரு கணத்தில் தெரிந்து கொண் டான். குண்டோதரனுடைய வஜ்ரக் கைகள் புத்த பிக்ஷுவின் கை மணிக்கட்டு களைப் பிடித்துக் கொண்டன.

மறுகணத்தில் குண்டோதர னுடைய தலைக்கு மேலே நாகநந்தி பிக்ஷுவின் பேய்ச் சிரிப்பு மீண்டும் ஒலித்தது.

இடையிடையே வானத்தைக் கிழித் துக் கொண்டு தோன்றி மறைந்த மின் னல் வெளிச்சத்தினால் இன்னும் கன் னங்கரியதாகத் தோன்றிய காரிருளில், விளிம்புவரை தண்ணீர் ததும்பி அலை மோதிக் கொண்டிருந்த ஏரிக்கரையில், கணத்துக்குக் கணம் அகன்று வந்த உடைப்புக்கு அருகில், குள்ள உருவ முடைய குண்டோதரனுக்கும் நெடி துயர்ந்து நின்ற புத்த பிக்ஷுவுக்கு மிடையே பிடிவாதமான மல் யுத்தம் ஆரம்பமாயிற்று.

அந்த விசித்திரமான துவந்த யுத்தம் கால் நாழிகை நேரம் நடந்திருக்கலாம். அப்போது கரையில் மோதிய ஏரி அலைகளின் 'ஓ' என்ற சத்தம், கரை யைப் பிளந்து கொண்டு அப்பால் விழுந்த பிரவாகத்தின் 'ஹோ' என்ற சத்தம், வர வர வலுத்துக் கொண் டிருந்த 'சோ' என்ற மழைச் சத்தம், 'விர்' என்று அடித்த புயற் காற்றில் மரங்கள் பிசாசுகளைப் போல் ஆடிய மர்மச் சத்தம் ஆகிய இந்த நானாவித பேரொலிகளையும் அடக்கிக் கொண்டு ''குண்டோதரா! குண்டோதரா!'' என்ற கம்பீரமான குரல் கேட்டது.

துவந்த யுத்தம் செய்த இருவரும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார்கள். ஆனால் அவர்களுடைய கைப்பிடி மட்டும் நழுவவில்லை.

அது யாருடைய குரல் என்று குண் டோதரன் சிந்தித்தான். அசோகபுரத் திலிருந்து வரும்போது, தனக்குப் பின்னாலும் குதிரையடிச் சத்தம் கேட் டது அவனுக்கு நினைவு வந்தது.

''குண்டோதரா! சண்டையை நிறுத்து! உடைப்பை அடைக்க முய லாதே! வீண் வேலை! ஓடிப் போய் ஆயனரையும் சிவகாமியையும் காப் பாற்று! நான் சொல்வது காதில் விழுகிறதா?''

அந்தக் குரல் தன் எஜமானருக்கும் எஜமானரின் குரல் என்று குண்டோ தரன் அறிந்து கொண்டான்.

''விழுந்தது, பிரபு! ஆக்ஞை!'' என்று கூவினான்.

குண்டோதரன் மறு குரல் கொடுத்தானோ இல்லையோ, இன்னொரு பெரிய மின்னல் — ஆயிரம் சூரிய ஒளியை ஒத்துக் கண்களைக் குருடாக்கிய மின்னல் மின்னியது! அடுத்தாற் போல் ஒரு பேரிடி இடிக்கப் போகிறது என்பதைக் குண்டோதரன் உணர்ந்தான். ''இடி முழக்கம் கேட்ட நாகம்போல்'' என்னும் பழமொழி அச்சமயம் அவனுக்கு ஞாபகம் வந்தது. பிக்ஷுவின் கை மணிக்கட்டுக்களை அவன் இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது போலவே இடி இடித்தது. அண்ட பகிரண்டங்கள் எல்லாம் இடிந்து தடதடவென்று தலையிலே விழுவது போல இடித்தது. இடி இடித்து நின்றதும் குண்டோதரனுடைய காதில் அதற்கு முன்னால் கேட்டுக் கொண்டிருந்த அலைச் சத்தம், மழைச் சத்தம் எல்லாம் ஓய்ந்து, 'ஙொய்' என்ற சத்தம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. 'ஐயோ! காது செவிடாகி விட்டதா, என்ன?' என்று குண்டோதரன் ஒரு கணம் எண்ணமிட்டான். ஆனால், அதே இடிச் சத்தம் காரணமாக நாகநந்தியின் பிடி தளர்ந்திருக்கிறது என்பதை அவன் தேக உணர்ச்சி சொல்லிற்று. அவ்வளவுதான்! தன்னுடைய வஜ்ஜிர சரீரத்தின் முழுப் பலத்தையும் பிரயோகித்துப் பிக்ஷுவை ஒரு தள்ளுத் தள்ளினான்.

ஏரிக் கரையின் அப்புறத்தில் பிக்ஷு உருண்டு உருண்டு போய், கீழே உடைப்புத் தண்ணீர் பிய்த்துக்கொண்டிருந்த பள்ளத்தில் தொப்பென்று விழுந்ததைக் குண்டோதரன் கண்டான்.

உடனே, பெரிய அதிசயம் அவனைப் பற்றிக் கொண்டது. மின்னல் இல்லாதபோது புத்த பிக்ஷு கரையிலிருந்து உருண்டு பள்ளத்திலே விழுந்தது அவனுக்கு எப்படித் தெரிந்தது?

ஆஹா! இதென்ன வெளிச்சம்? குண்டோதரன் சுற்றும் முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில்



ஒரு பனைமரம் உச்சியில் பற்றி எரிவதைக் கண்டான். ஆ! அந்த மரத்தின் மேல் இடி விழுந்து தீப்பிடித்துக் கொண்டிருக்கிறது. வெளிச்சத்துக்குக் காரணம் அதுதான்.

பற்றி எரிந்த பனைமரத்தின் வெளிச்சத்தில் குண்டோதரன் இன்னும் சில காட்சிகளைக் கண்டான். அந்தப் பனைமரத்தைத் தாண்டி ஒரு குதிரை அதிவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அந்தக் குதிரை மேலிருந்தவர் தான் சற்று முன்னால் தனக்குக் குரல் கொடுத்தவர் என்பதை உணர்ந்தான். ஏரியின் ஓரமாக இன்னொரு மரத்தில் நாகநந்தி பிக்ஷு ஏறி வந்த குதிரை கட்டப்பட் டிருப்பதையும் கண்டான். அதற்கு மேல் வேறொன்றையும் பார்க்கக் குண்டோதரன் விரும்பவில்லை.



அந்தக் குதிரை இருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து சென்றான். நடுவில் கால் சறுக்கிக் கீழே விழுந்ததைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை.

மரத்திலிருந்து குதிரையை அவிழ்த்து விட்டு, அதன் மேல் குண்டோதரன் ஏறினானோ இல்லையோ, பனை மரத்து வெளிச்சமும் அணைந்து விட்டது. அது வரையில் சிறு தூறலாக இருந்தது அப்போது பெரு மழையாக மாறியது. எத்தனையோ பெருமழையைக் குண்டோதரன் பார்த்ததுண்டு. ஆனால் அன்றைய இரவு பெய்த மழை மாதிரி அவன் பார்த்ததே யில்லை. வானம் பொத்துக் கொண்டு, அதற்கு மேலே தங்கியிருந்த தண்ணீர் தொட தொட தொடவென்று கொட்டுவது போல் மழை கொட்டியது.

''ஆஹா! ஏரி உடைப்புக்கும் இந்தப் பெரு மழைக்கும் பொருத்தந்தான். நல்ல நாள் பார்த்துத்தான் நாகநந்தி திருப்பாற்கடலை வெட்டி விட்டார்!'' என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

'எப்படியும் இந்த ஏரி வெள்ளம் அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு முன்னால் நாம் போய்ச் சேர வேண்டும்' என்று தீர்மானித்தான்.

ஆனால், அந்தத் தீர்மானத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. அந்த இருளிலும் மழையிலும் குண்டோதரன் வழி கண்டுபிடித்துக் குதிரையை நடத்திக் கொண்டு அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு வெகு நேரம் முன்னாலேயே ஏரிக்கரை நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் உடைத்துக் கொண்டு வெள்ளம் பிரளயமாக ஓடத் தொடங்கி அசோக புரத்தையும் அடைந்து விட்டது.

இருபத்தேழாம் அத்தியாயம்

"மாமல்லர் எங்கே?"

குண்டோதரனுக்கு எச்சரிக்கை செய்து விட்டுக் குதிரை மேல் விரைந்து சென்ற மனிதர் யார் என்பதை நேயர்கள் ஊகித்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள். சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலான லலித கலைகளில் வல்லவரா யிருந்தது போலவே யுத்த தந்திரக் கலையிலும் தேர்ச்சி பெற்றவரும், மாறுவேடம் பூணுவதில் நிகரற்ற சாமர்த்தியம் வாய்ந்தவரும், வாதாபியின் சமுத்திரம் போன்ற சைனியத்தை வடபெண்ணைக் கரையில் எட்டு மாதங்கள் நிறுத்தி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி தான்.

காஞ்சிக் கோட்டையி லிருந்து வட திசையை நோக்கிக் கிளம்பியது முதல் மகேந்திர பல்லவர் கையாண்ட யுத்த தந்திரங்கள் இதைப் போல் பல சரித்திரங்கள் எழுதுவதற்குப் போதுமானவையாகும். நாகநந்தி என்னும் புத்த பிக்ஷுவின் வேஷம் பூண்டிருந்தவர் புலிகேசியின் அந்தரங்க நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒற்றர் என்று அவர் ஊகித்திருந்தார். அதைப் பரஞ்சோதி கொண்டுபோன ஓலையிலிருந்து உறுதிப்படுத்திக் கொண்டார். நாகநந்தியின் கையெழுத்தையும் இலச்சினையையும் மேற்படி ஓலையிலிருந்து தெரிந்து கொண்டது அவருக்குப் பல விதங்களில் உபயோகமாக இருந்தது. அந்த உபயோகங்களில் ஒன்றுதான், பல்லவ ராஜ்யத்தின் எல்லைப்புறத்தில் காத்திருந்த கங்க நாட்டுத் துர்விநீதனை

வளரும் குழந்தைகளுக்கு இனிய போர்ன்விடா!



சக்தி வளரட்டும்! பள்ளியிலும்... விளையாட்டிலும்!

சக்தி வளரட்டும்! பள்ளியிலும் விளையாட்டிலும், இன்றும் என்றுமே வெற்றி அவனுக்கே. ஆம்! அவன் சுவைத்துப் பருகுவது போர்ன்விடா. ஊட்டமளிக்கும் **கோகோ**, பால், மால்ட், சர்க்கரை இவை இனிதே கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கியுள்ளது அவனுடைய ஒளிமிக்க எதிர்காலம்.



காட்பரிஸ்
போர்ன்விடா சக்திக்கும் வளமைக்கும் மற்றும் [illegible]

OBM-0449 TAH

அவசரமாகக் காஞ்சிமாநகரை நோக்கி முன்னேறச் செய்தது.

புலிகேசியின் மாபெரும் சைனியத்துக்குப் பின்வாங்கிக் காஞ்சிக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த மகேந்திர பல்லவர் தாம் கோட்டைக்குள் புகுந்து கொள்வதற்கு முன்னால் ஒரு பெரு வெற்றியடைந்து பல்லவ வீரர்களுக்கும் பல்லவ சாம்ராஜ்யத்துக் குடிமக்களுக்கும் உற்சாகம் ஊட்ட வேண்டுமென்று தீர்மானித்தார். போருக்குத் துடிதுடித்துக்கொண்டிருந்த குமாரச் சக்கரவர்த்தியின் ஆத்திரத்துக்கு ஒரு போக்குக் காட்டவும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சக்கரவர்த்தி பயன்படுத்திக் கொள்ள விரும்பினார்.

எனவே, நாகநந்தி எழுதியதுபோல் துர்விநீதனுக்கு உடனே காஞ்சியை நோக்கி முன்னேறும்படி ஓலை எழுதி அனுப்பினார். அதைப் பார்த்துவிட்டே துர்விநீதன் தன் சிறிய சைனியத்துடன் காஞ்சியை நோக்கி விரைந்து வந்தான்.

குண்டோதரன் கொடுத்த ஓலையைப் படித்ததும் நாகநந்திக்கு ஏற்பட்ட அளவில்லா வியப்பையும் நேயர்கள் கவனித்திருப்பார்கள். அவருடைய ஓலையின்படி முன்னேறி வருவதாகத் துர்விநீதன் அதில் எழுதியிருந்தபடியால், தாம் அத்தகைய ஓலை ஒன்றும் அனுப்பவில்லை, இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்று தீர்மானித்துக் கொண்டு நாகநந்தி குண்டோதரன் கொண்டுவந்த குதிரையில் ஏறிச் சென்று புள்ளலூர்ப் போர்க்களத்தை அடைந்தார். அதற்குள்ளாகக் கங்க நாட்டு சைனியம் தோல்வியடைந்து சேனாவீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்து விட்டார்கள். அந்த நிலைமையில் துர்விநீதனுடைய உயிரைக் காப்பாற்றுவது ஒன்றுதான் தாம் செய்யக்கூடியது என்பதை உணர்ந்த நாகநந்தி, அவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டு தெற்குத் திசையை நோக்கி விரைந்து ஓடினார்.

இந்தப் புள்ளலூர் யுத்தத்தில் மாமல்லரையும் பரஞ்சோதியையுமே முழுதும் நம்பி மகேந்திர பல்லவர் விட்டு விடவில்லை. பொறுக்கி எடுத்த ஆயிரம் குதிரை வீரர்களுடன் புள்ளலூர்ப் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார். எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத சமயத்தில் வந்து தாக்கியபடியால் கங்கர் படை பீதியடைந்து ஓடலாயிற்று. புதிதாக வந்த குதிரைப் படைத் தலைவன் வஜ்ரபாகுவை மாமல்லர் சந்தித்தபோது, அந்த வீரன் தான் தம் தந்தை என்று அறிந்தார். அதனால் அவருடைய ஆத்திரம் அதிகமாயிற்று. இந்த ஒரு போரிலாவது தம்மை முழுதும் நம்பி விட்டு விடக் கூடாதா என்று தந்தையிடம் சண்டை பிடித்த பிறகு, சிதறி ஓடும் கங்கர் படையைத் துரத்திச் சென்று நிர்மூலமாக்க அனுமதி கேட்டார். ஒரு நிபந்தனையுடன் சக்கரவர்த்தி அதற்கு அனுமதி கொடுத்தார். அந்த நிபந்தனை என்னவென்றால், 'தென்பெண்ணை நதி வரையில் எதிரிகளைத் துரத்திச் செல்லலாம். நதியைக் கடந்து அப்பால் போகக் கூடாது' என்பது தான்.

எதிரிகளைத் துரத்திச் செல்லும்படி மாமல்லரைத் தென் திசைக்கு அனுப்பி விட்டு மகேந்திரர் திரும்பிப் போய்விடவில்லை என்பதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். நாகநந்தியின் கொடூரச் சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்குக் கள்ளங்



கபடற்ற இளம் பிள்ளையான மாமல்லரையே நம்பி விட்டுவிட முடியுமா?

குண்டோதரனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுக் கிளம்பிய மகேந்திர பல்லவர் இருட்டையும், புயலையும் பெரு மழையையும் பொருட்படுத்தாமல் தென் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார். உதயமாவதற்கு ஒரு ஜாமம் இருக்கும்போது, தென்பெண்ணை நதிக் கரையை அடைந்தார். அப்போது மழையின் வேகம் குறைந்து வானத்தில் மேகங்கள் கலைந்து நட்சத்திரங்கள் கூடத் தெரிந்தன. அந்த இலேசான வெளிச்சத்தில் நதியும் நதிக் கரையும் அப்போது அளித்த காட்சியை வர்ணிப்பது இயலாத காரியம். நதியின் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு 'ஹோ' என்ற இரைச்சலுடன் நொங்கும் நுரையுமாகப் பிரவாகம் போய்க் கொண்

டிருந்தது. நேற்று அல்லது முந்தைய தினமாயிருந்தால் அத்தகைய பெரும் பிரவாகம்கூடச் சற்றுத் தூரத்திலிருந்து பார்வைக்குத் தெரிந்திராது. அடர்ந்த தோப்புக்களினால் அது மறைக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்போது நதிக் கரையில் நெருங்கி வளர்ந்திருந்த ஆலம் விருட்சங்களும் முறிந்து விழுந்து கிடந்தன.

மகேந்திரர் நதிக் கரையை நெருங்கியதும் முறிந்து விழுந்து கிடந்த மரங்களுக்கு மத்தியிலிருந்து குதிரை ஒன்று வெளியே வந்தது. அதன்மேல் இருந்தவன் சத்ருக்னன்.

''பிரபு! இன்றிரவு நான் பட்ட கவலை என்றைக்கும் பட்டதில்லை. தங்களைத் தனியே அனுப்பிய என்னுடைய அறிவீனத்தை நினைத்து நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தப்



புயலிலும் மழையிலும் தாங்கள் எப்படி வழி கண்டுபிடித்து வந்து சேர்ந்தீர்கள்?'' என்றான் சத்ருக்னன்.

''நானும் எத்தனையோ இரவுகளைப் பார்த்திருக்கிறேன், சத்ருக்னா! ஆனால் இன்றைய இரவைப் போன்ற பயங்கரத்தைக் கண்டதில்லை. போகட்டும். நீ இங்கே காத்திருந்ததில் பயன் உண்டா?'' என்று மகேந்திர பல்லவர் கேட்டார்.

''ஆம், பிரபு! இங்கேதான் அவர்கள் நதியைக் கடந்து சென்றார்கள்'' என்றான் சத்ருக்னன்.

''துர்விநீதன் இருந்தானா? பார்த்தாயா?''

''வெகு சமீபத்தில் நின்று பார்த்தேன். துர்விநீதன் யானைமீதிருந்தான். மற்றவர்கள் ஏழெட்டுப் படகுகளில் சென்றார்கள். அப்போது புயல் ஆரம்பிக்கவில்லை. கிட்டத் தட்ட அவர்கள் அக்கரையை அடைந்த போதுதான் காற்று ஆரம்பித்தது. கரை ஓரம் போய்விட்டபடியால் தட்டுத் தடுமாறிக் கரையேறி விட்டார்கள். அப்போது நதியில் பிரவாகமும் இவ்வளவு இல்லை.''

''நீ சொன்ன இடத்துக்குத்தான் அவர்கள் போயிருக்க வேண்டும். பின்னால் படகு ஒன்றும் விட்டுப் போகவில்லையா?''

''ஒரு படகை விட்டுப் போனார்கள். அதை நீங்களும் நானும் எடுத்துக் கொண்டு போய் பிக்ஷுவைத் திண்டாடச் செய்யலாமென்று நினைத்தேன். ஆனால், புயல் நம்மையும் திண்டாட விட்டுப் படகை அடித்துக் கொண்டு போய்விட்டது!''

''நல்லதாய்ப் போயிற்று, சத்ருக்னா! துர்விநீதனைத் தொடர இப்போது அவகாசமில்லை. அதைவிட முக்கியமான வேலை இருக்கிறது. மாமல்லனும் பரஞ்சோதியும் எங்கே இறங்கி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டாயல்லவா?''

''இந்த நதிக்கரையில்தான் கிழக்கே அரைக் காத தூரத்தில் இருக்கிறார்கள். ஆ! இந்தப் பெரும் புயலில் அவர்கள் என்ன பாடு பட்டார்களோ தெரியவில்லை!''

''உடனே அவர்கள் இருக்குமிடம் போக வேண்டும். பொழுது விடிவதற்குள், அவர்கள் தென் பெண்ணையைக் கடந்து விட வேண்டும். உன் குதிரையின் உடம்பில் சக்தி இன்னும் இருக்கிறதா, சத்ருக்னா? என் குதிரை ரொம்பவும் தளர்ந்து விட்டது.''

''என் குதிரை இன்னும் போகும், பிரபு! இதன் மேல் ஏறிப் போங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்.''

''இல்லை. இரண்டுபேருந்தான் போக வேண்டும்....''

''பிக்ஷு இங்கு வந்தால்...?''

''பிக்ஷு இங்கு வரமாட்டார், சத்ருக்னா! நிச்சயமாக இன்னும் சில நாளைக்கு வரமாட்டார்.''

''ஏன் பிரபு?''

''உன் சீடன் குண்டோதரன் அவரைத் தூக்கித் திருப்பாற்கடல் உடைப்பிலே போட்டு விட்டான்!''

''என்ன, என்ன?''

''அதோ அந்தச் சத்தம் உன் காதில் விழுகிறதா, சத்ருக்னா?''

சத்ருக்னன் உற்றுக் கேட்டு விட்டு ''ஆம், பிரபு! சமுத்திர கோஷம்மாதிரி இருக்கிறது! மறுபடியும் மழையா?'' என்றான்.

''மழைச் சத்தம் அப்படி இராது. திருப்பாற்கடல் உடைத்துக்கொண்டு விட்டது. நாளைப் பொழுது போவதற்குள் வராக நதியிலிருந்து தென்

பெண்ணை வரையில் ஒரே பிரளயந் தான்!''

''ஐயையோ! மாமல்லர்...?'' என்று அலறினன் சத்ருக்னன்.

''வா! போகலாம்! மாமல்லனையும் பரஞ்சோதியையும் எச்சரித்துக் காப் பாற்றலாம்!'' என்ருர் மகேந்திரர்.

''சுவாமி, குண்டோதரன்?''

''குண்டோதரன் திருப்பாற் கடல் உடைப்பை அடைக்க முயற்சி செய் தான். 'அது முடியாத காரியம்; ஓடிப் போய் ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்று' என்று எச்சரிக்கை செய்து விட்டு வந்தேன். என்ன செய்தானே?''

''ஆஹா! அவர்கள் வேறு அகப்பட் டுக்கொண்டார்களா? இன்றைக்கு உண் மையிலேயே மிகப் பயங்கரமான இரவுதான்!'' என்று சத்ருக்னன் கூறிக் குதிரையைப் போகும்படி முடுக்கினன்.

''இந்தப் பயங்கரமான இரவினு லும் ஒரு பயன் கிடைத்தது. சத்ருக்னு! புலிகேசியை வெல்வதற்கு இன்னேர் ஆயுதத்தைக் கண்டுபிடித்தேன்'' என் ருர் சக்கரவர்த்தி.

''பிரபு! தாங்கள் உண்மையிலேயே விசித்திர சித்தர்தான்!'' என்று சத்ருக் னன் வியப்புடன் கூறினன்.

இரு குதிரைகளும் நதிக் கரையோர மாகக் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றன. வழியெல்லாம் முறிந்து கிடந்த மரங்களைத் தாண்டிப் போவ தில் அவர்களுக்கு எவ்வளவோ சிரமம் ஏற்பட்டது. எனினும், பொழுது புலரும் சமயத்தில் அவர்கள் பல்லவ சைனியத்தின் பாசறையை வந்தடைந் தார்கள். அல்லோலகல்லோலமாய்க் கிடந்த அந்தப் பாசறையில் நுழைந் ததும், பல்லவ வீரர்களுக்கெல்லாம் வந்திருப்பவர் மகேந்திர சக்கரவர்த்தி என்பது தெரிந்து விடவே, பலமான ஜயகோஷம் எழுந்தது.

மகேந்திரர், தளபதி பரஞ்சோதி யைப் பார்த்தவுடனே அவருக்குப் பேச இடங்கொடாமல், ''தளபதி! உடனே புறப்பட வேண்டும். இன்னும் ஒரு நாழிகைக்குள் தென் பெண்ணையைக் கடந்து அக்கரை போக வேண்டும். நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தட்டும், நீந் தத் தெரியாதவர்கள் மரம் மட்டை எதையாவது பிடித்துக் கொள்ளட்டும்! குதிரைகள், யானைகள் எல்லாவற்றை யும் ஆற்றில் அடித்து விடுங்கள். ஆயு தங்கள், சாமக்ரியைகள் எது போனுலும் போகட்டும்; மனிதர்கள் பிழைத்தால் போதும்!'' என்ருர்.

இந்த விசித்திரமான கட்டளையைக் கேட்டுத் திகைத்து நின்ற பரஞ்சோதி யைப் பார்த்து, ''ஓஹோ! காரணம் தெரிய வேண்டுமா? திருப்பாற்கடல் உடைத்துக் கொண்டு விட்டது. அதோ விநாடிக்கு விநாடி அதிகமாகும் கோஷத் தைக் கேளும்; இன்னும் ஒரு ஜாமத் துக்குள் வெள்ளம் இங்கே வந்துவிடும்!'' என்ருர்.

பரஞ்சோதியின் முகத்தில் அப்போது சொல்ல முடியாத பீதி தோன்றியது. ''பிரபு.... பிரபு!....'' என்று மேலே பேச முடியாமல் அவர் தயங்கி நிற் பதைக் கண்டு, ''என்ன விசேஷம், தளபதி? மாமல்லன் எங்கே?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''நேற்று இருட்டிய பிறகு அசோக புரத்துக்குப் புறப்பட்டுப் போனர். பிரபு! அங்கே... அங்கே...'' என்று மேலும் சொல்வதற்குப் பரஞ்சோதி தயங்கினர்.

''தெரிந்து கொண்டேன், தளபதி! அசோகபுரத்திலே ஆயனர் இருக்கிருர்; அந்தச் சிற்பச் சக்கரவர்த்தியைப் பார்ப் பதற்காக இந்தக் குமாரச் சக்கரவர்த்தி புறப்பட்டுப் போனர்! நல்லது, மாமல் லனைக் காப்பாற்றும் பொறுப்பு இனி நமக்கு இல்லை; அது ஏகாம்பரநாத னுடைய பொறுப்பு! இங்குள்ள மற்றப் போர் வீரர்களை நாம் காப்பாற்ற முயல் வோம்!'' என்ருர் மகேந்திரர்.

மாமல்லரைப் பற்றிய அநாவசிய மான கவலை நமது வாசகர்களையும் பிடிக்காமலிருக்கும் பொருட்டு, அச் சமயம் அவர் எங்கே இருந்தார் என் பதைச் சொல்லிவிட விரும்புகிருேம்.

கிழக்கு வெளுத்துப் பொழுது புலரத் தொடங்கியிருந்த அந்த நேரத்தில் அசோகபுரத்துப் புத்த விஹாரத்தின் அருகில் மாமல்லர் ஏறியிருந்த குதிரை யானது பெருகி வந்த எதிர் வெள்ளத் திலே நீந்தித் திணறிக்கொண்டிருந்தது. விஹாரத்தின் மேல் தளத்திலே ஆயனரும், சிவகாமியும், சிவகாமியின் அத்தையும் நின்று ஆவலுடனும் கவலை யுடனும் அவருடைய வருகையை நோக்கிக் கொண்டிருந்தனர். ரதியும் சுகப்பிரம்ம ரிஷியும் கூட அங்கே காணப்பட்டனர்.

அதே சமயத்தில் நீர் சூழ்ந்த புத்த விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் குண்டோதரன் வந்து கொண்டிருந்தான்.

வீதியிலும் மற்றும் சுற்றுப்புறமெங் கும் வெள்ளம் சுழித்துக் கொம்மாளமிட்டு அதிவேகமாக ஓடிக்கொண்டிருந் ததுடன் கணத்துக்குக் கணம் பெருகிக் கொண்டுமிருந்தது. (தொடரும்)

பினகா ஃப்ளோரைட்* பற்பசை வலிதரும் சொத்தையையும் பற்சிதைவையும் தடுக்கிறது

ஆகவே நீங்கள் அதை உபயோகிக்க வேண்டும்

பல் வைத்தியர்களும் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதை சிபார்சிதம் செய்கின்றனர்

*"பற்சிதைவைக் காப்பதில் பெரும்பகுதி ஃப்ளோரைட் என்று நமக்கு இப்பொழுது தெரியும். பல் ஆரோக்கிய துறையில் விஞ்ஞான ஆராய்ச்சி தந்த ஒரு பெரும் சாதனை ஃப்ளோரைட்"—

"தி ஜெர்னல் ஆஃப் மெடிகல் வியூஸ் (தி மெடிஷன் & சர்ஜன் VIII 252-57 பிப். 1967)".


பினகா ஃப்ளோரைடினால் பல்துலக்குங்கள் பற்களை உறுதியாக வைத்திருங்கள்



பினகா டூத் பிரஷ்களிலுள்ள மழுக்கப்பட்ட முனைகள் ஈறுகளுக்கு ஊறு செய்யாது

CIBA

ULKA-CF-33 TM



திருடர்கள் பலவிதம்!

போலீஸ் கமிஷனர் காரியாலயத்தில் ஏராளமான நகைகளும், எவர்சில்வர் பாத்திரங்களும், புடவைகளும், மின்சார விசிறிகளும், செப்புக் கம்பிச் சுருள்களும் பழங்கால விக்கிரகங்களும், காமிராக்களும், பெட்ரோல் பிடிக்கும் 'கான்களும்', மோட்டார் டயர்களும் மிக அழகாக நவராத்திரி கொலுவுக்கு அடுக்கி வைப்பது போல் நேர்த்தியாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன! அவ்வளவும் களவு போய்க் கைப்பற்றப்பட்ட சாமான்கள்!

ஒரு போலீஸ் உயர்தர அதிகாரி, 'இவை எப்படிக் களவாடப் பட்டன? இவற்றின் மதிப்பு என்ன? எப்படித் திருடர்கள் பிடிபட்டார்கள்?' என்பனவற்றை எல்லாம் விளக்கி வந்தார்.

யாரோ ஓர் ஆசாமி ஒரு மார்வாரியிடம் அவ்வப்போது விலை மதிக்கவொண்ணாத நகைகளை மிக மலிவான விலைக்கு விற்று வந்தானும்! மார்வாரி ஒரு மாதின் மூலம் அந்நகைகளை மார்க்கெட் விலையை விடச் சற்றுக் குறைவான விலையில் பல வீடுகளில் உள்ள பேர்களிடமும், காரியாலயங்களுக்குச் சென்று, அங்கு பணியாற்றும் பெண்களிடமும் விற்று வந்திருக்கிறான். 'இப்படி விற்கப்பட்ட நகைகள் யாவும் எங்கெங்கோ களவாடப்பட்ட நகைகள். போலீஸார் மார்வாரியையும் அம் மாதையும் கண்டுபிடித்து விட்டார்கள். இப்படிக் கைப்பற்றப்பட்ட நகைகள் அங்கு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மதிப்பு 50,000 ரூபாய்!

''ஐந்து ரூபாய் கட்டினால் போதும். ஐம்பது ரூபாய் எவர்சில்வர் பாத்திரம் கிடைக்கும்'' என்று சொன்னால் போதும் நம் பெண்களுக்கு. 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு பணம் கட்டுவார்கள். பெண்களின் இந்தப் பலவீனத்தை உணர்ந்து ஒரு நபர் சீட்டுக் கம்பெனி நடத்தி மூன்று லட்சம் ரூபாய் வரை சுருட்டிக் கொண்டு போய்விட்டான். அவனை எப்படியோ கண்டுபிடித்து 65,000 ரூபாய் பெறுமானமுள்ள பாத்திரங்களையும் கொஞ்சம் ரொக்கத்தையும் கைப்பற்றி யிருக்கிறார்கள்.

இப்பொழுதெல்லாம் லாரிகள் மூலமாகப் பொருள்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்கின்றன. இப்படிச் செல்லும் லாரிக்குப் பின்னால் தொற்றிக் கொண்டவன், பொருள்களை வழி நெடுக இறைத்துக் கொண்டே போவான்! அவன் கூட்டாளிகள் பொறுக்கிச் சேகரித்துக் கொள்வார்கள். இப்படித் திருடிய நைலான் ரவிக்கை, புடவை முதலியவை கட்டுக்கட்டாக வைத்திருந்தன.

ஒரே ஆசாமி திருடிய 81 சைக்கிள்கள் அங்கு வைக்கப் பட்டிருந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சோமாஸ்கந்த உருவமும் மற்றொரு சிறு கலைப்படிமமும் இருந்தன. இரண்டுமே நாலு லட்ச ரூபாய் மதிப்பு உடையன!

சென்னைத் துறைமுகத்தில் தும்பா ராக்கெட் கூடத்துக்குப் போவதற்காக ஓர் எலெக்ட்ரானிக் சாதனம் இருந்தது. அதை யாரோ களவாடி மூர் மார்க்கெட்டில் இருபது ரூபாய்க்கு விற்கப் பார்த்திருக்கிறான்! அதன் விலை லட்ச ரூபாய்க்கு மேல்! நல்ல வேளை! நமது போலீஸார் கைப்பற்றி யிருக்கின்றனர்.

இப்படி நமது போலீஸ் இலாகா 'ஜரூ'ராக வேலை செய்வது பற்றி நாம் மகிழலாம் என்றாலும் அவர்களுக்கு அதிகமாக வேலை வைக்காமல் பார்த்துக் கொள்வதே நம் கடமை. திருட்டுப் புத்தியுள்ளவனுக்குச் சபலம் தட்டும் வகையில் நாம் அலட்சியமாய் இராமல் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டால் பல திருட்டுக்கள் நடப்பதைத் தவிர்த்துவிட முடியும். – எஸ். வி. எஸ்.



நெற்றியில் விழுந்து தவழ்ந்து கொண்டிருந்த முன் மயிரைத் திருகிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள் கல்யாணி. அவள் கல்யாணம் நிச்சயமாகி இன்னும் ஒரு மாதத்தில் நடக்க இருந்தது. அதிலிருந்தே இனந்தெரியாத ஒரு வெட்கம் — கூச்சம் அவளை ஆட்கொண்டிருந்தது. ஒரு பெண்கள் பள்ளியில் கல்யாணி உதவித் தலைமை ஆசிரியை. நடக்கவிருந்த தன் திருமணம் பற்றி முதன் முதலில் தலைமை ஆசிரியையிடம் அவள் சொன்னபொழுது அந்த அம்மாள் முகத்தில் தோன்றி மறைந்த பதற்றம் இன்னும் கல்யாணியின் மனக் கண் முன்னால் இருந்தது.

''என்ன கல்யாணி இது! யோசனை செய்துதான் இந்த முடிவுக்கு வந்தாயா?'' என்று அவள் பதறினாள். பிறகு தன்னைச் சுதாரித்துக்கொண்டு, 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்று சொல்லி முறுவலிக்க முயன்றாள். கல்யாணி ஒன்றையுமே கவனித்தாற்போல் காட்டிக் கொள்ளவில்லை. தன் நோட் புத்தகங்களை அள்ளிக் கொண்டு வகுப்புக்குச் சென்றாள். அவள் எதிர்பார்த்தபடி பிற்பகல் 'லஞ்சு இண்டர்வல்'லுக்குள் விஷயம் இதர ஆசிரியைகளுக்கும் பரவியிருந்தது. அவளைப் பார்த்தபொழுது அவர்கள் சிரித்த அசட்டுச் சிரிப்பிலிருந்தும், தோற்றுவித்த குழப்பத்திலிருந்தும் அவளுக்கு அதில் சந்தேகம் இல்லை. அவளுக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதியான, கணக்கு ஆசிரியை கல்பகம் மட்டும் சற்று ஆதங்கத்துடனேயே, ''எனக்குக்கூடச் சொல்லவில்லையே!'' என்றாள் மாலை வீட்டுக்குப் போகும் வழியில்.

இரண்டு நாள் நினைவுகள்

சியாமா

''சொல்லும் நேரம் வரவில்லை. திடீரென்றுதான் நிச்சயமாயிற்று. போன ஞாயிற்றுக்கிழமைதான் பாக்கு, வெற்றிலை மாற்றினோம். நம் தலைமை ஆசிரியைக்குச் சொன்னால், தானாகப் பரவிவிடும் என்று தெரியும். அதனால்தான் முதலில் அவருக்கு விஷயத்தைச் சொன்னேன்'' என்றாள் கல்யாணி.

'இதுபோன்ற கல்யாணங்களுக்கெல்லாம் கூடப் பாக்கு, வெற்றிலை மாற்றல் உண்டா?'' என்று கேட்டாள் கல்பகம்.

அவள் அதை யதார்த்தமாகத்தான் சொன்னாள். குரலிலோ அல்லது பேச்சிலோ நையாண்டி ஒன்றுமில்லை. நாற்பது வயதில் தன் சிநேகிதிக்கு நடக்க விருந்த அந்தக் கல்யாணத்துக்கு ஒரு வேளை அதெல்லாம் தேவையில்லையோ என்றுதான் கல்பகம் உண்மையிலேயே எண்ணினாள். ஆனால், அந்தக் கேள்வி சுருக்கென்று கல்யாணியின் உள்ளத்தில் தைத்தது.

அடுத்த நாளும், அதற்கடுத்த நாட்களும் வகுப்பில் அவள் மாணவிகள் நடந்துகொண்டவிதம் ஒருவேளை தான் மணம் புரிந்துகொள்வதெனச் செய்த முடிவு சரியில்லையோ என்று அவளையே கலங்கச் செய்தது. அவள் வகுப்பில் நுழையும் வரை கசமுசவென்று



பேசிக் கொண்டிருப்பார்கள் மாணவிகள். அவள் நுழைந்ததுமே கப்சிப் என்று அடங்கி அவளைப் பார்ப்பார்கள். அந்தப் பார்வையில் ஏதோ அனுதாபம் இருப்பது போல் கல்யாணிக்குத் தோன்றும். ஒரு நாள் வகுப்பில் ஒரு மாணவியைத் திடீரென்று பாட சம்பந்தமான ஏதோ கேள்வி கேட்டபொழுது அச்சிறுமி, '''அடுத்த மாசம் என்று சொன்னார்கள்!'' என்று உளறினாள். ''நான் என்ன கேட்டேன், நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள் கல்யாணி கோபமாக.

'' உங்கள் கல்யாணம் நடக்கவிருக்கும் நாளைக் கேட்டதாக எண்ணினேன்!'' என்றாள் அம்மாணவி அழுது கொண்டே. அன்று அதற்குப்பின் வகுப்பைக் கலைத்துவிட்டு, கல்யாணி தன் அறைக்குச் சென்றாள்.

வீட்டிலோ கேட்கவே வேண்டாம். அவள் மன்னி, நேரிலும் மறைவிலும் வீட்டுக்கு வருபவர்களிடம், இதுபற்றி ஏளனமாகப் பேசிப் பொழுதைப் போக்கினாள். எத்தனையோ ஆண்டுகளாகக் கல்யாணியின் மூலம் அந்தக் குடும்பத்துக்குக் கிட்டிக் கொண்டிருந்த வருவாய் போய்விடுமே என்று அவள் கவலை.

ஒரு நாள் மாலை கல்யாணி பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய சமயம் பக்கத்து வீட்டுப் பாட்டி தன் மன்னியிடம் பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

''இதைப் போய்ப் பத்திரிகை அடிக்க, நாலு பேருக்கு விளம்பரம் பண்ணாவிட்டால் என்ன? இத்தனை வயதுக்குப்பின் கல்யாணம் தேவையென்றால், ஏதாவது கோவிலில் இரகசியமாகத் தாலி கட்டி அழைச்சின்டு வரப்படாதோ ?'' என்றாள் பாட்டி.

''இந்த வீட்டில் என்னை யார் இலட்சியம் செய்யறா ? எல்லாம் அவளும் அவள் அண்ணாவும் அடிக்கிற கூத்து'' என்று சொல்லி மன்னி பெருமூச்சு விட்டதும், கல்யாணியின் காதில் கேட்டது.



நடக்கவிருந்த கல்யாணத்துக்கு அவளுக்கு இருந்த ஒரே ஆதரவு அவள் அண்ணா மணிதான். அவன்தான் அந்தப் பையனின் மனிதரின் — ஜாதகத்தை வாங்கித் தன் ஸகோதரியின் ஜாதகத்துடன் ஒப்பிட்டு முதலில் அந்த முடிவுக்கு வந்தவன்.

''மிகவும் நல்லவராம், ஈச்வரன். ஒரு பிரபல கம்பெனியில் மாசம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார். இத்தனை நாட்கள் காத்திருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலிதான்'' என்று கல்யாணியிடம் சொன்னான் மணி.

''எனக்கு எதற்கண்ணா இனிமேல் கல்யாணம்?'' என்று கேட்ட கல்யாணி அவனை நோக்கினாள்.

''இல்லை, கல்யாணி! இனிமேலும் நான் இதைச் செய்யத் தவறினால் காலமான நம் தாய் தந்தையர் என்னை மன்னிக்கமாட்டார்கள். செய்ய வேண்டிய காலத்தில் நான் செய்யத் தவறிவிட்டேன். இனியும் இதைத் தள்ளிப் போட்டால், ஏன், கடவுள்கூட என்னை மன்னிக்க மாட்டார்'' என்றான்.

அதற்குப்பின் அவள் பேசவே இல்லை. மணிக்கே அச்சமயம் ஐம்பத்தைந்து வயதாகியிருந்தது. அவர்கள் பெற்றோருக்குப் பிறந்த எழுவரில் அச்சமயம் அவர்கள் இருவருமே எஞ்சியிருந்தார்கள். அண்ணாவுக்குப் பின் தான் எங்கே, எப்படி வாழப் போகிறோம் என்ற எண்ணமே அவளை நிலைகுலையச் செய்யும். அந்தப் பயம்கூட அவள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க ஒரு காரணமாக இருந்தது.

கல்யாணத்துக்குத் தன் சம்மதத்தை அவள் தெரிவித்தபின், மணியை யாராலும் ஒன்றிலும் கட்டுப்படுத்த முடியவில்லை. மண்டபம், நாதஸ்வரம், சமையல், பத்திரிகைகள் இவை ஒவ்வொன்றுமே அவன் ஏற்பாடுதான். ஒன்றையுமே குறைக்கக் கூடாது, எல்லாவற்றையுமே 'ஜாம் ஜாம்' என்று செய்துவிட வேண்டும் என்று நண்பர்களிடமும், உறவினர்களிடமும் அவன் சொன்னது கல்யாணியின் காதில் விழுந்தது.

தான் செய்த ஏதோ தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்பவன்போல் அச்சமயம் மணி காணப்பட்டான்.

கல்யாணத்துக்கு முதல் நாள் இரவு நிச்சயதார்த்தம் முடிந்து மாப்பிள்ளை சம்பந்தப்பட்ட சடங்குகள் பந்தலில் நடந்து கொண்டிருந்தன. கல்யாணியைத் தேடிப் பிடித்து அழைத்து வந்த மணி, ஓர் இருட்டு மூலையில் நின்று ஈசுவரனைக் காட்டி, ''எத்தனை களையாக, கம்பீரமாக இருக்கிறான்! யாராவது அவனுக்கு நாற்பத்தைந்து வயது என்றால் நம்புவார்களா?'' என்றான் பெருமிதத்துடன்.

அவனுடைய அந்த அன்பால் நிலைகுலைந்த கல்யாணி, ''போங்கோ அண்ணா!'' என்று சிணுங்கினாள்.

''நீ என்ன எண்ணுகிறாய் என்று எனக்குத் தெரியும். அவனுக்கு அங்கேயும் இங்கேயுமாகக் கொஞ்சம் தலை நரைத்திருப்பதைக் கண்டுதானே கவலைப்படுகிறாய். முப்பதாவது வயதிலேயே என் தலை நரைத்துப் போனதை மறந்துவிட்டாயா? அதெல்லாம் ஒரு சிலர் உடம்பு வாகு'' என்று வழக்கம் போல் உற்சாகமாகப் பேசினான்.

இரவு பெண்களுடன் கடைசிப் பந்தியில் தான் அவளால் சாப்பிட முடிந்தது. மணி பத்தாகிவிட்டது. யாரோ தூரத்து உறவினர் ஒருவர் தலைமைச் சமையற்காரரோடு பேசிக் கொண்டிருந்தார்.

''காலை ஆறரை மணிக்கெல்லாம் முகூர்த்தம். இட்டிலி காப்பியெல்லாம் அஞ்சு மணிக்கே தயாராகிவிட வேண்டும். நாளைக்கு மாப்பிள்ளை ஆபீஸிலிருந்து முகூர்த்தத்துக்கே நிறைய பேர் வருவார்களாம். அவர்களில் அனேகர் முகூர்த்தம் முடிந்து ஆபீஸ் போகிறவர்களாக இருப்பார்கள். அதனால் சாப்பாட்டு இலையும் ஒன்பது மணிக்குள்போட்டாக வேண்டும்'' என்றார் அந்த உறவினர்.

அவரிடம் தலையை ஆட்டிய அந்தச் சமையற்காரர் கல்யாணி சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்தைத் தாண்டிப் போனபோது, ''இவருக்கு என்ன எண்ணம்? ஏதோ சின்னஞ் சிறுசுகள் கல்யாணம் நடப்பதாக நினைக்கிறாரா என்ன? சஷ்டியப்த பூர்த்தி நடக்க வேண்டிய வயதில் நடக்கிற இந்தக் கல்யாணத்துக்கு இத்தனை ஆர்ப்பாட்டமா?'' என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றார். கல்யாணிக்குப் பூமியே தன் காலிலிருந்து நழுவுவது போன்ற உணர்ச்சி. தனக்குக் கேட்டது பக்கத்தில் இருந்தவர்களுக்கும் கேட்டிருக்குமோ என்று கூனிக் குறுகினாள்.

அடுத்த நாள் காலை, கல்பகம்தான் கல்யாணிக்கு அலங்காரம் செய்வதில் முனைந்திருந்தாள். கல்யாணியின் தலையை வாரும் பொழுது நரையுடன் கலந்திருந்த முன் மயிர் அவள் கண்களில்பட, ''இதை யார் முந்திரிக் கொட்டை மாதிரி முன்னாடி வளரச் சொன்னா? எங்கேயாவது கண் காணாத இடத்தில் வளர்ந்திருக்கக்கூடாது?'' என்று அலுத்துக் கொண்டாள்.

கல்யாணி சிரித்தாள். ''நீ கவலையே பட வேண்டாம். எனக்கு இந்த ஒரே ஒரு நரை முடிதான். அவருக்குப் பாதிக்கு மேல் தலை நரைத்துவிட்டது'' என்றாள்.

''இருந்தாலும்...'' — என்று ஆரம்பித்த கல்பகம், ''நான் வேணா இந்த முடியைக் கத்திரித்துவிடட்டுமா?'' என்றாள்.

''நீதான் கவலைப்படுகிறாய். இன்னும் சில நிமிஷங்களில் அவர் என் கையைப் பிடிக்க இருக்கிறார். அவரிடம் இருந்து எதையுமே நான் மறைக்க விரும்பவில்லை, இந்த நரை முடியைக்கூடத்தான்'' என்றாள் கல்யாணி.

மாலை மாற்றல் முடிந்து ஈசுவரன் முதன் முதலாக அவள் கையைப் பற்றியபோது, ''ஐந்து விரல்களையும் சேர்த்துப் பிடிக்க வேண்டும்'' என்று பக்கத்திலிருந்த புரோகிதர் அவனிடம் கூறினார். அப்போது அருகிலிருந்த ஒரு முதியவர் சிரித்தார். ஏன் அப்படிச் சிரித்தார் என்பது பிறகுதான் கல்யாணிக்குத் தெரிய வந்தது. அப்படிக் கையைப் பிடித்தால்தான் ஆண் பெண் என்ற இரு வகை சந்ததியும் உண்டாகுமாம்!

அப்படி முதன் முதலில் அவன் கையைப் பிடித்தபோது, ''ஏன்! அவர் கை அனலாகச் சுட்டது? ஒரு வேளை அந்த ஆர்ப்பாட்டங்


சிந்தால்
வாக்குறுதி...
*மேனியெழிலுக்கு முழு பராமரிப்பு
*புதுமை குன்றாத நறுமணம்
*துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது.



''ஏன் லேட் என்றால் விதி என்கிறீயே?''
''விதிப்படி வேலை செய்யும் திட்டத்தை என் கணவர் ஆரம்பித்துக் காலை எட்டு மணிக்குத்தான் வேலை அடுப்பைப் பற்ற வைத்தார்! சமைத்துச் சாப்பாடு போட நேரமாகிவிட்டது!''

களைத் தாங்க முடியாமல் அவருக்கு ஜுரம் வந்திருக்குமோ? அப்படியானால் தொடர்ந்து மாலை வரை எப்படித் தாங்கப் போகிறார்? அண்ணாவிடம் சொல்லி யாராவது டாக்டரை அழைத்து வரச் சொன்னால் என்ன?'' என்றெல்லாம் எண்ணி எண்ணிக் கல்யாணி கலங்கினாள். ஓரக் கண்ணால் அனுதாபத்துடன் அவரைப் பார்க்க முயன்றாள்; ஆனால் தன்னை யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற வெட்கம் அவளை அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்துவிட்டது.

கல்யாணம் முடிந்து சாப்பாடெல்லாம் ஆகி, மாலை ரிஸப்ஷனும் வந்தது. அப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கால்கள் கடுக்க நின்று வந்தவர்களை இருவரும் முகம் மலர வரவேற்று வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். கல்யாணியின் சில சக ஆசிரியைகள் அவளை நெருங்கி அவள் கணவரை அறிமுகம் செய்து வைக்கும்படி அவள் காதில் கிசுகிசுத்தபோது, அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது. அவள் படும் பாட்டை உணர்ந்தவன் போல் ஈச்வரனும் அப்பொழுதெல்லாம் அவள் உதவிக்கு வந்து தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டான். ஆனால் அவனும் சங்கோஜிதான். அவனாலும் அதிகமாக ஒன்றும் பேசிவிட முடியவில்லை. அது அவனுக்கு வேடிக்கையாகக்கூட இருந்தது. இப்பொழுதெல்லாம் கழுத்தில் தாலி ஏறியவுடன் ஆயிரம் காலம் பழகியவர்கள் போல் இளவல்கள் பேச ஆரம்பித்து விடுகிறார்களே, நமக்கென்ன வந்தது என்றுதான் அவன் உள்ளூற எண்ணினான். ஆனால் அந்த எண்ணத்தைச் சாதனையாக்க அவனாலும் முடியவில்லை. வயது குறுக்கே நின்றது.

இரவு கைகளைக் கோத்துத் தலைக்குப்பின் வைத்துக் கொண்டு ஈசுவரன் படுக்கையில் படுத்திருந்தான். ஜன்னலருகே கல்யாணி நின்று வானில் பவனி வந்து கொண்டிருந்த சந்திரனை நோக்கிக் கொண்டிருந்தாள். மனம் திறந்து எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று இருவருக்குமே ஆசை. ஆனால் பேசத்தான் முடியவில்லை. கடைசியில் படுக்கையைவிட்டு மெல்ல எழுந்த அவன் ஜன்னலருகே வந்து அவள் பின்புறம் நின்று, ''என்ன யோசனை?'' என்றான்.

''ஒரு யோசனையா, பல யோசனைகள்'' என்று அவள் பெருமூச்செறிந்தாள்.

''ஒன்றைச் சொல்லுங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே அவள் தோளைப் பற்றினான்.

திடுக்கிட்டுத் திரும்பிய அவள் ''இது என்ன சொல்லுங்கள்! எனக்கா இந்த மரியாதையெல்லாம்?'' என்றாள் படபடப்புடன்.

''இது எனக்குப் புதிய அனுபவம்'' என்று அவன் தடுமாறினான். சமாளித்துக் கொண்டு தொடர்ந்து பேசினான்: ''அப்பா இறக்கும்போது எனக்குப் பதினாறு வயதுதான். எஸ்.எஸ்.எல்.சி.தான் படித்து முடித்திருந்தேன். எனக்கு மூன்று தங்கைகள், இரண்டு தம்பிகள். அவர்களையெல்லாம் படிக்க வைத்து வாழ்வளிக்கும் பொறுப்பு என் தலையில் விழுந்தது. பாவம் அம்மா மட்டும் அப்போ இல்லாவிட்டால்.,...''

''அம்மா எப்போ போனார்கள்?''

''நான்கைந்து வருஷங்கள்தான் இருக்கும். அப்பா என் தலையில் சுமத்தியிருந்த பொறுப்பை நான் நன்றாகவே நிறைவேற்றி விட்டேன் என்ற திருப்தியுடன்தான் அம்மா கண்களை மூடினாள். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் சொந்த விஷயங்கள் பற்றி என்னால் சிந்திக்கவே முடியவில்லை!''

''அப்பாவுக்கு நான் நான்காவது பெண்; என் அக்காக்கள் மூவருக்கும் கல்யாணம் செய்வதற்குள் அப்பா நொடித்து உயிரையே விட்டு விட்டார். அண்ணா, நான் இருவருமே வேலை செய்து குடும்பத்தைப் பராமரிக்கும் நெருக்கடி ஏற்பட்டது. இப்பொழுதுகூட அண்ணாவின் முயற்சியில்லாவிட்டால் இந்தக் கல்யாணம் நடந்திராது'' என்றாள். அச்சமயம் அவள் கண்கள் பனித்திருந்ததை நிலா வெளிச்சத்தில் அவன் பார்க்கத் தவறவில்லை.

''ஒரு வேளை நம் கல்யாணத்தை இரண்டாம் பேர் அறியாமல் ஒரு கோயிலில் நடத்தியிருந்தால் பல சிறுமைகளை நாம் தவிர்த்திருக்கலாம்'' என்றான் ஈசுவரன்.

''என் அண்ணா அதற்கு ஒருநாளும் சம்மதித்திருக்கமாட்டார்'' என்றாள் அவள்.

''ஏன் நான்கூட இப்படிச் செய்து கொள்ளத்தான் விரும்பினேன். வயது காரணமாக நேர்முகமாகவும் மறைமுகமாகவும் எத்தனையோ ஏளனத்துக்கு நாம் ஆளாகியிருக்கலாம், உண்மை. ஆனால் அதை மறைக்க, மறக்க எத்தனை உண்மை அன்பர்களின் வாழ்த்துக்களும், அனுதாபங்களும் நேற்றும், இன்றும் நமக்குக் கிட்டின!'' என்றான் ஈசுவரன் உணர்ச்சி வசப்பட்டவனாக.

''எனக்குக்கூட இப்படிப் பண்ணிக் கொண்டதில்தான் திருப்தி. இளம் தம்பதியர் முன் ஓர் எதிர்காலமே இருக்கிறது. ஆனால் நமக்கோ இந்த இரண்டு நாள் நினைவுகள்தானே வாழ்நாள் முழுவதுமே துணை இருக்கப் போகிறது'' என்றபொழுது கல்யாணியின் குரலும் தடுமாறிற்று.

மேலும் அவர்களிடையே குறுக்கிடுவதின் இங்கிதக் குறைவை உணர்ந்தவன் போல் சந்திரனும் அப்பொழுது ஒரு மேகத்துள் நுழைந்து மறைந்தான்.



விண்ணும் மண்ணும்

26. கோபுரம் சாய்ந்தது!

பாரிஸ் என்றதுமே யாருக்கும் நினைவு வருவது நைட் கிளப்புகள்தாம். அதை அடுத்து மிகப் பிரபலமடைந்திருப்பது ஐஃபெல் டவர். மெட்ரோ என வழங்கும் பாதாள ரயிலில் பயணப்பட்டு, ஐஃபெல் டவர் அருகே ஒரு ரயில் நிலையத்தில் இறங்கித் தரை மட்டத்துக்கு மேலேறி வந்தனர் அனுபமா, தனஞ்செயன், மைக்கேல் ஆகிய மூவரும்.

நெடிதுயர்ந்த இரும்புக் கோபுரம் சற்றுத் தூரம் நடந்ததும் புலனாயிற்று. ''1889ஆம் ஆண்டில் அகில உலக ரீதியில் நடைபெற்ற ஒரு மாபெரும் கண்காட்சியினை யொட்டி அமைக்கப்பட்டது இது. தெரியுமில்லையா?'' என்றான் மைக்கேல்.

''முதன் முதலாக ஒரு மோட்டார் கார் கண்காட்சியில் வைக்கப்பட்டதும் அப்போதுதான் என்பதாக எப்போதோ படித்த ஞாபகம்'' என்றான் தனஞ்செயன்.

''ஆமாம்; பென்ஸ் கார்'' என்று ஆமோதித்தான் மைக்கேல்.

ஆயிரம் அடி உயரத்துக்குப் பதினைந்து அடி மட்டுமே குறைவாக இருந்த அந்த அலங்கார ஸ்தூபி, ஒரு சமயம் பார்த்தால் மனிதனின் அகங்காரத்தை அழிப்பது போல் தோன்றியது. இன்



கி.ராஜேந்திரன்

ஒரு முறை ஏறிட்டு நோக்கினால் அவனிடமுள்ள ஆற்றல்களுக்குச் சவால் விட்டுச்செயலூக்கத்துடன்சிலிர்த்தெழச் செய்வது போலும் தென்பட்டது.

உயரே செல்ல அதனுள் லிஃப்ட் இயங்குகிறது என்பதையும் இரண்டு நிலைகளில் நின்று, உல்லாசப் பயணிகள் வெளியேறிச் சுற்றுமுற்றும் பார்க்க வசதி செய்கிறது என்பதையும் தெரிந்து கொண்டதும், ''நாமும் மேலே செல்வோமே?'' என்றாள் அனுபமா.

உலகமெங்கனுமிருந்து உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் நகரமானதால் இங்கேயும் அவர்களுக்கு முன்பாகவே பலர் வந்து லிஃப்ட்டில் ஏற டிக்கெட் பெற்றுக் காத்திருந்தனர்.

''ரொம்பத் தாமதமாகும்போலிருக்கிறதே! அதைவிடப் படியேறியே போய்விடலாம்'' என்றான் தனஞ்செயன்.

''ஐயய்யோ! யாரால் அவ்வளவு உயரம் ஏற முடியும்?'' என்றாள் அனுபமா.

''இதிலென்ன சிரமம்? அதோ அந்த முதல் நிலை தெரிகிறதல்லவா? அங்கே உங்களுக்கு முன்பாகவே நான் படியேறிப் போய்ச் சேர்ந்து விடுகிறேன்; சரிதானா?'' என்றான் தனஞ்செயன்.

''சாத்தியமே இல்லை!'' என்றாள் அனுபமா.

''என்ன பந்தயம்?'' என்று கேட்டான் தனஞ்செயன். பதிலுக்குக் காத்திராமல் அவனே தொடர்ந்தான்: ''ஹைஜாக்கர்களிடமிருந்து தங்களைக் காத்ததற்காக விமானத்திலிருந்த பெண்மணிகள் அனைவரும் நன்றி தெரிவிக்கும் விதமாக என்னை முத்தமிட்ட போது நீ மட்டும் முறைத்துக் கொண்டாய். அப்போது நீ கொடுக்கத் தவறியதை இப்போது தர வேண்டும், நான் ஜெயித்தால்! சரிதானா?''

மைக்கேல் உற்சாகத்துடன் சிரித்தான். அவர்களிடையே இலேசாக எட்டிப் பார்த்த பிணக்குத் தீர்ந்து சுமுக நிலை ஏற்பட இந்த விளையாட்டு உதவும் என எண்ணினான். ''ஒப்புக்கொள் அனு! சவாலை ஏற்றுக்கொள்!'' என்று வற்புறுத்தினான்.

இதற்குள் லிஃப்ட் கீழே இறங்கி வந்து நின்றது. மேலே சென்று திரும்பியவர்கள் வெளியே வரத் தொடங்கினார்கள். அடுத்து உயரே போக விரும்புகிறவர்கள் அதில் நுழைய வேண்டியதுதான். அனுபமா நிச்சயமாகத் தனஞ்செயனை மைக்கேலும் தானும் முந்திக் கொள்ளலாம் என்பதாக நம்பினாள்.

எனவே, ''சரி'' என்று கூறிவிட்டு உடனேயே லிஃப்டை நோக்கி நகர ஆரம்பித்தாள். அந்த வார்த்தை அவள் அதரங்களிலிருந்து உதிர்ந்த ஒரு விநாடிக்குள் தனஞ்செயன் ஐந்து படிகள் ஏறிவிட்டிருந்தான். அதே வேகத்தில் தொடர்ந்து அவன் கால்கள் செயல்பட்டு, அவனை உயரே உயரே அழைத்துச் சென்றன. அனு அவசரப்பட்டாள். ஆனால் அவள் அவசரம் மற்ற உல்லாசப் பயணிகளுக்குத் தெரியவில்லை. அவர்கள் நிதானமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு லிஃப்டில் இடம் பிடித்தனர்.

''நாம் கிளம்புவதற்கே இத்தனை நேரமானால் எப்படி ஜயிக்க முடியும்?'' என்று அனு அலுத்துக் கொண்டாள். மைக்கேலுக்குவேடிக்கையாக இருந்தது. ''கவலைப்படாதே!'' என்றான். ''அவனுடைய ஆரம்ப சூரத்தனம் சற்று நேரத்தில் அடங்கிவிடும். எத்தனை படிகளை அவன் அதே வேகத்தில் ஏறிவிட முடியும்?''

அவள் சிவந்த முகம் மேலும் கன்றிச் சிவந்தது. ''எதற்கு இவ்வளவு பதற்ற



மடைந்திருக்கிறாய் நீ? தோற்றால்தான் என்ன? அவன் கன்னத்தில் ஒரு முத்தம் தரவேண்டும். அவ்வளவுதானே?'' என்றான் மைக்கேல். அவளிடம் ஒருவித நடுக்கம் காணப்பட்டது அவனுக்கு விநோதமாக இருந்தது. ''மழமழவென்று நன்றாக க்ஷவரம் செய்துகொண்டுதான் இருக்கிறான். கவலைப்படாதே!'' என்று கூறிச் சிரித்தான். அனுபமா மைக்கேலின் கையைத் தோளருகே பற்றிக் கொண்டாள், தெம்பு தேடுகிறவளைப் போல.

கதவு மூடிக்கொள்வதற்கு முன்னால் லிஃப்டிலிருந்து ஒரு போக்கிரிச் சிறுவன் வெளியேறிச் சென்று விட்டான்! ''பாபி! பாபி! கம் பேக் ஹியர்!'' என்று அதட்டியபடியே அவன் தாயார் அவனைப் பின்தொடர்ந்து ஓடிப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அதுவரை லிஃப்ட் இயக்குகிறவரும் வேற்று நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு மரியாதை காட்ட வேண்டும் என்ற கடமையை மறவாமல் பொறுமையுடன் இருந்தார். ஆனால் அனுபமா இந்தத் தாமதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவளாகக் காற்றைப் பற்களுக்கிடையில் உறிஞ்சி, காலால் தரையை உதைக்கவும் செய்தாள்.

மைக்கேலுக்கு இது புதிராக இருந்தது. 'இந்த அல்ப விஷயத்தை இவள் இவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? ஏதோ பெரிய சாம்ராஜ்யத்தையே இழந்துவிடப் போகிறவள் போலல்லவா துடிக்கிறாள்!'

ஒருவழியாக லிஃப்ட் கிளம்பி உயரே சென்று முதல் நிலைக்கு வந்து சேர்ந்தது. பயணிகள் ஒவ்வொருவராக வெளியேறினர். முந்திக்கொள்ளப் பார்த்த அனுபமாவைக் கரத்தைப் பற்றித் தடுத்து விட்டான் மைக்கேல், அநாகரிக அவசரம் காட்டுவதை விரும்பாதவனாக. இமே, லிஃப்ட்டில் நுழைய அவள் விரைந்ததன் காரணமாக இப்போது கடைசியாகத்தான் வெளியே வர முடிந்தது.



நிலை வாசலைத் தாண்டி ஓர் அடி அவள் எடுத்து வைத்த மறுகணம் அவளை ஒரு புயல் தாக்கியது! ஒரு சூறாவளி வீசி அவளை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்தது! ஒரு சுழிக் காற்று அவளைச் சுற்றிச் சூழ்ந்து தனது ஆவேச வேகத்தினாலேயே அவளை மூச்சு விட முடியாமல் திணறச் செய்தது!

பெருமூச்சுக்கூட அடங்காத நிலையிலிருந்த போதிலும் தனஞ்செயன் வெற்றி பெற்றுவிட்ட உல்லாச உற்சாகத்துடன் அவள் கரத்தைப் பற்றி இழுத்து, சுற்றிச் சுழல வைத்துப் பின்னர் தன் கரங்களுக்கிடையில் சிறைப்படுத்தினான். பவழத்தின் செம்மையும் பஞ்சின் மென்மையும் கொண்ட அவள் அதரங்களோடு தன் இதழ்களை இணைத்தான்.

''இது நியாயமல்ல, லிஃப்ட் எதிர்பாராத தாமதங்களுக்கு உள்ளாயிற்று'' என்று கூற வாய் திறந்த அனுபமாவுக்கு வார்த்தைகளை உச்சரிக்கவே வாய்ப்பில்லாது போயிற்று!

தனஞ்செயன் ஓர் இளம் காளையின் இயல்பான வேகத்தோடு செயல்படுவதைக் கண்டு இதயபூர்வமாகச் சிரித்தான் மைக்கேல். ஆனால் விரைவிலேயே அந்தச் சிரிப்பு படிப்படியாகக் குறைந்து, தேய்ந்து, ஓய்ந்தது! அவன் முகத்தில் வேதனை படர்ந்தது!

மேல்நாடுகளில் முத்தமிடுவது என்பது சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சி. அதரங்கள் இணைவதில் அந்யோன்ய பாவம் மிகுதி என்றாலும் அதிலும் பிழையொன்றுமில்லை, இது போன்ற வெற்றிக் களிப்பும் கொண்டாட்டச் சூழலும் நிலவி, உணர்ச்சிகள் பொங்குகிற தருணத்தில்.

ஆனால் இப்போது அனுபமாவும் தனஞ்செயனும் நடந்து கொள்கிற விதத்தில் இந்த அம்சங்களைக் காட்டிலும் அதிகமாக இன்னும் ஏதோ இருப்பதாக மைக்கேலுக்குப் பட்டது. யாரும் சட்டென்று தவறாக எடுத்துக் கொள்ள முடியாத இப்படிப்பட்ட ஓர் இயல்பான சந்தர்ப்பத்துக்காகவே நீண்ட காலமாகத் தவம் கிடந்தவன் போலத் தனஞ்செயன் அந்த அந்யோன்யத்தை அளவுக்கு அதிகமாகவே நீடிக்கச் செய்து கொண்டிருந்தான்!

இதோ அனுபமா தன்னை விடுவித்துக் கொள்ள முயலுகிறாள் என்பது உண்மைதான். ஆனால் தன்னை விடுவித்துக் கொள்ளும் முயற்சியை அவள் தொடங்க ஏன் இத்தனை காலதாமதமாயிற்று?

எதிர்பாராத தாக்குதலால் ஏற்பட்ட திகைப்பிலே அவள் செயலற்றுப் போனாளா? அல்லது தனஞ்செயனின் அகன்ற மார்பும் திரண்ட தோள்களும் அவளை வசீகரித்து விட்டிருக்கின்றனவா? அவற்றை அணைக்க இத்தகைய ஓர் இயல்பான வாய்ப்பு அமைய வேண்டும் என்று அவளும் ஆர்வத்துடன் காத்திருந்தாளா? லிஃப்டில் மேலே ஏறி வருகையில் பந்தயத்தில் தோற்கக் கூடாதே என்று அவள் கவலைப்பட்டுத் துடித்தது ஏன்? வெற்றிப் பரிசைத் தனஞ்செயனுக்கு அவள் அளிக்கும்போது அவள் மனம் அவனிடம் ஈர்க்கப்படுவதை மைக்கேல் புரிந்து கொண்டு வேதனைப்படுவானே என்கிற விசாரமா? இந்த முடிவை எதிர்பார்த்தும் அதற்கு ஆசைப்பட்டும் போட்டியில் இறங்கியபின், தன் மீது அன்பையும் காதலையும் சொரிந்து வந்துள்ள மைக்கேலை அருகில் வைத்துக் கொண்டே அந்த முடிவை அணுகுவது அநாகரிகம் என்ற குற்ற உணர்வால் அவள் பீடிக்கப்பட்டு அச்சமடைந்து பதறினாளா? கள்ளம் புகுந்துவிட்ட உள்ளம்தானா அனுபமாவுடையது?

சூறாவளி தாக்கியதற்கும் அதிலிருந்து அனுபமா மீண்டதற்கும் இடைப்பட்ட காலம் அதிகபட்சம் பதினைந்து அல்லது இருபது வினாடிகள் தாம் இருக்கும். ஆனால் மைக்கேலின் மனத்தில் ஏமாற்ற வேதனையைப் பாய்ச்ச அந்த வினாடித் துளிகள் போதுமானவையாய் இருந்தன.

27. வியப்பும் திகைப்பும்!

பிரெஞ்சு தேச மன்னர்கள் மக்களின் துன்பங்களை அலட்சியப்படுத்திய அசடர்களாயிருந்திருக்கலாம். அந்த அகம்பாவமே புரட்சி உருவாகவும் மன்னர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் காரணமாயிருந்திருக்கலாம். ஆனால் அதே அரசர்கள் அபாரமான கலை ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள். அற்புதமான அரண்மனைகளையும் பூங்காக்களையும் சிலா வடிவங்களையும் பொங்கு புனல்களையும் தங்கள் தலைநகரமெங்கணும் உருவாக்க உதவினார்கள். ஓவிய, நடன, நாடக, இசைக் கலைகள் ஈடு இணையற்ற விதமாக வளர்ச்சியுற வசதி செய்தார்கள். பாரிஸ் ஒரு சொப்பனபுரியாயிற்று. உலகில் வேறு எந்த நகரமும் கலைச் செல்வத்தில் இதனுடன் போட்டியிட



பயமுறுத்தும் அஜீரணமா? உடன் நிறுத்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். மீண்டும் முன்போல் சாப்பிடத் தொடங்குங்கள்!

அஜீரணத்தை அசட்டை செய்தால் பசியை மட்டுமின்றி பொறுமையையும் இழந்து விடுகிறீர்கள். சிடுசிடுப்பும், எரிச்சலூட்டும் வலியும் ஏற்படுகின்றன.

ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். வெகுவிரைவில் அது அமிலங்களைச் சமனப்படுத்தி உங்கள் வயிற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது. வலியைப் போக்கி எல்லாவித அஜீரணங்களிலிருந்தும் முழு நிவாரணம் அளிக்கிறது.

வயிற்றுக் கடுப்புக்கு ஓபியம் கலந்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் கேட்டு வாங்குங்கள்.



C. J. ஹ்யூலட் அண்ட் சன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

சென்னை 600002, கல்கத்தா 700001

SAA/C/H/1192





போர்ஹெஹன்ஸால் பல் துலக்கவும் அவளுக்குக் கற்பியுங்கள்.

தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

ஈறுகளை உறுதியுடனும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்க அவற்றைத் தினமும் தவறாமல் தேய்த்துக்கொடுப்பது சிறந்த வழி என்று பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள். அது போலவே, பற்சிதைவைத் தடுக்கும் சிறந்த வழி, இரவிலும் காலையிலும், ஒவ்வொரு முறை உணவருந்திய பின்னும், தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, பற்சிதைவைத் தோற்றுவிக்கும் உணவுத்துகள்களை அகற்றுவது.



உங்கள் குழந்தைக்கு போர்ஹென்ஸ் பழக்கத்தைக் கற்பியுங்கள். அதாவது, பல் வைத்திய ரொருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹென்ஸ் பற்பசை கொண்டு, போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் ஜூனியர் டூத் பிரஷ்ஷால் தவறாமல் பல் துலக்கவும் ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கவும் பழக்கப்படுத்துங்கள்.

போர்ஹென்ஸ் பற்பராமரிப்பு பற்றிக் கற்பிக்க இதுவே தக்க வயது.

போர்ஹெஹன்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை

இலவசம்! "உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம். இப் புத்தகம்* பெற (தபால் செலவுக்காக) 25 பைசா தபால் தலையுடன் இக் கூப்பனை 'மேனர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய்-1" என்னும் முகவரிக்கு அனுப்புக. K-6

பெயர் ____________________ வயது ________

முகவரி ____________________________________

*எந்த மொழியில் வேண்டுமோ, அதன் கீழ் கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, பஞ்சாபி, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

130F-182

முடியாது என்று கருதுமளவுக்கு அங்கே அழகுகள் கொஞ்சின.

இத்தகைய மன்னர்களால் ஆளப்பட்ட பிரெஞ்சு மக்களும் அளப்பரிய கலை மோகம் கொண்டவர்களாக இன்றைக்கும் விளங்குவதில் அதிசயமில்லை. கலை உலகத் தலைநகராக பாரிஸ் தனிச் சிறப்புப்பெற்றிருப்பதிலும் வியப்பில்லை.

இரண்டாம் உலகப் போரின்போது பாரிஸ் நகரின் மீது குண்டுகள் விழுந்து கலைப் பொக்கிஷங்களெல்லாம் சேதமடைந்து விடுமோ என்பதற்காக எதிரியிடம் சுலபமாகச் சரணடைந்து விடவும் தயாராக இருந்தார்கள் பிரெஞ்சு மக்கள்! இதனால் இவர்களைக் கோழைகள் என்று யாருமே தவறாக மதிப்பிட்டுவிடவும் மாட்டார்கள். பாதி உலகத்தைத் தன் பிடியில் சிக்க வைத்த நெப்போலியனுக்குத் தோள் கொடுத்த பிரெஞ்சு மக்களா கோழைகள்? ஜெயலட்சுமியைக் காக்க முடியாது என்று தீர்மானமாகத் தெரியும்போது, கலைத் தேவியையாவது காப்போம் என்ற நோக்கில் இரண்டாவது உலக யுத்தத்தின்போது முதலில் செயல்பட்டவர்கள், பின்னால் இதர நேச நாடுகளின் படைகளோடு சேர்ந்துகொண்டு ஜெர்மானியரைநேரடியாகப் பல போர்முனைகளில் தாக்கியதுடன், தாய்நாட்டின் பல பகுதிகளில் பதுங்கிப் பாய்ந்து கொரில்லாப் போர் புரிந்தும் விடுதலைப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்கள். நேச நாடுகளின் துருப்புக்கள் ஜெர்மானியரைப் பிரான்ஸிலிருந்து பின்வாங்கச் செய்து முன்னேறி வரும்போதே பாரிஸில் தலைமறைவாயிருந்து சண்டையிட்ட பிரெஞ்சுக் கொரில்லா வீரர்கள் தலைநகரை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து விட்டனர்!

இவ்விதமாக அஞ்சா நெஞ்சமும் கலை உள்ளமும் பெற்று அவை ஒன்றுக்கொன்று அனுசரணையாக இயங்குமாறும் பார்த்துக் கொண்ட பிரெஞ்சு மக்களின் பெருமிதத்துக்குரிய நகரிலே, மையமான ஒரு சதுக்கத்துக்கு அவர்கள் —அனுபமாவும், மைக்கேலும், தனஞ்செயனும், சாதாரண உடையில் அவர்களைப் பின்தொடர்ந்த பிரெஞ்சுப் போலீஸ்காரரும் — வந்து சேர்ந்தனர்.

இந்தச் சதுக்கத்துக்குப் பிளேஸ் டி கான்கார்ட் என்று பெயர். லூயி ஃபிலிப் என்ற அரசனால் உருவாக்கப்பட்டது. எட்டு மாகாணத் தலைநகர்களின் உருவமாக எட்டுச் சிலா வடிவங்களையும் இரண்டு பொங்கு புனல்களையும் அங்கு அழகுற அமைத்தான் அவன். அதோடு எகிப்திய பாணியில் ஒரு ஸ்தூபியும் எடுப்பித்தான். இதனைக் 'கிளியோபாட்ராவின் ஊசி' என மக்கள் வேடிக்கையாக அழைத்து மகிழ்வார்கள்!

எழிலரசி கிளியோபாட்ராவின் பெயரைக் கொண்ட அந்த நெடிதுயர்ந்த தூணைப் பார்த்ததுமே மைக்கேலின் மனத்தில் தன் இதய ராணியைப்



ராணுவ டாக்டர்

சாதாரணமாக வைத்தியப் பட்டம் பெற நிறையப் பணம் கட்டிப் படிக்க வேண்டும். ஆனால் ராணுவ வைத்தியக் கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு இலவசப் படிப்பு என்பதோடு முதல் வருஷத்திலிருந்து இறுதி ஆண்டு வரை உதவிப் பணம் வேறு ரூ. 75லிருந்து நூறு வரை கிடைக்கும்! டாக்டர் பட்டம் பெற்றதும் இவருக்கு வேலை வாய்ப்பு நிச்சயம். எடுத்த எடுப்பில் ராணுவத்தில் 700 ரூபாய் கிடைக்கும்.

டாக்டர்கள் ராணுவத்தில் நிறைய சேவை செய்ய வந்திருக்கிறார்கள். தேர்ந்த நர்ஸ்கள்தான் ராணுவத்தில் பற்றாக்குறை. —பி. எஸ். எம்.

விரயம் வேண்டாம்!

மெட்ரோபாலிடன் மியூஸியத்தின் தலைவர் ரோரிமருக்குத் தகவல் தெரிவிப்பதற்காகக் கடிதம் எழுதி, ராக்பெல்லர் தபால் தலை ஒட்டச் செய்து வைத்திருந்தார். எதிர்பாராத விதமாக மியூஸியத்தின் தலைவர் ரோரிமர் நேரிலேயே அவரைக் காண வந்து விட்டார்! "உங்களுக்குக் கடிதம் எழுதித் தபாலில் சேர்க்கவிருந்தேன். நீங்கள் நேரிலேயே வந்து விட்டீர்கள்!" என்று சொன்ன செல்வந்தர் ராக்பெல்லர், உடனே பணியாளை மணியடித்து வரவழைத்து, "இந்தக் கடிதத்திலுள்ள தபால் தலையை ஜாக்கிரதையாகப் பிரித்தெடுத்து விட்டுக் கடிதத்தை இவரிடம் கொடு!" என்றார். மியூஸியத்தின் தலைவர் ரோரிமருக்குத் தூக்கி வாரிப் போட்டது. படிப்பினையாகவும் விளங்கியது. எத்தனையோ லட்சக்கணக்கான டாலர்கள் நன்கொடையாக வாரி விடும் ராக்பெல்லர் அநாவசியமாக ஒரு தபால் தலையைக்கூட வீணாக்க விரும்பவில்லை எனப் புரிந்து கொண்டார்.



பற்றிய எண்ணங்கள் எழுந்தன. அனுபமா மீது தான் கொண்டிருக்கும் காதலின் எதிரொலியைக் கூடிய விரைவிலேயே அவள் உள்ளத்திலும் காண்போம் என்ற நம்பிக்கையுடன் இருந்து வந்தான் அவன். அவளுடன் இன்னும் நெருக்கமாகப் பழகியவாறே அவள் பிறந்த நாடான இந்தியாவைச் சுற்றிப் பார்த்து வரும்போது அவள் மனத்தில் இன்னமும் தனக்குப் புலனாகாத பகுதிகளைப் படித்தறிந்து புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதினான். ஓர் இந்தியப் பெண்ணை முழுமையாக உணர்ந்துகொள்ள இந்தியச் சூழல் உதவும்; அப்போது அதற்கேற்பத் தானும் அன்போடும் அனுதாபத்தோடும் நடந்து கொண்டால் பின்னர் தன் காதலை அவள் ஏற்க அதிக நாளாகாது — இந்த ஆசையோடு தான் அவன் அவளோடு புறப்பட்டு வந்திருந்தான். ஆனால் ஐஃபெல் கோபுரத்தின் சில நூறு அடி உயரத்தில் அவள் தனஞ்செயனிடம் கட்டுண்டிருந்த சில விநாடிகளில், பலவீனமடைந்து மயங்கிச் செயலிழந்துதான் போனான் என்பது சந்தேகமறத் தெரிந்த போது அவன் தன் காதல் கோபுரமே சரிந்து விட்டது போல் சில நிமிஷங்கள் தடுமாறினான்.

ஒருவாறு அவளை விடுவித்த தனஞ்செயன், ''இப்போது கொடு உன் கைக்குட்டையை. லிப்ஸ்டிக்கைத் துடைத்துக் கொள்கிறேன்!'' என்று அவள் முன்பு விமானத்தில் நடந்து கொண்டதை நினைவூட்டியபோது அனுபமா ஆத்திரம் அடையவில்லை; நாணினாள். அதையும் கவனித்தான் மைக்கேல்.

கவ்விய ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு அவன், ''உனக்கு இது வேண்டியதுதான்!'' என்று அனுபமாவைக் கேலி செய்து சிரித்தான். தொடர்ந்து தனக்குத் தானே சமாதானங்களைக் கூறிக் கொண்டு அவன், அவர்களுடன் சேர்ந்து இந்தக் கிளியோபாட்ராவின் ஊசியைக் காண வந்திருந்தான். 'இரண்டு இந்தியர்களுக்கிடையே இயல்பாக ஏற்படக்கூடிய கவர்ச்சி இது; நீண்ட நேரம் நிலைக்காது' என்று ஒரு முறை எண்ணுவான். 'பாரிஸ் நகருக்கே இம்மாதிரியான மோகங்களைத் தூண்டி விடக் கூடிய சக்தி உண்டு. இங்கே நிலவுகிற காற்றிலேயே உல்லாசம் நிரம்பித் ததும்பும்' என்று மற்றொரு சமயம் நினைப்பான். 'லிஃப்ட்டில் ஏறி மேலே மேலே உயர்ந்து செல்கையில் பெண்களுக்கு இன்ப வாகிரி ஏற்படுவது சகஜம்' என்று ஒரு மனோதத்துவ நிபுணர் எழுதியுள்ளதை எங்கோ எப்போதோ தான் படித்துள்ளதாக ஞாபகப் படுத்திக் கொண்டான்.

நம்பிக்கை இழக்கக் கூடாதென்பதற்காக இவ்வாறெல்லாம் மனசைத் தேற்றிக் கொண்டு நடந்த மைக்கேல், இப்போது கேட்டான்: ''உனக்குத் தெரியுமில்லையா அனு? இந்தச் சதுக்கத்தில்தான் பிரஞ்சுப் புரட்சியின் போது கில்லோடின் இயங்கியது. அரச குடும்பத்தினர், பிரபுக்கள், செல்வந்தர்கள் ஆகியோரது ஆயிரமாயிரம் தலைகள் துண்டிக்கப்பட்டு உருண்டன!''

''என்ன கொடுமை!'' என்று அருவருப்புடன் கூறினாள் அனுபமா.

''கொடுமையா? ஆட்சியில் இருப்பவரின் அறியாமையைப் பொறுக்கலாம்; ஆணவச் செருக்கை எப்படிச் சகிப்பது? அதற்குக் கிடைத்த தண்டனை என்று சொல்லு!'' என்றான் தனஞ்செயன்.

''ஏழைகளின் துயர் அறியாமல் அரச குடும்பத்தினரும் பிரபுக்களும் நடந்து கொண்டார்கள் என்பது சரித்திர உண்மை. ஆயினும் அந்தக் கொடூரத்துக்குப் பதில் கொடுமை இழைப்பதில் யாருக்கு என்ன லாபம்? அநாகரிகத்தின் உச்ச கட்டம் என்றுதான் வர்ணிக்க வேண்டும்.''

''அத்தகைய காட்டுமிராண்டித்தனம் இன்றளவும் நீடிக்கிறதே, அனு!'' என்றான் மைக்கேல். ''இல்லாத போனால் எவ்வளவோ பண்பாட்டுச் சிறப்புப் பெற்றுவிட்டதாகக் கூறிக் கொள்கிற இந்தக் காலத்தில் ஹைஜாக் நிகழ்ச்சிகள் ஏன் நிகழ்கின்றன?''

''கற்காலத்துக்கே திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் வந்துவிடுகிறது எனக்கு'' என்றாள் அனுபமா. ''குற்றமற்ற விமானப் பயணிகளை நூற்றுக்கணக்கில் கொன்று குவிக்கத் தயாராக இருந்தார்களே, மனிதர்களா அவர்கள்! அமெரிக்காவில் நீக்ரோக்களுக்குச் சம உரிமை பெற்றுத் தர வேண்டுமானால் அதற்கு இதுதானா வழி?''

''விமான காப்டனிடம் பால் ஸ்மித் கூறிய காரணம் அதுதான், அனு! ஏராளமாகப் பணம் வேண்டும் தங்கள் இயக்கத்துக்கு என்றும் ஸான் குவென்டின் சிறையில் வாடும் தங்கள் சகாக்கள் இருவர் விடுதலை பெற வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார்கள். ஆனால் அதை நான் நம்பவில்லை. உண்மைக் காரணம் வேறு'' என்றான் மைக்கேல்.

அனுபமா வியப்புடன் மைக்கேல் டேவிஸ்ஸை ஏறிட்டு நோக்கினாள் என்றால் தனஞ்செயனே திகைத்துப் போனான்!

(தொடரும்)

கஷ் ம கஷ்

சரியான இழுபறி: திரையுலகத்துக்கே சொந்த மாகிவிட்ட இழுபறி. இப்படி இழுபறி நடத்தவில்லை என்றால் கதை ஓடாது. 'பாவம், திரையுலகம்!' என்று பரிதாபப்பட வேண்டிய நிலை விமர்சக ருக்கும் ஏற்படாது.

திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு தர்ம சங்கடம், இப்படி யெல்லாம் கேலிக்கூத்துக்களைப்



புகுத்தவில்லை யென்றால் ரசிகர்கள் கைவிட்டு விடுவார்களோ என்று! ரசிகர்களுக்கும் ஒரு தர்ம சங்கடம், நாம் பாராமல் அலட்சியம் செய்து விட்டால் இத்தனை பணம் போட்டு எடுத்தவர்களின் கதி என்ன ஆவது என்று! இந்தத் தர்மசங்கட இழுபறியில் உருவாகும் கதைதான் 'கஷ் ம கஷ்'.

கதாநாயகன் கணவன்; ஊரில் இல்லாத மனைவி யின் பிரிவு தாளாமல் உடலுக்கு இன்பம் தேடி ஒருத்தியை நாடிச் செல்கிறான். அவளுடன் அவன் இருக்கும்பொழுது அவள் கொலை செய்யப்படுகிறாள். அந்தக் கொலைக் குற்றம் எங்கே தன்மீது சுமந்து விடுமோ என்று தவிக்கிறான். அந்தத் தவிப்புக் கற்பனையை ரசிகர்களுக்கு விட்டுத் தாம் பல இடங்களில் ஒதுங்கிக் கொள்கிறார் கதாநாயகனாக வரும் ஃபெரோஸ்கான். இது நடிப்பு இலக்கணத் தின் புது உத்தியோ? அவருக்கு மனைவியாக வரும் ரேகா படுக்கைக் காட்சியில் புரண்டு கொடுத்து நடிப்பையும் புரட்டி எடுத்து விடுகிறார்.

புலன் விசாரிக்கும் இன்ஸ்பெக்டராக சத்ருக்னா சின்ஹா படத்துக்கு ஒரு புத்துயிர் அளிக்க முன் வருகிறார். அதே நேரத்தில் இந்த இழுபறி நோய் அவரையும் பிடித்துக் கொண்டு காதல்-மோதல் காட்சிகளில் இழுபறி நடத்துகிறது. அதோடு அவர் சொந்தமாக வேறு பாடி ரசிகர்களின் பொறு மைக்குத் தர்மசங்கடம் விளைவித்திருக்க வேண்டுமா?

ஐ. எஸ். ஜோஹர், தனித்தியங்கும் துப்பறிவாள ராக வருகிறார். அவருக்குப் பழகி அடிபணிந்துவிட்ட நடிப்பு என்று எண்ணும் நேரத்திலே அவரே கொலை யாளி என்று உறுதியாகி அந்த நடிப்புமே அவருக்குக் கைகொடுத்து விடுகிறது. அப்பொழுதுதான் இந்த இழுபறிக் கதையை இவ்வளவு இழுக்காமல், திரை யுலகக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்து புது வகையில் சித்திரமாக்கி யிருந்தால் சோதனையில் சாதனையைக் கண்டிருக்கலாமே என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் முடியக்கூடிய கட்டத்தில் கதையை நீட்ட முடியாதே! இத்தனை இழுபறி வேலை நடத்த முடியாதே! என்று சிந்திக்கவும் வைக்கிறது. இவ்வளவு நெருக்கடிக்கும் இடையில் இரண்டு பாடல்கள் ஆறுதல் தருகின்றனவே, அவற்றைப் பாராட்டித் தர்மசங்கடத்தைத் தவிர்ப் போம்.

குறிப்பு: கஷ் ம கஷ் என்னும் சொல்லுக்குத் தர்ம சங்கடம், நெருக்கடி, இழுபறி என்றெல்லாம் பொருள் உண்டு ஆதலால் விமர்சனமும் இழுபறி நடத்தி நெருக்கடி உண்டு பண்ணித் தர்மசங்கட மாக முடிகிறது!

— ரா.வி.

தெய்வமானவள்

எப்பொழுதோ கன்னடத்தில் எடுக்கப்பட்ட படம் இப்பொழுது தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு, ''தெய்வமானவள்'' என்ற பெயரில் வெளி வந்திருக் கிறது.

இப்படம் எடுக்கப்பட்டு எவ்வளவு ஆண்டுகள் ஆகி யிருக்கும் என்று அறிய விரும்புபவர்கள் படத்தில் ஜெயலலிதா அளிக்கும் தோற்றத்தைப் பார்த்தால் போதும். 'டீன்' ஆக இருக்கிறார். இன்று போலவே அன்றும் நன்றாக நடித்தும் இருக்கிறார்.

கதாநாயகன் திருமணத்தன்றே இறந்துபோய்விடு வதால் அவனைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம். கதாநாயகி தானும் வருத்தப்பட்டு நம்மையும் வருத் தப்பட வைக்கிறாள். கதாநாயகியின் மாமனாரும், மாமியாரும் ஆயிரத்தில் இருவர்! மகனை இழந்த தங்கள் துக்கத்தையும் மறந்து மருமகளுக்கு மறு மணம் செய்து வைத்து மறுவாழ்வு அளிக்க முன் வருகின்றனர். ஆனால் கதாநாயகி அதை ஏற்க மறுத்துத் தற்கொலை செய்து கொண்டுவிடு கிறாள். இல்லாவிட்டால் எப்படி அவள் தெய்வ மாக முடியும்?

சந்திரபாபுவைப் பார்க்கும்போது அவருடைய இயற் கையான ஹாஸ்ய நடிப்பை நம்மால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை. அதே சமயத்தில் நம்மையும் மீறிப் பெருகும் கண்ணீரையும் நம்மால் கட்டுப்படுத் திக் கொள்ள முடியவில்லை. தலைசிறந்த அந்த நகைச் சுவை நடிகர் இப்பொழுது நம்மிடையே இல்லையே! கதாநாயகியின் மாமியாராக வரும் சந்தியாவும் இன்று இவ்வுலகில் இல்லை. சந்தியாவும் நன்றாக நடித்திருக்கிறார்.

எத்தனையோ சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்று முன்னேறிவிட்ட நமக்கு மீண்டும் பழங்காலப் பிரச்னைகளைப் பிட்டு வைக்கிறார்கள். எனவே, பி. ஏ. பரீட்சையில் தேறியவனை மீண்டும் மூன்றாவது வகுப் பில் 'சேர்ந்து படிக்கச் சொல்வது போல் இருக்கிறது படத்தைப் பார்க்கும் ரசிகர்களுக்கு!

- காந்தன்




ஆசைகள் மடிவதில்லை
14
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா..
முனிசாமி சதீஷிடம் சரணடையவே காரியங்களைத் துரித மாக்கினான் சதீஷ். உயர் போலீஸ் அதிகாரிகளின் பொறுப்பில் முனிசாமி ஒப்படைக்கப் படுகிறான் இரவோ டிரவாக.
சொல் முனிசாமி சொல்லி விடு...ம் தருமராஜனைக் கொன்றது யார்...யார்?
எனக்குத் தெரியாது...
தருமராஜனைச் சோமசுந்தரம் தான் கொன்றானில்லையா? உண்மையைச் சொல்லி விடு...ம். சொல்லமாட்டாய்? பேசு... பேச மாட்டாயா?...
... தருமராஜனின் மனைவி மேனகாவை மயக்கித் தன் வலைக்குள் விழ வைத்தான் சோமு. தருமராஜனின் திரண்ட ஆஸ்தியைத் தனதாக்கிக் கொள்ள அவரைக் கொலையும் செய்தான், இல்லையா? அப்படித் தானே... சொல்... சொல்...
இல்லை... இல்லை... இல்லை! பத்திரிகாசிரியர் முரளியைச் சோமு கொன்றதை நான் பார்த்தேன். வேறொன்றுமே எனக்குத் தெரியாது...
இதற்கு மேல் முனிசாமியிடமிருந்து எதையும் அறிய முடியாது. ஆனால் உண்மையை எப்படியும் இன்னும் சில மணி நேரங்களில் வெளிப்படுத்தியாக வேண்டுமே.


... இன்று இரவு சரியாக ஒரு மணிக்கு அந்தப்பெண் மல்லிகாவிற்கு மரணதண்டனை நிறை வேற்றப்பட்டு விடுமே. அதன் பிறகு எந்த உண்மை தெரிந்து என்ன பயன்?
வெல், ஜெண்டில்மென்! இனியும் குழப்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. தருமராஜனின் கொலைக்கும் சோமுவுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன்...
சோமு, தருமராஜனின் மனைவியை மணந்து கொள்ளத் திட்டமிட்டிருக்கலாம். அது அந்த முரளிக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது...
... தன் முன்னேற்றம், தன் கனவுகள் முரளியினால் பாதிக்கப் படலாம் என்பதற்காக அவனைச் சோமு கொலை செய்திருக்கலாம். ஆனால் தருமராஜனைக் கொன்றது யார் என்பதில் இருவித அபிப்பிராயங்களுக்கே இடமில்லை.
கையில் என்ன சுளுக்கா? மடக்க முடியாத நிலை போலிருக்கிறதே... அடேடே! இதென்ன ரத்தக் கறை வேறு...
ஒன்றுமில்லை... ஒரு சிறு ஆக்ஸிடெண்ட்... கவலைப் படும் படியாக ஏதுமில்லை....
தொடரும்

மைவிழி மகளிர்

சீதா

"ஏண்டி சாரு, எங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கே, தடபுடலா டிரஸ் பண்ணிக் கொண்டிருக்கே ?'' என்று கேட்டாள் தாயார் அகிலாண்டம்.

''இதுக்குப் பேரு டிரஸ்ஸா? 'இப்படி அலங் கோலம் பண்ணிக் கொண்டு எங்கே புறப்பட் டாய்?' என்று வேணுமானால் கேள்'' என்றாள் அத்தை அன்னபூரணம்மாள்.

''அத்தை இப்பத்து 'பாஷன்' உனக்குத் தெரியாது — சாரு இப்படி டிரஸ் செய்து கொண்டிருப்பதில் அதிசயமில்லை!'' என்றான் சாருவின் அண்ணன் சுந்தர். '' என் போன்ற இளைஞர்கள் இப்ப எல்லாம் கிராப் வெட்டிக் கிறதே இல்லே. தலைக்கு எண்ணெய் தடவிக் கிறதில்லே. ஷேவ் பண்ணிக்கிறதில்லே ! அதனால் என்ன ஆச்சு, தெரியுமா அத்தை— பார்பர் ஷாப் வைச்சு நடத்திக் கொண் டிருந்தவா எல்லாம் நஷ்டப்பட்டு வேறே



தொழிலிலே இறங்கிட்டா. உதாரணமா நான் வழக்கமாக கிராப் பண்ணிக்கும் பார்பர் ஷாப் பழனி வெற்றிலே பாக்குக் கடை வெச் சுட்டான் !''

''ஹலோ சாரு, நீ ரெடியா ?'' என்று பெல்பாட்டம் பைஜாமா போட்ட ஒரு பெண் நுழைந்தாள்! — சாருவின் தோழி ஹேமா.

''அம்மா, நாங்கள் ஒரு கல்யாணத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். போயிட்டு வரோம்!'' என்றாள் சாரு.

''அது சரிடீ எங்கே கல்யாணம் என்று சொல்லவில்லையே!'' என்று கேட்டாள் அகிலாண்டம்.

'' எங்கே நடந்தால் நமக்கு என்ன ? இப்ப வீட்டை விட்டுப் போனால் சாயந் திரமோ ராத்திரியோ தான் திரும்பி வரப் போகிறாள்!'' என்றாள் அத்தை.

''அம்மா கேட்கிறது எதுக்குத் தெரியுமா அத்தை? 'அபட்ஸ்பரி'யில் கல்யாணம் என்றால் அம்மா அது லட்சாதிபதிகள் வீட்டுக் கல்யாணம் என்று தீர்மானித்துக்கொள்வாள். மாம்பலம், மயிலாப்பூரில் இருக்கும் மண்ட பங்களில் கல்யாணம் என்றால் 'அம்மா சுமா ரான பணக்கார வீட்டுக் கல்யாணம் என்று முடிவு செய்து கொள்வாள். கோவிந்தப்ப நாயக்கன் தெரு நாராயணமுதலி தெருக்களில் இருக்கும் கல்யாண சத்திரத்தில் நடக்கும் கல்யாணம் என்றால் சாதாரண மத்தியதர குடும்பத்துக் கல்யாணம் என்று நினைத்துக் கொள்வாள். இதைத் தெரிந்து கொள்வ தற்குத்தான் அம்மா கேட்கிறாள்'' என்றான் சுந்தர்.

'' இது வந்து ஒரு விசித்திரமான கல் யாணம். பாஸ்டன் லேடீஸ் கிளப் நடத்தி வைக்கும் கல்யாணம். அதற்குத்தான் போகப் போகிறோம்'' என்றாள் ஹேமா.

''லேடீஸ் கிளப்புகள், போட்டிப் பந்த யங்கள், சீட்டுக் குலுக்கல்கள், பிக்னிக்குகள்— இப்படி ஏதாகிலும்தான் நடத்தும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். 'உருப்படியான காரியங்கள்கூடச் செய்கிறார்களா ? பரவா யில்லையே!'' என்றாள் அகிலாண்டம்.

அத்தை பொறுக்கமாட்டாமல், ''சற்று விவரமாகத்தான் சொல்லேன்'' என்றாள் ஹேமாவைப் பார்த்து.

''ஹேமா! நீ சும்மா இருடி, நான் விவர மாகச் சொல்கிறேன்'' என்று துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி வந்தாள் சாரு. பிறகு தொடர்ந்தாள்: ''பாஸ்டன் லேடீஸ் கிளப் தலைவியான சாவித்திரி அம்மாள் வீட் டுக்கு வழக்கமாப் பூ போட்டு வரும் மெய்யப் பன், தன்னைப் போலவே பூ விற்கும் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும், அவளைக் கோயிலில் தாலி கட்டிக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும், அந்தக் கல்யாணச் செலவுக்குப் பத்து ரூபாய் கொடுக்கும்படி யும் சாவித்திரி அம்மாளைக் கேட்டிருக்கிறான். சாவித்திரி அம்மாள் அவன் கூறிய விவரத் தைக் கேட்டு, ''கொஞ்ச நாள் பொறு. உன் கல்யாணத்தை நானே நல்ல முறையில் நடத்தித் தருகிறேன்'' என்று சொல்லியிருக் கிறாள். இதைக் கேட்ட மெய்யப்பன் தன் உயிருக்குயிரான நண்பன் ஒருவன் தன்னைப் போன்ற நிலையிலேயே இருப்பதாகவும் அவ னுக்கும் சேர்ந்து திருமணம் நடத்திக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டிருக் கிறான். அப்படியே பாஸ்டன் லேடீஸ் கிளப் அங்கத்தினர்கள் மேளதாளத்துடன் மந்திரி

சாதிக் பாட்சா, ஸ்ரீமதி மதுபென் ஷா இவர்கள் முன்னிலையில் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்துகிறார்கள். அதற்குத்தான் நாங்கள் போகிறோம் !'' என்றாள் சாரு.

''தேவலையே! ஊர் கூடித் தேர் இழுப்பது போல் கல்யாணம் என்றால், ஊர் கூடி நடத்தி வைப்பதுதான் முறை. இப்ப எல்லாம் கல்யாணம் என்றால் என்ன செலவு ஆகிறது!'' என்றாள் அகிலாண்டம்.

'' அந்தக் காலத்திலேயும் கல்யாணச் செலவை ஊர் ஜனங்கள், பந்துமித்திரர்கள், உற்றார் உறவினர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் ஆசீர்வாதம் பண்ணறது, ஓதியிடறது மொய் எழுதறது என்று பணம் கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் வர வரக் கல்யாணம் என்றால் வரதட்சிணை, சீர் செனத்தி என்று வியாபாரமாகவும் ஆடம்பரமாகவும் போய்விட்டது ! இந்த அட்டூழியம் போனால்தான் தேசம் உருப்படும்'' என்று அத்தை ஆவேசமாகப் பேசினாள்.

ஹேமா, ''சபாஷ் ! சபாஷ்! பலே ! அத்தை வெல் ஸெட்!'' என்று ஆர்ப்பரித்தாள்.

''என்னடி, பிரமாதமாகக் கும்மாளம் போடறே ! நீ என்ன வரதட்சிணை கொடுக்காமல்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறயோ ? சும்மா இட்டு !'' என்றாள் சாரு.

''நீ வேணுமானால் பாரேன். நான் வரதட்சிணை கேட்காத பையனைத்தான் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்!'' என்றாள் ஹேமா.


''அப்படியானால் நீ இப்பவே யாரையாகிலும் 'லவ்' பண்ணி வைச்சிருக்கியா?'' என்று கேட்டாள் சாரு.

''சேச்சே ! அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றாள் ஹேமா வெட்கத்துடன். ''எங்க அப்பா அம்மா பார்த்து ஏற்பாடு பண்ணுகிற பையனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். ஆனால் கண்டிப்பா அப்பாவிடம் சொல்லிவிடப் போகிறேன் – வரதட்சிணை கேட்கிற இடம் வேண்டாம்'' என்று.

அத்தை உடனே பேசினாள்: ''இந்த மாதிரியெல்லாம் சொல்லி வைக்காதே, அம்மா ! பெரிய தொல்லையாக முடியும். எப்படித் தெரியுமா ? 'எங்களுக்கு வரதட்சிணை வேண்டாம். எங்க அந்தஸ்து உங்க அந்தஸ்துக்குத் தகுந்தபடி செய்யுங்கோ!'' என்று சொல்லிவிட்டுப் பிள்ளை வீட்டார் போய்விடுவா! இதற்கு என்ன அர்த்தம் தெரியுமோ, ஒரு பங்களா, கார், வைர நகைகள் என்று இப்படி ஒரு கணக்குக்கே அடங்காமல் போய்விடும். இவ்வளவு செய்தும் பிள்ளை வீட்டார், ''என்ன பிரமாதமா செய்துட்டா ?'' என்று அலட்சியமாக வேறு பேசுவா. இதெல்லாம் பார்க்கறச்சே வரதட்சிணை கேட்கிறவாளே தேவலை. நமக்கு எவ்வளவு 'கையைப் பிடிக்கும்' என்று கணக்காகத் தெரியுமல்லவா ?''

தோழிகள் சிரித்துக் கொண்டே வெளியே கிளம்பினர்.




ஒவ்வொரு
Complan
Glaxo
Complan
ECONOMY PACK
Complan
Glaxo
Complan

CMGC 1 216 TM



உங்களை விட

ஆசிரியர்,
''இளிச்சவாயன்'',
சென்னை

ஐயா,

என்னைத் தாங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். நான் ஓர் இளம் எழுத்தாளன். நிறைய எழுதிக் குவித்திருக்கிறேன். ஆனால் இதுவரையில் என் படைப்புக்களில் ஒன்று கூட அச்சு வாகனம் ஏறியதில்லை. நான் அனுப்பும் கதை, கவிதை, கட்டுரை, தொடர் கதை, குறுநாவல், துணுக்கு — எதுவும் எனக்கே திரும்பி வந்து விடுகின்றன. என் படைப்புக்களை எல்லாப் பத்திரிகைகளுமே ஒதுக்கியிருக்கின்றன. என்னுடைய இந்த அனுபவங்களையெல்லாம் தொகுத்து இத்துடன் அனுப்பியிருக்கிறேன். சாவகாசமாகப் படித்துப் பாருங்கள். நிற்க.

நான் தங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுவதன் நோக்கமே வேறு. எல்லாப் பத்திரிகைகளிலிருந்தும் ''பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' என்று கூறி எனக்குக் கடிதங்கள் வந்துள்ளன. அவற்றையெல்லாம் தனியே ஓர் ஆல்பத்தில் ஒட்டி வைத்திருக்கிறேன். தங்கள் பத்திரிகையிலிருந்தும் அப்படிப்பட்ட கடிதம் ஒன்று கிடைத்தால், ஆல்பம் பூர்த்தியாகிவிடும். அதற்காகவே இந்தக் கடிதம்.

என் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

அன்பன்
பிச்சப்பா (சொஜ்ஜி)

★

திரு பிச்சப்பா (சொஜ்ஜி)
சென்னை — 7

அன்புடையீர்,
வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றோம். பல பத்திரிகைகளுக்கும் கதை, கட்டுரைகள் எழுதி, தாங்கள் அடைந்த அனுபவங்களின் தொகுப்பையும் படித்துப் பார்த்தோம். அந்தக் கட்டுரை, ''இளிச்சவாய''னில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள்
முனியாண்டி
ஆசிரியருக்காக

ஆசிரியர்,
''இளிச்சவாயன்'',
சென்னை

ஐயா,

தங்கள் கடிதம் ஒரே சமயத்தில் பன்னீரையும் வெந்நீரையும் தெளித்ததுபோல் இருந்தது. நான் கேட்டுக் கொண்டபடி தாங்கள் எனக்கு 'வருந்துகிறோம்' என்று கடிதம் அனுப்பவில்லையே! அந்தக் கடிதம் கிடைக்காததால் என் ஆல்பம் முற்றுப் பெறாமலே போய்விடுமோ என்றும் அஞ்சுகிறேன். பல ஆண்டு காலமாக அரும் பாடுபட்டு இந்த ஆல்பத்தைத் தயாரிக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளையெல்லாம் எழுதி இத்துடன் இணைத்திருக்கிறேன். அதைப் படித்துப் பார்த்த பிறகாவது தங்கள் மனம் இரங்குமென்றும், முந்தைய கடிதத்தில் நான் விடுத்திருந்த வேண்டுகோளை நிறைவேற்ற முன்வருவீர்கள் என்றும் எண்ணுகிறேன். நன்றி.

அன்பன்
பிச்சப்பா (சொஜ்ஜி)

★

திரு ''சொஜ்ஜி'' அவர்கள்,
சென்னை — 7

அன்புடையீர்,

'ஆல்பம் என்றால் அல்பமா?' என்ற தலைப்பிட்ட தங்களது நகைச்சுவைக் கட்டுரை கிடைக்கப் பெற்றோம். கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டுக்கள்.

மேற்படி கட்டுரை, ''இளிச்சவாயனில்'' பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள்
முனியாண்டி
ஆசிரியருக்காக

★

ஆசிரியர்,
''இளிச்சவாயன்''
சென்னை

ஐயா,

தாங்கள் அன்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது. என் கட்டுரை ஏற்றுக் கொள்ளப்பட்டது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், வருத்தமும் இல்லாமல் போகவில்லை. காரணம், என் ஆரம்ப வேண்டுகோளைத் தாங்கள் இன்னமும் நிறைவேற்றி வைக்காமல் இருப்பதுதான். தங்களது செய்கை, 'வீடு பற்றி எரியும்போது, சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்' என்ற பழமொழியையே எனக்கு நினைப்பூட்டுகிறது. நான் இங்கேஒரேஒரு'வருந்துகிறோம்' கடிதத்துக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் போது, கட்டுரை





பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப் பட்ட மகிழ்ச்சியான செய்தி யாருக்கய்யா வேண்டும்?.... ஆல்பம் இன்னும் முற்றுப் பெறவில்லை. தங்களது 'வருந்துகிறோம்' கடிதத்தை உடனடியாக அனுப்பி வைத்து உதவவும்.

மிக்க நன்றி.

அன்பன்
பிச்சப்பா (சொஜ்ஜி)



மாட்டேன்!

• தராஜா •

பின்குறிப்பு: தாங்கள் இம்மாதிரி ஏடாகூடம் செய்து என் கழுத்தை அறுப்பதுபோல், என் நண்பர்கள் பலரும் என்னை அறுத்திருக்கிறார்கள். அவர்களில் சிலரைப் பற்றி—ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் எழுதி—இத்துடன் அனுப்பியுள்ளேன். நேரம் கிடைக்கும்போது படித்துப் பாருங்கள். கட்டாயம் உங்களுக்கு ரோஷம் வரும் !

★

அன்புள்ள திரு ''சொஜ்ஜி'' அவர்களுக்கு,
வணக்கம்.

கடந்த சில நாட்களாகத் தாங்கள் எழுதி வரும் கடிதங்களையும் கட்டுரைகளையும் படிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தங்களது கட்டுரைகள் முழுக்க முழுக்க நகைச்சுவையுடனும், புதுப் பாணியிலும் அமைந்திருப்பது குறித்து எனது பாராட்டுக்கள். அதிலும் உங்கள் நண்பர்கள் சிலரது ஏடாகூடமான செயல்களைப் பற்றிச் சமீபத்தில் ஒரு கட்டுரை எழுதியிருந்தீர்கள், பாருங்கள், அது அற்புதம்.

புதுப் புது எழுத்தாளர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களை ஊக்குவித்து, வாசகர்களுக்கு அறிமுகம் செய்விப்பதை ''இனிச்சவாயன்'' ஒரு புனிதமான கடமையாகக் கொண்டிருக்கிறான். தாங்கள் அப்படிப்பட்ட எங்களது கண்டுபிடிப்புக்களில் ஒருவர் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

தொடர்ந்து தங்களது இலக்கியப் படைப்புக்களை ''இனிச்சவாய''னுக்கு அனுப்பி வைத்து உதவுமாறு வேண்டுகிறேன்.

நல்வாழ்த்துக்கள்.

தங்கள்
ஜடாமுனி
ஆசிரியர்

★

திரு ஜடாமுனி அவர்கள்,
ஆசிரியர், ''இனிச்சவாயன்'',
சென்னை

அன்புள்ள திரு ஜடாமுனி அவர்களுக்கு,
வணக்கங்கள் பல.

தங்களைப் போன்ற நல்ல மனம் கொண்ட ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பார்ப்பது அரிது. அரிதாகும். என் எழுத்துக்களுக்கு ''இனிச்சவாயனி''ல் இடம் தந்து ஆதரவளித்து வரும் தங்களை என் ஆயுள் உள்ள வரையில் மறக்க மாட்டேன்.

தங்களது கடிதங்களும், உற்சாக மொழிகளும் எனக்குப் புதுத் தெம்பு ஊட்டியுள்ளன. 'என் எழுத்துக்கு அச்சு வாகனம் ஏறும் வாய்ப்பே இந்த ஜென்மத்தில் கிடையாது' என்ற நினைப்பைத் துடைத்து எறிந்துவிட்டதோடு, என்னைப் பிடித்திருந்த தாழ்வு மனப்பான்மையையும் உதறி விட்டேன். 'வருந்துகிறோம்' கடிதங்கள் அடங்கிய ஆல்பம், அடுப்புக்குப் போய்விட்டது.

இத்துடன் என்னுடைய புத்தம் புதுப் படைப்பான 'அவள் அன்றே சொன்னாள்' என்ற தலைப்பிட்ட சிறுகதையை அனுப்பியுள்ளேன். கதை தங்களுக்குக் கட்டாயம் பிடித்திருக்கும் என்றும், விரைவிலேயே ''இனிச்சவாயனி''ல் இடம் பெறும் என்றும் எதிர்பார்க்கிறேன். நன்றி.

தங்கள்,
''சொஜ்ஜி''

★

திரு பிச்சப்பா அவர்கள்,

சென்னை — 7

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பி வைத்த 'அவள் அன்றே சொன்னாள்' சிறுகதை, பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களது இலக்கிய முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு

முனியாண்டி
ஆசிரியருக்காக

(ஆங்கிலக் கட்டுரையின் தழுவல்)



நாடகத்தில் தொடங்கிக் கூடயத்தில் முடிந்தது!

திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மாணவன் ஸ்ரீராமனிடம் அவன் அன்னே ரேஷன் வாங்கி வருவதற்காக இரண்டு ரூபாய் கொடுத்தாள். இளம் உள்ளத்தில் அன்றைய லீக் 'மாட்ச'க்குப் பந்தில்லே என்ற நினைவு எழுந்தது. அரிசிக்கான இரண்டு ரூபாய், பந்து வாங்கப் பயன்பட்டது. அன்று மாலே வரையில் கிரிக்கெட் மாட்சில் ஈடுபட்ட ஸ்ரீராமனுக்கு ஒரே குஷி. குட்டு வெளிப்படாதிருக்குமா? மாலே தந்தையிடம் செம்மையான உதை வாங்கினன் ஸ்ரீராமன். அதனல் கிரிக்கெட்டின் மீதுள்ள ஆர்வம் அவனுக்குக் குன்றிவிடவில்லே! நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வளர்ந்தது.

தமிழகக் கிரிக்கெட் சங்கக் காரியதரிசி திரு ஸ்ரீராம் கூறுகிறர்:

''அந்த நாளில் இரண்டணுவும் நாலணுவுமாக ஒன்றரை ரூபாய் என் நண்பர்கள் சேர்த்துக் கொடுத்து என்னேக் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் பார்க்க வைத்தார்கள். இன்று ஒரு கோடியே இருபது லட்சம் செலவில் லட்சக்கணக்கான ரஸிகர்கள் குழுமிக் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்களேக் காண வசதியாக அரங்கம் அமைத்துப் பார்த்து மகிழும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது கனவிலும் நான் எதிர்பாராத அதிசயம்.''

திரு ஸ்ரீராமனின் ஆரம்ப கால கிரிக்கெட் சரித்திரம் யங்மென்ஸ் அஸோஸியேஷன் என்ற அமைப்பில் தொடங்கியது. இன்று பொன் விழா காண இருக்கும் இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் திரு எஸ். கண்ணன். முதன் முதலில் நாடகங்கள் அரங்கேற்றத்தான் தொடங்கப்பட்டது. 1933ம் ஆண்டில் திரு ஸ்ரீராம் காரியதரிசிப் பொறுப்பு ஏற்றதும்தான் கிரிக்கெட் கிளப்பாக மாறியது. சிறிய கிரிக்கெட் கிளப் ஆயினும் அதற்காக அயராது உழைத்ததால் பெரும் புகழும் நாளடைவில் இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு காரியதரிசி, இங்லொந்து எம். ஸி. ஸி.யின் கௌரவ அங்கத்தினர் ஆகிய பதவிகளும் அவரை வந்தடைந்தன!

''ஒய். எம். ஏ. இந்த வருஷம் லீக் சாம்பியனுகிப் பாளேயப்பட்டி ஷீல்டு பெற்றிருப்பது கேட்டு மகிழ்ச்சி. ஒய். எம். ஏ.யின் தனிச் சிறப்பு என்ன?'' என்று வினவினேன்.

''முதன் முதலில் ஆங்கிலேயர்கள் கலந்து கொண்டு ஆடிய கிரிக்கெட் கிளப் இது! ஏ. டபிள்யூ. ஸ்டான்ஸ்பீல்டு, கே. ஸி. பைஃப், ஜே. பி. பியர்ட்சல் போன்ற ஆங்கிலேயர்கள் எங்களோடு கலந்து 'லீக்' மாட்ச் ஆடியிருக்கிறர்கள். அந்தக் காலத்தில் சேலத்திலிருந்து ராமதுரை என்ற கிரிக்கெட் ரஸிகர் பல ஆட்டக்காரர்களேத் தம் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு சனியன்று புறப்பட்டுச் சென்னேக்கு வந்து ஞாயிற்றுக் கிழமையில் எங்கள் கிரிக்கெட் கிளப்போடு ஆடிவிட்டுச் செல்வார். முந்நூறு மைல்களுக்கு மேல் காரோட்டி வந்து ஆடுவது அந்தக் காலத்தில் ரொம்ப அபூர்வமான காரியம்! வெள்ளி விழாக் காலத்துக்கு இந்தக் கிளப்பின் தலேவராக திரு கே. ஈசுவரன் இருந்திருக்கிறர்'' என்று கூறுகிறர் ஸ்ரீராமன்.

கிரிக்கெட் ஆர்வம் பெருக அரும் தொண்டாற்றி வந்து பொன்விழாக் காணும் ஒய். எம். ஏ.வுக்கு நல்வாழ்த்துக்கள்! பல இளம் கிரிக்கெட் நட்சத்திரங்களேத் தோற்றுவித்த பொன்னுன கிளப் இது! —குண்டுமணி

பாளேயம்பட்டி கேடயம் பெற்றதற்காக இந்திய உதவி காப்டன் வெங்கட்டுக்கு ஸ்பிக் உதவி சேர்மன் திரு ஸ்ரீவத்ஸா ஞாபகார்த்தப் பரிசு கொடுக்கிறர். பின்னுல் நிற்பவர்கள்: திரு ஏ. ஸி. முத்தையா, திரு ஸ்ரீராம்.



வீரம் வளரும்;

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பிரிட்டனைச் சேர்ந்த பிராட்போர்ட் என்ற இடத்தில் ஒரு வியத்தகு சம்பவம் நிகழ்ந்தது.

ஆறு அறைகள் கொண்டிருந்த ஓர் உறுதியான கட்டடத்தை, எவ்வித ஆயுதமும் உபயோகப்படுத்தாமல், பதினைந்து 'கராத்தே' வீரர்கள், ஆறு மணி நேரத்தில், கைகளினால் தாக்கியும் தலையால் முட்டியும் உடைத்துத் தரை மட்டமாக்கி விட்டார்கள்!

'கராத்தே' என்றால் ஜப்பானிய மொழியில் 'வெறுங்கை' என்று பொருள்.

ஜப்பான் நாட்டின் வீரக் கலைகளில் ஒன்றாகத் திகழ்வது கராத்தே. அங்கே அதைக் கல்லூரியிலும், பள்ளிகளிலும் கட்டாய பாடமாகப் பயின்றாக வேண்டும். கராத்தே கற்காவிடில் 'ஜூடோ'வையாவது பயில வேண்டும்.

ஜப்பானுக்கே சென்று, பயிற்சி பெற்றுத் தமது ஆற்றலைக் காட்டி, 'கறுப்புப் பட்டை' சிறப்புடன் தமிழகம் திரும்பியுள்ளார் இளைஞர் ஆர். வி. டி. மணி.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மருத்துவ மாணவரும்கூட.

இந்த மாணவர் நுங்கம்பாக்கம் ஏரிவட்டம் மாநகராட்சி விளையாட்டு அரங்கில், ஆசிரியராக மாறுகிறார். இங்குதான் 'தமிழ் நாடு கராத்தே பயிற்சிக் கழகம்' இயங்குகிறது. இதன் காரியதரிசியும் திரு மணிதான்.

கராத்தே தற்காப்புக்குரிய சிறந்த பயிற்சி. எதிரிகள் தாக்க வந்தால் பாதுகாத்துக் கொள்ளலாம். எதிரிகளிடமிருந்து தப்பிக்க, பாய்ந்து தாக்கவும் செய்யலாம். கைகளையும், கால்களையும் உபயோகித்து மின்னல் வேகத்தில் எதிரிகளுடன் போரிட உதவுவதே கராத்தே.

படிப்படியாகக் கைகளுக்கும், கால்களுக்கும் வலிமை ஏற்படும் விதமான பயிற்சிகள் கராத்தேயில் உண்டு. சுவாசப் பயிற்சி, ஒருமித்த சிந்தனைக்கான தியான முறைகள் எல்லாம் கற்றுத் தரப்படுகின்றன.

நுங்கம்பாக்கம் பயிற்சிக்கூடத்தில் நமது பாரத ஜனாதிபதி திரு கிரியின் பேரன் முதல், சாதாரணத் தொழிலாளியின் பேரன் வரையில் கராத்தே கற்கிறார்கள்.

பயிற்சிக்கூடத்தில் மணியையும், மாணவர்களையும் சந்தித்தேன். மாலை ஆறு மணிக்குத் தொடங்கி எட்டு மணி வரையில் கராத்தே பயில்கிறார்கள்.

''கராத்தே கலை முதன் முதலில் எங்கு தோன்றியது?'' என்று திரு மணியைக் கேட்டேன்.

''கராத்தே தோன்றியது இந்தியாவில் தான்! நமது காஞ்சிபுரத்திலிருந்த தர்மதத்தன் மூலம்தான் வெளிநாட்டில் பரவியது. மகாயான பௌத்தக் கொள்கையைக் கண்டு பிடித்தவரும், போதி தர்மா என்று அழைக்கப்படுபவரும் இவரே.

''தமிழ் நாட்டைவிட்டுச் சீனாவின் தென் பகுதி சென்றார். புத்த பிக்ஷுக்கள் ஆயுதம் எடுத்துச் செல்லக் கூடாது. எனவே பகைவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளக் கையையும் காலையும் பயன்படுத்தும் 'கராத்தே' கலையைத் தர்மதத்தன் நன்கு கற்றிருந்தார். புத்த சமயக் கொள்கையுடன் கராத்தே கலையையும் தர்மதத்தன் பரப்பினார். ஜப்பானுக்குத் தெற்கே உள்ள ஒகினவா தீவில் வளர்ந்த கராத்தே, பின்னர் ஜப்பானில் பரவியது. இன்று ஜப்பான் இக்கலையில் உலகிலே மிகச் சிறந்து விளங்குகிறது. உலகின் பல பாகங்களிலும் இக்கலை பரவி வளர்ந்து கொண்டிருக்கிறது. சுமார் ஆறு லட்சம் கராத்தே வல்லுநர்கள் இன்று உலகில் இருக்கிறார்கள்!''

'கேள்வி: உங்களுக்குக் கராத்தேயில் எப்போது முதல் ஆர்வம் ஏற்பட்டது?

பதில்: நான் தஞ்சை மாவட்டத்தில் பள்ளிப் படிப்பை முடித்தேன். பிறகு திருச்சியில் பி. யூ. சி. படிக்க ஆரம்பித்தேன். கூடவே சிலம்பம், குத்துச் சண்டை, களரிப் பயிற்சி முதலியவற்றைக் கற்றேன். அப்போது கராத்தே கற்க விருப்பம் ஏற்பட்டது.





ஜப்பானைச் சேர்ந்த செக்கா குச்சி என்பவர், கராத்தேயைப் பற்றிச் சொன்னார். அது பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். இது பற்றிய புத்தகங்களை வரவழைத்துப் படித்தேன். லயோலா கல்லூரியில் படிக்கவந்த முராதோனு என்னும் ஜப்பானிய இளைஞர், கராத்தேயைப் பழகும் முறைகளைச் சொன்னார். அவரிடமும் பயின்றேன். ஜப்பான் கராத்தே கழகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. நான் பழகி வரும் விதத்தைப் புகைப்படங்களாக எடுத்து அவர்களுக்கு அனுப்பினேன்.

என் ஆர்வத்தைக் கண்டு, ஜப்பானிய கராத்தே கழகம் அழைப்பு விடுத்தது. அங்கே சென்று ஆறு மாதங்கள் தங்கி நேரிடையாகப் பயிற்சி பெற்றேன்.

1. கராத்தேயில் தேர்ந்தவர் ஒரே அடியில் கனமான செங்கற்களை உடைத்தல்.

2. மணி மேற்பார்வையில் தமிழகப் போலீசாருக்குக் 'கராத்தே' பயிற்சி.

3. ஜப்பானிய குரு 'கிராண்ட் மாஸ்டர்' கோஜன்யமாகுச்சியிடமிருந்து மணி சான்றிதழ் பெறுகிறார்.

4. கராத்தே பயிற்சி. தாக்கும் முறை கற்பிக்கப்படுகிறது.

பண்புகள் பெருகும்!





கராத்தே பயில்வோருக்கு முதலாவது டான், இரண்டாவது டான், எனப் படிப்படியாகப் பத்தாவது 'டான்' வரை சான்றிதழ் தரப்படும்.

அப்படிப் பத்தாவது 'டான்' வரை தேர்ந்தவர்கள், ஜப்பான் நாட்டிலேயே நால்வர் தான். அவர்களில் ஒருவர் திரு கோஜன் யமா குச்சி. இவர் ஒரு வழக்கறிஞராக இருந்தபடி, கராத்தேயில் வல்லவராகத் திகழ்கிறார்.

திரு மணி, யோகிராஜ் வேதாத்ரி மகரிஷியிடம் யோகக் கலையைக் கற்றவர். யோகாசனங்கள், குண்டலினி யோகம் முதலியவற்றை வேதாத்ரியிடம் மாணவராக இருந்து கற்றிருக்கிறார்.

இந்திய யோகக் கலையைத் தமது ஜப்பானிய கராத்தே குருவுக்கும் கற்றுத் தந்திருக்கிறார்!

நுங்கம்பாக்கம் கராத்தே பயிற்சிக்கூடத்தில், மாணவர்கள், ஜப்பானிய முறையில் காலைச் சேர்த்து இடையிலிருந்து முன்னால் வளைத்து வணக்கம் செலுத்துகிறார்கள் — நான்கு முறை!

முதல் வணக்கம் இறைவனுக்கு, அடுத்தது நாட்டுக்கு; அதற்கும் அடுத்தது குருவுக்கு; கடைசியாகப் பயிலும் கூடத்துக்கு!

பயிற்சியின் போது, ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால்கூட, எட்டி நின்று உடலை வளைத்து வணக்கம் கூறி, பின்னரே குருவை நெருங்குகிறார்கள்!

பேசி முடிந்த பிறகு மீண்டும் அதே 'வணக்கம்' செலுத்துகின்றனர்!

கராத்தே மாணவர்களுக்குப் பிரத்தியேக உடை உண்டு. தொள தொளவென்ற பைஜாமா, அதே மாதிரி முக்கால் கை தொள தொளப்பான சட்டை. (இதற்கு ஜப்பானியப் பெயர் 'கிமோனு') உடை தூய வெண்மையாகக் காணப்பட வேண்டும்! இது கண்டிப்பான நியதி. ஒவ்வொருவரின் இடுப்பிலும் (பெல்ட்) பட்டை காணப்படுகின்றது.

வெள்ளை, மஞ்சள், வெளிர்ப்பச்சை, நீலம், ஊதா, பழுப்பு (இதில் மூன்று ரகம்) கறுப்பு— ஆகிய வண்ணங்களில், அவரவர் தகுதிக்கு ஏற்ப மேல் சட்டைக்கு மேல் பட்டைத் துணி கட்டப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலேயே 'கறுப்புப் பட்டை' பெற்றவர் மணி ஒருவர்தான்—இதுவரை.

தமிழகப் போலீசாருக்கும், ராணுவத்தினருக்கும் மணி 'கராத்தே' கற்றுத் தந்திருக்கிறார்.

கேள்வி: போலீஸ், ராணுவம் தவிர உங்களிடம் எத்தனை மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் ?

பதில்: 1968லிருந்து இதுவரை 1500 மாணவர்கள் என்னிடம் பயின்றிருக்கிறார்கள். 'கராத்தே' கற்க வரும் மாணவர்களுக்குக் கடுமையான ஒழுக்க விதிகள் உண்டு. புகை பிடிக்கக் கூடாது. மரியாதை குறைவாக நடந்து கொள்ளக் கூடாது. மதுப் பழக்கம், இரவில் அதிக நேரம் கண் விழித்தல் இவையெல்லாம் கூடாது. இந்தக் கட்டுப்பாடுகளைச் சிறிதும் தளர்த்துவதில்லை !

கேள்வி: அப்படியானால் சிலர், பழகுவதை நிறுத்தி விடுவார்களே?

பதில்: பாதியில் நிறுத்துபவர்கள் நிறைய உண்டு ! அதனால் என்ன? இந்த அரிய கலையைப் பயிலும் தகுதி அவர்களுக்கு இல்லை என்றுதான் அர்த்தம். கராத்தே கற்பதால் உடல் வலிமை, ஆரோக்கியம், மனக் கட்டுப்பாடு, கடமை உணர்வு, தன் பொருளுக்கோ மற்றவர்கள் பொருளுக்கோ ஊறு ஏற்படாதவாறு பாதுகாக்கும் வீரம், தர்மத்தை மறவாத மனப் பக்குவம், பெரியோர்களிடம் மரியாதை முதலியன உருவாகும் !

கேள்வி: இந்தக் காலத்து மாணவர்களைக் கட்டியாள உங்களால் முடிகிறதா?

பதில்: முடிகிறது ! ஒரு சான்று சொல்கிறேன். சென்னையில் உள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றில் சில போக்கிரி மாணவர்கள் — பணக்கார வீட்டுப் பிள்ளைகள், அதிகாரிகளின் குழந்தைகள் - தங்கள் ஆசிரியர்களை ஆட்டிப் படைத்தனர். அடங்காத மாணவர்களை, அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கராத்தே கற்க என்னிடம் அனுப்பி வைத்தார். ஒன்றரை மாதத்தில் அவர்கள் போக்கு அடியோடு மாறிவிட்டது. தலைமை ஆசிரியரும், வகுப்பு ஆசிரியர்களும் பிரமித்துவிட்டார்கள் !

மாணவர்கள் உடலால் வீரர்களாகவும், மனத்தால் பண்பாளர்களாகவும் விளங்க உதவும் 'கராத்தே' கலைக்கு நம் நாட்டில் நல்ல எதிர்காலம் இருக்கிறது.

பேட்டி : சிவபாலன்

மௌனச் சூழலில் மகத்தான நடிப்பு

'ஸைபுல்ச்' என்ற புனைபெயருடைய வீடர் ஸீஃபெர்ட் என்ற ஜெர்மானியர் நிகழ்த்திய 'பான்டோமைம்' காட்சிதான் அது. இவரது நிகழ்ச்சிகளில் வசனமே இல்லை. ஆனால் அவரது பாவங்கள் அவர் பேச வேண்டிய வசனங்களை மானசீகமாக நமது செவிகளில் கூறிக் கொண்டிருந்தன.

பல்வேறு நிகழ்ச்சிகளை, பலருடன் சேர்ந்து உரையாடுவதை எல்லாம் ஒரே நபர் மேடை மீது அபிநயித்துக் காட்டி நடிக்க முடியுமா? பேசவே கூடாது! எல்லா விதமான பாவங்களையும் கை, வாய், கண், விரல்கள் போன்ற அங்க அசைவுகளின் மூலமே விளக்க வேண்டும்! நிசப்தமே சூழ்நிலையாகக் கொண்டு பின்னணி இசைகூட இல்லாமல் தனி நபர் ஒருவரே பல ரசமான காட்சிகளை நடத்திக் காட்ட வேண்டும்! இது சாத்தியமே என்பதைச் சென்னை மியூசியம் தியேட்டரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நிரூபித்தது.



ஒருவரே ஒன்பது பேராக நடித்து எத்தனை எத்தனை உணர்ச்சிகளை அநாயாசமாக வெளிப்படுத்தி அவையோரைப் பிரமிப்பில் மூழ்கடித்து விட்டார்! பல மாடிக் கட்டிடங்களில் ஏறுவார். பல வளைவுகளையும் திருப்பங்களையும் கடந்து கடந்து நாமும் அவருடன் ஏறுவோம். நமக்கும் மூச்சு வாங்கும். பல படிகளை முக்கி முனகியபடி ஏறும் ஆயாசம் நமக்குமே ஏற்பட்டு விடும். வெறு வெளியில் மாடியையும் பல படிகளையும் கைப்பிடியையும் கற்பனையில் உருவாக்கிக் கொண்டு அவர் அபிநயித்துக் காட்டுவது அற்புத நடிப்பு. இன்னும் பல்வேறு குணச் சித்திரங்களைக் கொண்ட பாத்திரங்களை விளக்கிக் காட்டி அவர்களே உரையாடுவதாகவும் கைகுலுக்குவதாகவும் சிரிப்பதாகவும் வெட்கப்படுவதாகவும், வேதனைப்படுவதாகவும் நடித்து மன நிறைவோடு ரசிகர்கள் ஓயாமல் கைதட்டும்படி செய்தார் அவர்.

மனிதர்களின் குணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி வெற்றி கண்டது இருக்கட்டும். ஒரு ஈ — அது பசை தடவிய காகிதத்தில் சிக்கிக்கொள்ளும்போது அதன் நிலை எப்படி இருக்கும்? அதன் அங்கங்கள் எப்படித் துடிக்கும் என்பதை இவர் நடித்துக் காட்டியதைப் பாராட்ட வார்த்தைகளே கிடையாது!

மாக்ஸ் முல்லர் பவன், சென்னையில் இவரது அற்புதமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

—கௌசிகன்

இன்று இராஜாஜியின் கதைகளை இலங்கைவாழ் சிங்கள மக்களும் படித்துச் சுவைக்குமாறு அவை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் உள்ளது போல் சுவை குன்றாது சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும்.

'குலஹீனயோ' என்ற இந்நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துப் புகழீட்டியவர் திரு ம. ம. நாணயக்கார.

ராஜாஜியின் சிறுகதைகளை முதன் முதலாகச் சிங்களத்தில் மொழிபெயர்த்த பெருமை இவருக்கே உரியது.

''குலஹீனயோ' நூல் இலங்கை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, மாண்புமிகு அமைச்சர் ரீ. பீ. இலங்கரத்ன அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

படத்தில் கலாநிதி கோபால் பிள்ளை மகாதேவா, ம. ம. நாணயக்கார, அமைச்சர் இலங்கரத்தின ஆகியோரைக் காணலாம். - க. கனகரத்தினம் >





< தலைநகரில் ராமகிருஷ்ணபுரம் சௌத் இந்தியன் சொஸைட்டி என்ற நிறுவனத்தின் ஆண்டு விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

அச்சமயம் ''ராஜாஜியின் 95வது பிறந்த நாளையொட்டி உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக ''ராஜாஜி ஞாபகார்த்த டிரஸ்ட்'' சார்பில் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்ரீமதி மதுரம் பூதலிங்கம் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினர். படத்தில் திரு பூதலிங்கம் அவர்களையும் காணலாம்.

சென்னை மாவட்டக் கூடைப் பந்தாட்டக் கழகம் பத்தாவது ஆண்டு விழாவை மூன்றுவது அகில இந்தியக் கூடைப் பந்தாட்டப் போட்டி நடத்திக் கொண்டாடியது. இறுதியாட்டத்தில் ஐ. ஏ. பி. யைக் கடுமையான ஆட்டத்தில் வென்றது ஐ. வி. எப். குழு. அம்பாடி எண்டர்பிரைஸஸ் ஸ்தாபன டைரக்டர் திரு எம். ஏ. அழகப்பன் பரிசு வழங்கினர். >





< நாட்டிய கலாலயத்தின் மாணவிகளும், பரத நாட்டிய வித்துவான் திரு கே. என். தண்டாயுத பாணி பிள்ளை அவர்களின் மாணவிகளுமான கீதா, உமா இருவரும் அண்மையில் மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நடனமாடினர். நல்ல சாதகத்தின் பலனாக லய சுத்தமான பயிற்சியைப் பெற்றிருக்கின்றனர். வண்ணச் சுடர் விளக்குகளாகத் தோன்றிச் சிறுமிகள் ஆடிய நடன நிகழ்ச்சி ரசிகர்களின் நல்லாதரவைப் பெற்றது.

நுணலும் தன் வாயால்

கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, ஜான் ஸ்மித் என்னும் அந்தப் பணக்காரர் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்தார். பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். ஆனால் குற்றம் ருஜுவாகவில்லை.

ஆகவே நீதிபதி லார்ட் மான்ஸ்பீல்ட் ஜூரிகளைப் பார்த்து, ''போதுமான ருஜுக்கள் கிடைக்காததால் வழக்கைத் தள்ளிவிடலாம்!'' என்று யோசனை கூறினார். ஜூரிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டு, சரியென்று சொன்னார்கள். உடனே இருதரப்பு வக்கீல்களும் மேஜையில் இருந்த தங்கள் வழக்குக் கட்டுக்களை எடுத்துக் கொண்டு கிளம்ப ஆரம்பித்தார்கள். அந்தச் சமயம் பார்த்துக் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டு இருந்த ஜான் ஸ்மித் பேச ஆரம்பித்தார்:

''கனம் நீதிபதி அவர்களே! என்னை விசாரிக்காமல், என்னை ஒரு வார்த்தையும் பேசவிடாமல் தாங்கள் வழக்கை முடிப்பதை நான் ஆட்சேபிக்கின்றேன். நான் முன்பின் அறியாத ஹென்றி தாம்சன் என்பவரைக் கொலை செய்ததாக என் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. போதுமான சாட்சியம் இல்லை என்ற ஒரு காரணத்துக்காக மட்டும் வழக்கைத் தள்ளுபடி செய்தால் என் மீது படிந்துள்ள மாசு போகாது. நான் பேசவோ, என் பக்கமாக ஒரு சாட்சியைக் கூப்பிட்டு விசாரிக்கவோ எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ஆகவே, நான் என் வீட்டுச் சமையல்காரியைச் சாட்சியாகக் கூப்பிட அனுமதி அளிக்க வேண்டும்.''

அவர் இப்படிப் பேசியது அவருக்கே ஆபத்தாக விளைந்தது! சற்று நேரத்துக்கு முன்னால்தான் விடுதலையாக இருந்த அவர், அந்தச் சமையல்காரியின் சாட்சியம் 'காரணமாக, குற்றவாளி என்பது தீர்மானிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்!

நடந்த கதை வருமாறு:

மோட்டார் கார்கள் இல்லாமல் மக்கள் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்த காலம் அது. ஜான் ஸ்மித் என்னும் அந்தப் பணக்காரர் தம் பெரிய வீட்டு வாசலின் முன்னால் நின்று கொண்டிருந்த சமயம், யாரோ ஒருவர் குதிரையின் மீது அங்கு வந்து சேர்ந்தார். லண்டன் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த



கெடுமீ



அவர் அன்றைய இரவுப் பொழுதை ஜான் ஸ்மித்தின் வீட்டில் கழிக்க உத்தரவு கேட்டார். ஜான் ஸ்மித்தும் 'சரி' என்ருர். இரவுச் சாப்பாடு ஆனதும் தமக்கென்று ஒதுக்கப் பட்ட தனி அறையில் அவர் தூங்கச் சென்ருர்.

அடுத்த நாள் காலை அவரை எழுப்புவதற்காக வேலைக்காரன் கதவைத் தட்டினன். ஆனல் பதில் வராமல் போகவே கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். அங்கே படுக்கையில் அந்த ஆள் செத்துக் கிடந்தார்! ஆனல் அவர் மீது ஒரு காயமும் காணப் படவில்லை.

போலீஸாருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அந்த ஆள் யார் என்று ஜான் ஸ்மித்துக்கும் தெரியாது; வேறு யாருக்கும் தெரியாது. அவர் யார் என்று அடையாளம் காட்டும் ஒரு பொருளும் அவர் சட்டையில் இல்லை. ஆகவே, 'முன்பின் தெரியாத ஒருவர் தற்செயலாக இறந்து விட்டார்' என்று தீர்ப்புக் கூறப்பட்டு, அவர் புதைக்கப் பட்டார்.

ஆனல் இந்தச் செய்தி மெள்ள மெள்ளப் பரவ ஆரம்பிக்கவே, ஜான் ஸ்மித்தைப் பற்றிய தகவல்கள் மெள்ள மெள்ள வெளிவர ஆரம்பித்தன. நாற்பத் தைந்து வயது ஆகும் ஜான் ஸ்மித், ஒரு காலத்தில் கடன் தொல்லைகளால் அவதிப்பட்டார் என்றும், சில தொழில்களில் ஏமாற்றும் செய்துள்ளார் என்றும், தகவல்கள் கிட்டின. அவருக்கு அத்

நாடோடி

தனை பணம் ஏது என்றும் மக்கள் கேட்கத் தொடங்கினர்.

சம்பவம் நடந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு, தாம்சன் என்னும் ஒருவர் ஜான் ஸ்மித்தைப் பார்க்க வந்து சேர்ந்தார். தம்முடைய பெயர் தாம்சன் என்றும், தம்முடைய சகோதரர் ஹென்றி தாம்சனைப் பல மாதங்களாகக் காணவில்லை என்றும், ஒருவேளை இறந்து போனவர் தம்முடைய சகோதரராக இருக்கலாமோ என்று தாம் சந்தேகப்படுவதாகவும் கூறினார். இறந்து போன ஹென்றி தாம்சனின் குதிரையையும் ஆடைகளையும் அடையாளம் கண்டு இறந்தது தம் சகோதரர் ஹென்றி தாம்சன்தான் என்று அவர் சொல்லவே, புதைக்கப்பட்டிருந்த ஹென்றி தாம்சனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

''இது என் சகோதரர் ஹென்றி தாம்சன் தான். இவர் ஒரு பெரிய லண்டன் நகை வியாபாரி'' என்று அவர் கூறினார். உடனே அவர் அங்குள்ள மாஜிஸ்டிரேட்டிடம் மனுச்செய்து கொள்ள, அவர்கள் ரகசியமாகப் புலன் விசாரித்து, ஹென்றி தாம்சனைக் கொலை செய்த குற்றத்துக்காக ஜான் ஸ்மித்தைக் கைது செய்தனர்.

வழக்கை ஆரம்பித்த பிராசிகியூஷன் தரப்பு வக்கீல் பின்வருமாறு கூறினார்:

''கொலை செய்யப்பட்ட ஹென்றி தாம்சன் ஒரு பிரபல லண்டன் நகை வியாபாரி. அவர் தம் சட்டையில் நிறைய வைரங்களும், தங்கமும் வைத்திருந்தார். ஆனால் அவை போன இடம் தெரியவில்லை. அவை கைதிக் கூண்டில் நிற்கும் ஜான் ஸ்மித்திடமும் காணப்படவில்லை. ஜான் ஸ்மித்தும், ஹென்றி தாம்சனும் முன் பின் பழக்கம் இல்லாதவர்கள். ஆகவே, ஹென்றி தாம்சனைக் கொலை செய்வதற்கு வேண்டிய ஒரு முகாந்திரமும் ஜான் ஸ்மித்துக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

''இருந்தும் இந்தக் கொலை வழக்கில் சில சந்தேகப்படும்படியான தடயங்கள் கிடைத்துள்ளன. ஹென்றி தாம்சன் விஷம் சாப்பிட்டு இறந்துள்ளார் என்று நிரூபணம் ஆகியிருக்கிறது. இந்த விஷம் ஜெர்மன் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு தனிப்பட்ட விஷம். இந்த விஷத்தை ஹென்றி தாம்சனுக்கு யார் கொடுத்தது?

''இல்லை. அவர் தற்கொலை செய்துகொண்டாரா? ஆனால் தற்கொலை செய்துகொள்ள அவருக்கு ஒரு காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை.

''ஜான் ஸ்மித்தின் வீட்டில் அவரைத் தவிர இன்னும் இரண்டு பேர்கள்தான் இருந்தனர். அவருடைய சமையல்காரி, வேலைக்காரன், இவர்கள் இருவர் மட்டும்தான் உண்டு. வேலைக்காரன் குதிரை லாயத்துக்குப் பக்கத்திலுள்ள அறையில் தூங்குவது வழக்கம். அன்று இரவு அங்குதான் தூங்கினான். சமையற்காரி வீட்டின் மேலண்டைப் பக்க அறையிலும், ஜான் ஸ்மித் வீட்டின் கீழண்டைப் பக்க அறையிலும் தூங்குவது வழக்கம். கொலை செய்யப்பட்ட ஹென்றி தாம்சன் சமையற்காரி அறையின் பக்கத்து அறையில் படுத்துத் தூங்கினார்.

''சம்பவம் நடந்த அன்று விடியற்காலை மூன்று மணி அளவில் கொளுத்திய மெழுகுவத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு யாரோ ஜான் ஸ்மித்தின் அறையிலிருந்து சமையற்காரியின் அறைக்குள் செல்வதை வீட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்த ஒருவர் பார்த்திருக்கிறார். சமையற்காரியின் அறையை அடைந்ததும் மெழுகுவத்தியின் வெளிச்சம் ஒரு கணத்துக்கு மறைந்தது. பிறகு மெழுகுவத்தியின் கூட யாரோ இரண்டு பேர் சமையற்காரியின் அறையிலிருந்து ஜான் ஸ்மித்தின் அறைக்குச் செல்வது தெரிந்தது. அந்த இருவரும் ஜான் ஸ்மித்தின் அறையை அடைந்ததும் மெழுகுவத்தி அணைக்கப்பட்டு விட்டது!

''வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த அந்த நபரின் சாட்சியத்தைக் கொண்டுதான் ஜான் ஸ்மித் கைது செய்யப்பட்டார். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் ஜான் ஸ்மித் கைது செய்யப்பட்டதிலிருந்து சமையற்காரி எங்கேயோ மாயமாக மறைந்து விட்டாள். இதுவரை அகப்படவில்லை. மெழுகுவத்தியைக் கண்ட நபரைப் போன வாரம் மீண்டும் விசாரித்தோம். அவர் தாம் நின்றதாகச் சொன்ன இடத்திலிருந்து அவர் மெழுகுவத்தி வெளிச்சத்தைப் பார்த்திருக்க முடியுமா என்று பரிசோதனை செய்தோம். அவரால் பார்க்க முடியும் என்று நிரூபணமாயிற்று. ஆனால் மெழுகுவத்தியை எடுத்துச் சென்றவர் ஹென்றி தாம்சன் தூங்கிக்கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தாரா இல்லையா என்பதை அவரால் அங்கிருந்து பார்த்திருக்க முடியாது.

''பரிசோதனை நடந்து கொண்டிருந்த சமயம் திடீரென்று அந்த நபருக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அந்த இரண்டு உருவங்களும், மெழுகுவத்தியுடன் ஜான் ஸ்மித்தின் அறைக்குள் நுழைந்த பிறகு, மெழுகுவத்தி அணைக்கப்படுவதற்கு முன்னர் அதன் வெளிச்சம் இரண்டு தடவை ஏதோ ஒரு சாமானால் மறைக்கப்பட்டது போன்று தோன்றியது என்பதுதான் அந்த விஷயம். ஆனால் ஜான் ஸ்மித்தின் அறையில் அப்படி வெளிச்சத்தை மறைக்கக் கூடிய ஒரு பொருளையும் காணவில்லை.

''இந்த வழக்கு விஷயமாக இன்னொரு தடயமும் கிடைத்துள்ளது. அதுதான் ஒரு சிறு கண்ணாடிக் குப்பியின் கண்ணாடி அடைப்பான். இது கைதியின் வீட்டில் கிடந்தது. சில மருந்துகளை ஆவியாகப் போகாமல் காப்பாற்ற இத்தகைய கண்ணாடி அடைப்பான்கள் சில குப்பிகளுக்குப் பொருத்தப்படுவது வழக்கம். ஆனால் அந்தக் கண்ணாடி அடைப்பான் யாருக்குச் சொந்தம்? அது எப்படிக் கைதியின் வீட்டில் கிடந்தது என்பது நிரூபணமாகவில்லை.''

பிராசிகியூஷன் தரப்பு வக்கீல் இப்படிப் பேசி முடித்த பிறகுதான் நீதிபதி வார்ட் மான்ஸ்பீல்ட் போதிய சாட்சியங்கள் இல்லாத அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தால் என்ன என்று கேட்டதும், கைதி ஜான் ஸ்மித் வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டதும்.


வழக்கு மீண்டும் தொடர்ந்தது. ஜான் ஸ்மித் சொன்னார்: ''நான் அன்று விடியற்



வெள்ளைத் துணி-உடைகளை மிகப்பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு

ராபின் ப்ளூ தான் தேவை

(என்பதை லட்சக்கணக்கான குடும்பப் பெண்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர்)



வெள்ளைத் துணி-உடைகளை, சோப்பு அல்லது டிடர்ஜெண்ட் கொண்டு வெளுக்கச் செய்வது மட்டும் போதாது. மிகப் பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு அவற்றை ராபின் ப்ளூவில் மூழ்கச் செய்தெடுக்க வேண்டும். ஒரு வாளி தண்ணீரில் ஒரு சிட்டிகை ராபின் ப்ளூ அற்புதமாக வேலை செய்யும்.

ராபின் ப்ளூ

ARBC-38TAM

போஷாக்கு அவசியம்

குழந்தை முதல் முதியோர் வரை குதூகல வாழ்க்கைக்கு

உங்கள் உணவில் பல ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருக்கலாம். ஆல்போ-சாங் அக்குறையைப் போக்கி, அச்சத்துக்களை உங்களுக்கு அளிக்கிறது. கால்ஷியம், பாஸ்பேட்டுகள், கனிச்சத்துக்கள், அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள், சக்தி மிக்க இந்திய ஔஷதங்கள் ஆகியவற்றினால் ஆன ஆல்போ-சாங் நல்ல ஆரோக்கியத்தைப் பெற சிறந்த ஒரு டானிக். வளரும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், வயதானவர்கள் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே ஏற்றது ஆல்போ-சாங்.

ஆல்போ-சாங் நீங்கள் உண்ணும் சாதாரண உணவை முழுமையாக்கி, ஜீரணசக்தியைத் தூண்டி விடுகிறது. உணவுச் சத்துக்கள் உடலில் நன்கு கிரகிக்கப்படுவதற்கு உதவுகிறது. அத்துடன் உங்கள் நரம்புகள் சோர்ந்து விடாதபடி பாதுகாக்கிறது. ஆல்போ-சாங் பவுடர் வடிவிலும், மாத்திரை வடிவிலும் கிடைக்கிறது. மாத்திரைகள் சர்க்கரை சேர்க்கப்படாதவை, எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களும் சாப்பிடலாம்.





ஆல்போ-சாங்

உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் இயற்கையான ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்கிறது.

ஜே & ஜே. டீஷேன்

லேபொரேட்டரீஸ் பிரைவேட் லிமிடெட்.

ஹைதராபாத்

அறுவை சிகிச்சை இன்றியே மூலநோயைக் குணப்படுத்த அபூர்வ மருந்து !



பிரிபரேஷன் எச் *

அமெரிக்க டாக்டர்களால் பரிட்சிக்கப்பட்டது.

- திசுக்களில் கனமைச்சலை நிறுத்துகிறது.
- வலியிலிருந்து உடனே நிவாரணமளிக்கிறது.
- மூலநோய் கடுமையாக இல்லாவிட்டால், அறுவை சிகிச்சை இன்றியே மூலத்தைச் சுருக்க உதவுகிறது.
- இதனால் எண்ணெய்ப்பசை கிடைக்கிறது; மலப்போக்கு வலியின்றி எளிதாகிறது.

இலவசம்! மூலநோய் பற்றிய விளக்கப் புத்தகமொன்றை இலவசமாகப் பெற (25 பைசா தபால் தலையுடன்) இன்றே எழுதுக. இம் முகவரிக்கு : டிபார்ட்மெண்ட், PH-66, த.பெ.எண். 10133, பம்பாய்-400 001.

* Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

743 PH-92 Tam

காலை மூன்று மணி அளவுக்கு மெழுகுவத்தியை ஏற்றிக் கொண்டு சமையற்காரியின் அறைக்குச் சென்றது உண்மைதான். எனக்கு அடிக்கடி திடீரென்று குளிர் ஜுரம் வருவது வழக்கம். அப்பொழுது என் அறையில் உள்ள கணப்பு அடுப்பை மூட்டச் சொல்லுவதற்காக என் சமையற்காரியைத் தேடிப் போனேன். அன்றும் அப்படித்தான் போனேன். சந்தேகமாக இருந்தால் நீங்கள் என் சமையற்காரியை விசாரித்துக் கொள்ளலாம். என் சமையற்காரி எங்கும் மாயமாக மறைந்துவிடவில்லை. நான் தான் அவளை என் வக்கீல் வீட்டில் ஒளித்து வைத்தேன். ஆகவே அவளைச் சாட்சியாக விசாரித்தால் நான் நிரபராதி என்பது புலனாகும்'' என்று சொல்லிச் சமையற்காரியைச் சாட்சிக் கூண்டில் ஏறச் சொன்னார்.

சமையற்காரியை விசாரணை செய்ததில் ஜான் ஸ்மித் சொன்ன மேற்கூறிய விஷயம் உண்மைதான் என்பது நிரூபணமாயிற்று.

பிராசிக்யூஷன் வக்கீல் சமையற்காரியைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார். அவர் மனத்தில் பளிச்சென்று ஒரு விஷயம் தோன்றியது. ஜான் ஸ்மித்தின் அறையில் ஏதோ ஓர் இரகசிய அலமாரி இருக்க வேண்டும். அதன் கதவு இரண்டு தடவை திறந்து மூடப்பட்டதுதான் இரண்டு தடவை மெழுகுவத்தி வெளிச்சத்தை மறைத்திருக்க வேண்டும் என்பதுதான் அது.

ஆகவே, சமையற்காரியை, ''உன் வயது என்ன?'', ''நீ எத்தனை வருஷங்களாக ஜான் ஸ்மித்தின் வீட்டில் வேலை செய்திருக்கிறாய்?'' என்று இப்படிச் சாதாரணக் கேள்விகளாகக் கேட்ட பிறகு, ஏதோ மற்றொரு சாதாரண விஷயத்தைக் கேட்பது போல, ''நீ ஜான் ஸ்மித்தின் அறையில் இருந்த போது மெழுகுவத்தி மேஜையின் மீதுதான் வைக்கப்பட்டிருந்தது, இல்லையா?'' என்று கேட்டார்.

''ஆம்.''

''சரி. அந்த அறையில் உள்ள அலமாரி ஒரு தடவைதான் திறக்கப்பட்டதா, அல்லது இரண்டு தடவை திறக்கப்பட்டதா?''

இதற்குச் சமையற்காரி பதில் சொல்லவில்லை.

பிராசிக்யூஷன் வக்கீல், ''நீ என் கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஜான் ஸ்மித் அலமாரியிலிருந்து மருந்தை எடுத்த பிறகு, அதன் கதவை அப்படியே விட்டு வைத்தாரா, அல்லது மூடினாரா?'' என்றார்!

''மூடினார்.''

''அப்படியானால் மருந்துப் புட்டியைத் திரும்ப வைப்பதற்காக அது திரும்பவும் திறக்கப்பட்டது. அப்படித்தானே?''

''ஆம்.''

''அப்படியானால் அதன் திறந்த கதவு, மெழுகுவத்திக்கும், அந்த அறையின் ஜன்னலுக்கும் இடையில் இருந்திருக்க வேண்டும்.''

''ஆம்.''

''ஆமாம், அலமாரி இருப்பது அறையின் இடது புறம் என்று சொன்னாயா, வலதுபுறம் என்று சொன்னாயா?''

''இடதுபுறம்.''

''அலமாரியின் கதவைத் திறந்தால் அது சத்தம் போடுமா?''

''போடாது.''

''போடாது என்பது உனக்கு எப்படித் தெரியும்? நீயே திறந்து பார்த்திருக்கிறாயா? அல்லது ஜான் ஸ்மித் திறக்கப் பார்த்திருக்கிறாயா?''

''நான் ஒருபொழுதும் அந்தக் கதவைத் திறந்ததில்லை. ஏனென்றால் அந்த அலமாரியின் சாவி என்னிடம் கிடையாது. ஜான் ஸ்மித்திடம் தான் இருக்கும்.''

இப்படிச் சொல்லிவிட்டு, சமையற்காரி, ஜான் ஸ்மித்தைத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது ஜான் ஸ்மித்தின் முகம் வெளிறிட்டுக் கிடந்ததைப் பார்த்து, அவள் பயந்து, 'ஹோ' வென்று கதறி மூர்ச்சையாய் விழுந்தாள். தான் தவறு பண்ணி விட்டோம் என்பதை அவள் உணர்ந்து விட்டாள். தாம் இனித் தப்ப முடியாது என்பதை ஜான் ஸ்மித்தும் உணர்ந்து விட்டார்.

உடனே கோர்ட்டில் ஏக அமளி. வைத்தியர் வந்து சமையற்காரிக்கு வைத்தியம் செய்தார். கோர்ட் மீண்டும் மாலை ஐந்து மணிக்குக் கூடும் என்று சொல்லி விட்டு நீதிபதி கோர்ட்டைக் கலைத்தார்.

மாலை ஐந்து மணிக்குக் கோர்ட் கூடிய போது பிராசிக்யூஷன் தரப்பு வக்கீலைக் காணோம். அவருடைய ஜூனியர் சமையற்காரியைக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார். ''நீ இந்தக் கண்ணாடி அடைப்பானைப் பார்த்திருக்கிறாயா?''

''பார்த்திருக்கிறேன்.''

''இது யாருக்குச் சொந்தம்?''

''ஜான் ஸ்மித்துக்கு.''

''இதை நீ கடைசியாக எப்பொழுது பார்த்தாய்?''

''ஹென்றி தாம்சன் இறந்த அன்று.''

அந்தச் சமயம் பிராசிக்யூஷன் தரப்பு வக்கீல் உள்ளே நுழைந்தார். அவர் கையில் ஒரு தட்டு இருந்தது. அதில் வைரக் கற்களும், தங்கக் கட்டிகளும் இருந்தன. கூட ஒரு கண்ணாடிக் குப்பியும் இருந்தது. அதைக் கண்டதும் ஜான் ஸ்மித் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

இரண்டு தடவை அலமாரியின் கதவு திறக்கப்பட்டது என்று சமையற்காரி சொன்னதை வைத்துக் கொண்டு அவர் ஜான் ஸ்மித்தின் அறைக்குள் நுழைந்து அலமாரியைத் தேடினார். ஆனால் அங்கு ஓர் அலமாரியும் காணப்படவில்லை. நிச்சயமாக அங்கு ஓர் அலமாரி இருந்தாகவேண்டும் என்று அறையின் இடது பக்கச் சுவரை இடிக்கச் சொன்னார். அப்பொழுது சுவரின் பின்னால் ஒளிந்திருந்த அலமாரி தென்பட்டது. அதில் ஹென்றி தாம்சன் வைத்திருந்த வைரக் கற்களும், தங்கக் கட்டிகளும் இருந்ததோடு, விஷம் இருந்த கண்ணாடிப் புட்டியும் இருந்தது. இரகசிய அலமாரியைத் திறக்கும் விசைகளும் பிறகு கண்டுபிடிக்கப்பட்டன.

ஹென்றி தாம்சனை, ஜான் ஸ்மித்துதான் கொன்றார் என்று நீதிபதியும் ஜூரர்களும் தீர்மானிக்க வெகு நேரம் ஆகவில்லை. அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பாவம், நுணலும் தன் வாயால் கெட்டது.

எல்லா ஃபேன்களுமே காற்று வீசவே தயாராகி வருகின்றன—

சத்தமில்லை...மெத்தச் சிறப்பான இயக்கம்...அதுவே ராலிஃபேன், அதன் விசேஷ டிஸைன் அமைப்புக் காரணமாக, எந்த சாய்மானக் கோணத்திலும் மிகச் சரளமாக ஓடிக் கொண்டிருக்கிறது. 'பிளேட் கான்ட்டூர்'களின் நூதன அமைப்பினால், விரிந்த சுற்றளவிற்கு சீரான, குளுமையான காற்றோட்டமளிக்கிறது. பிளேடுகள் மிகக் கச்சிதமாகச் சமனிலைப்படுத்தப் பட்டிருப்பதால் மோட்டார் மீது பாரம் சீராக ஏறுகிறது; ஃபேன் நீண்டகாலம் உழைக்கிறது. எனவே மற்ற ஃபேன்கள் கிழடுதட்டிப் பயனற்றுப் போகும் கால கட்டத்திலும், உங்கள் ராலிஃபேன் தொல்லையற்று, சீராக, அழகிய முறையில் ஓடிக் கொண்டே இருக்கிறது. அதுமட்டும் அன்று, அதன் சிறப்புகள் இன்னும் பல உண்டு: □ சரியாக அமைக்கப்பட்ட அதன் ஆதாரம் எடையில் குறைந்தது; எனினும் வலுவானது. □ 'ஸ்டோவ் எனமல்' முறையில் 'இன்ஃப்ரா-ரெட் பேக்கிங்' வண்ணப் பூச்சு காலமெல்லாம் கவர்ச்சி மங்காமல் பளபளப்புடன் இருக்கிறது. □ தேர்ந்தெடுக்க வசதியாக கவர்ச்சியான ஏழு 'டு-டோன்' வண்ணங்கள். சைஸ்கள்—டீலக்ஸ்: 400 மிமீ. மற்றும் 300 மிமீ. எலிகண்ட்: 400 மிமீ.

தாஜ்மஹாலே தோற்றது!

ருக்மிணி பார்த்தசாரதி

உடல் அனலாகத் தகிக்கிறது ஒரு கணம். மறுகணம் குளிர் காற்று அறைந்துவிட்ட மாதிரி நடுங்கிச் சிலிர்க்கிறது. தொண்ணூறு வயதைக் கடந்தாகிவிட்டது. உடலென்ன, உயிரே பலவீனப்பட்டுப் போய்விட்டது.

மரணம் அவனைக் கண்டு முறுவலிக்கிறது. ''வா!'' என்று கைநீட்டி அழைக்கிறது. ஆனால் அந்த முறுவலைக் கண்டு அவன் பீதி கொள்கிறான். மனமறிந்து செய்த எத்தனையோ கொலைகளுக்குத் தண்டனை இல்லாமல் போய்விடுமா ? முறுவலோடு அழைக்கும் மரணம் எந்தவிதமான சித்திரவதைகளை வைத்துக் கொண்டு காத்திருக்கிறதோ ?

புரண்டு புரண்டு படுக்கிறான் ஔரங்கஜேப். எந்த நிலையிலும் உறக்கம் பிடிக்கவில்லை. மனம் உறங்கினால்தானே உடல் உறங்கும் ?

சட்டென்று தென்றல் வீசினதுபோல் ஒரு மென்மையான ஸ்பரிசத்தை நெற்றியில் உணர்கிறான் கிழ மன்னன். கண்களைத் திறந்து பார்க்கிறான். ஜேப்புன்னிஸா கையில் பால் கிண்ணத்தோடு நிற்கிறாள். அருள்மயமான புன்னகை.... அவன் சட்டென்று தைரியம் அடைகிறான்.

மெள்ளத் தலையை உயர்த்துகிறான் ஔரங்கஜேப். பால் கிண்ணத்தை அவனுடைய உலர்ந்த வெளிறிய உதட்டில் பதிக்கிறாள் அவள். அவன் வாய் வாயாகப் பருகுகிறான். அவ்வப்போது கண்களை உயர்த்தித் தன் மகளுடைய கருணை முகத்தைப் பார்க்கிறான். நெஞ்சை மெத்தென்று வருடினாற்போல் நிம்மதி பிறக்கிறது.....

காலியான கிண்ணத்தோடு அவள் அறையைவிட்டு நடந்து செல்கிறாள். ''நில்! போகாதே ! நீ போய்விட்டால் என் மனத்தில் அந்தகாரம் படிந்து விடுகிறது. நீ அருகில் இருந்தால்தான் நான் சிறிதேனும் ஆறுதல் அடைகிறேன்!'' என்று அவன் இதயம் கதறுகிறது...... ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

கண்களை மறுபடியும் மூடிக் கொள்கிறான். ஜேப்புன்னிஸாவின் எழில் தோற்றம் கண்







ணுக்குள் நிரந்தரமாகப் பதிந்துவிட்ட மாதிரி மகிழ்வூட்டுகிறது. சுருள் கேசம்.... வெண்மை நிறம்.... கருணைக்கே இருப்பிட மான விழிகள்..... முறுவல் மாறாத வதனம்.

''இப்படித்தான் இருப்பாள் என் சகோதரி ஜஹானாரா. என் தந்தை ஷாஜஹானுக்குப் பணிவிடை செய்யவென்றே திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்நாளை வீணடித்துக் கொண்டாள், பைத்தியக்காரி!'' என்று நினைத்துக் கொள்கிறான் ஔரங்கஜேப்..... அந்த நினைவைக் கத்திரித்துக் கொண்டு ஈட்டியாய் மற்றோர் எண்ணம் இதயத்தில் பாய்கிறது. ''எனக்குப் பணிவிடை செய்யவென்றே திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறாளே என் மகள்? ஜேப்புன்னிஸா அவளும் பைத்தியக்காரிதானா?''

நெஞ்செல்லாம் மறுபடியும் கசக்கிறது. இனம் விளங்காத பீதி அவனைக் கவ்வுகிறது. மரணம் நெருங்கிவிட்டதை அவன் உணர்கிறான். ஆனால் அந்த மரணத்தை வரவேற்கும் தைரியம் இல்லையே! வாழ்நாளெல்லாம் பிறருடைய கண்ணீரையும் இரத்தத்தையும் கண்டுவிட்டான். செவிகளில் ஒலித்ததெல்லாம் சாபங்கள், ஓலங்கள், ஆசீர்வாதமாக ஏதாவதொரு வாக்கியத்தை நினைவில் கொண்டு வந்து நிறுத்த முடிந்தால் இந்தப் பீதி போய்விடும்.

இதயம் கதறுகிறது..... ''நான் இப்போது கிழவன், பலவீனமானவன்.....நிர்வாணமாக உலகில் பிறந்தேன். என் பாபங்களை மட்டுமே சுமந்து செல்கிறேன்..... என் வாழ்நாட்களை விரயமாக்கி விட்டேன்; என் பிரஜைகளை நான் இரட்சிக்கவில்லை. அல்லா எனக்கு என்ன தண்டனை விதிப்பாரோ? அவருடைய கருணைக்காக ஏங்குகிறேன்.... ஆனால் என் பாபச் செயல்களை நினைக்கும் போது கருணை கிடைக்காது என்று நடுங்குகிறேன்..... காலம் கடந்து விட்டதே!''

கண்களைத் திறக்கிறான் ஔரங்கஜேப்.... வெளிச்சம் கண்களைக் கூச வைக்கிறது. மறுபடியும் கண்களை மூடிக் கொள்கிறான். காட்சிகள் மாறுகின்றன. அவனுடைய

வாழ்நாளின் சில முக்கிய சம்பவங்கள் அவன் மனக் கண் முன்னே படமாக விரிகின்றன.

சகோதரர்களைக் கொன்றாகி விட்டது. சிம்மாசனம் ஏறுவதன் முதல் கட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டான் ஔரங்கஜேப். இரண்டாவது கட்டத்தையும் இதோ நிறைவேற்றி விட்டான். தந்தை ஷாஜஹான் இப்போது அவனுடைய கைதி!

இளமையும் வெற்றியுமே வெறியாகக் கண்களில் மின்ன, ஆணவத்தோடு நின்றான் ஔரங்கஜேப். எதிரே கூனிப் பணிந்து நின்றதோ, மாஜி மன்னன் ஷாஜஹான்!

இந்த நாடகத்துக்குக் காட்சிபோல் ஜன்னல் வழியே தாஜ்மஹால் தெரிந்தது!

ஷாஜஹானால் இதை நம்ப முடியவில்லை. துன்பக் கனவா இது என்று ஒரு கணம் மயங்கினான். ஆனால் மகனின் கேலிச் சிரிப்பு அந்த மயக்கத்தைப் போக்கிற்று.

நகைச் சுடிச் சுவை!

மார்க் ட்வைன் ஒரு தடவை மெட்ரோபாலிடன் மியூஸியத்துக்கு வந்திருந்தார். அவரிடம் ''உங்கள் கைத்தடியை உள்ளே எடுத்துச் செல்லலாகாது. இங்கேயே வைத்துவிட்டுப் போங்கள்!'' என்றார் மியூஸியம் பணியாளர். காட்சிசாலைக்கு வருவோரின் உடைமைகளைக் காப்பதற்கென்றே வேலைக்குஅமர்த்தப்பட்டிருப்பவர் அவர். ''கைத்தடியைக் கைவிட்டுச் செல்வதா?'' என்று ஆசிரியர் மார்க் ட்வைன் கோபம் கொண்டதாக நடித்தார். ''கைத்தடியை இங்கே விட்டுவிட்டுச் சென்றால் புகழ்பெற்ற வண்ண ஓவியங்களில் நான் எப்படித் துளைவிட்டுச் சோதித்துப் பார்க்க முடியும்?'' என்று கண்களைச் சிமிட்டிக் கேட்டார்.

- பி. எஸ். எம்.



''இனி உங்கள் வாழ்க்கையில் எஞ்சிய நாட்களை நீங்கள் இன்பமயமாகக் கழிக்கலாம், உங்கள் பேகமின் சமாதியைத் தரிசித்துக் கொண்டு!'' என்றான் ஔரங்கஜேப். ''என் தாய்'' என்று சொல்லாமல், ''உங்கள் பேகம்'' என்று சொன்னவிதமே சாட்டையடி போல் இருந்தது.

''நிஜமாகவா என்னைச் சிறை வைக்கிறாய் ஔரங்கஜேப்? நான் உனக்கு என்ன தீங்கு இழைத்தேன், மகனே?'' என்று கெஞ்சினான் ஷாஜஹான்.

''தீங்கா? ஒன்றுமே இல்லையே! நானும் உங்களுக்குத் தீங்கிழைக்கிறேனா என்ன? எத்தனை பெருந்தன்மையோடு தாஜ்மஹாலைக் கண்டு கொண்டே உயிரை விடும் பாக்கியத்தை அளித்திருக்கிறேன்!'' அவன் பற்கள் தெரியச் சிரித்தான். அந்தச் சிரிப்பு விஷப் பாம்பு படமெடுத்தாடுவது போல் அழகாக இருந்தது....

சிரிப்பு மாறாமலே திரும்பினான் அவன். ஒரு கணம் அதிர்ந்து நின்றுவிட்டான். எதிரே அவன் சகோதரி ஜஹானாரா.... அவள் ஏன் இங்கு வந்தாள்?

உடன் பிறந்தவர்களுள் அவன் பாசம் வைத்தது அவள் ஒருத்தியிடம்தான். அவள் தன் செவ்வாய் மலர்ந்து எதைக் கேட்டாலும் கொடுக்க அவன் சித்தமாயிருந்தான்.

அவள் கேட்டதோ?

''பாத்ஷா! என் தந்தைக்கருகே, அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு இருக்க அனுமதி கொடுங்கள்! 'நம் தந்தை' என்றும் அவள் சொல்லவில்லை, ''ஔரங்கஜேப்'' என்று அவனை வாய் நிறைய அழைக்கவும் இல்லை.

இருந்தும் அவனுக்குக் கோபம் வரவில்லை. ''இந்தக் கிழவனுக்காக நீ உன் வாழ்க்கையைப் பலி கொடுக்காதே! நீ குறிப்பிடுபவனுக்கு — அவன் யாராயிருந்தாலும் சரி — உன்னை மணம் செய்து வைக்கிறேன்!'' என்றான்.


''வேண்டாம்..... என் வேண்டுகோளை மனமுவந்து பூர்த்தி செய்ய வேண்டுகிறேன்!''

அவனுக்குத் திடும்மென்று கோபம் வந்தது. ''சரி! உன் இஷ்டம்!'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான். சட்டென்று ஏதோ நினைத்தவனாக, திரும்பிப் பார்த்தான். ஜஹானாரா தன் கிழத் தந்தையின் கைகளைப் பரிவோடு வருடிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டவன், ''பைத்தியக்காரி!'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே மேலே நடந்தான்.

மரணப் படுக்கையில் அமைதியின்றி நெளிந்து கொண்டிருக்கும் கிழ மன்னவன் மூடிய கண்களுக்குள் காட்சி மாறுகிறது.

தந்தையைச் சிறை வைத்திருந்த இடத்தை நோக்கி நடந்தான் ஔரங்கஜேப். தந்தையின் உயிர் பிரிந்து விட்டது என்ற செய்தி அப்போதுதான் கிடைத்திருந்தது. ஆனால் அவன் நெஞ்சில் வருத்தமோ, துயரமோ இல்லை.

ஷாஜஹானின் முகம் உறக்கத்தில் முறுவலிப்பவனின் முகம் போல் மலர்ந்



நட்புக்கும், நேசத்துக்கும் இலக்கணமாகி நின்று, எங்கள் கருத்தோடும், அன்போடும் ஒன்றிவிட்ட தோழர் திரு கீர்த்திவாசன் 1974 மார்ச் 30ம் தேதி இயற்கை எய்தியதை எண்ணி எண்ணி, நெஞ்சம் வெம்பும் துரதிர்ஷ்டமான கட்டத்தில் யுனைடெட் கமர்ஷியல் வங்கி ஊழியர்கள் அனைவரும் இருக்கின்றோம். குழந்தை உள்ளத்துக்கும், சீரிய பண்புக்கும் திரு கீர்த்திவாசன் பெட்டகமாகத் திகழ்ந்தார். அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்ட இயற்கையின் கொடுமையை எண்ணிப்பார்க்கவும் மனம் நடுங்குகிறது. தொழிற்சங்க ஊழியராக இருந்தபோதும், அலுவலகத்தில் பொறுப்புள்ள ஊழியராகப் பணியாற்றியபோதும் அவர் செம்மையாகச் சேவைகள் செய்தார். அவர் போன்று திறமையாக, நேர்மையாக இருக்க நாம் முயலுவதின் மூலம் அவருடைய ஆன்மாவுக்கு நாம் சிறந்ததொரு அஞ்சலி செய்தவர்களாவோம்.

யுனைடெட் கமர்ஷியல் வங்கி ஊழியர்கள்

இருந்தது. அன்புக்கோர் அழியாச் சான்றும் நின்ற தாஜ்மஹாலை ஜன்னல் வழியே பார்த்தான் ஔரங்கஜேப். "இதை எழுப்பிய மாபெரும் மன்னன் இதோ பிணமாகக் கிடக்கிறான். இதுதான் மனித வாழ்க்கை!" என்று ஒரு கணம் நினைத்துக் கொண்டான். அந்த ஒரு கணம் இதயம் பனியால் நிறைந்தது.

ஷாஜஹானின் உடலுக்கருகே ஜஹானரா அமர்ந்திருந்தாள்..... தந்தையின் அசைவற்ற கைகள் இன்னும் மகளின் பொன் விரல்களைச் சுற்றியே இருந்தன. அவனுடைய வலது கரத்தை மார்பின்மீது வைத்து அழுத்திக் கொண்ட நிலையில் ஷாஜஹானின் உயிர் பிரிந்ததோ?

சட்டென்று தன் இதயமெல்லாம் பரிவு நிறைவதை உணர்ந்தான் ஔரங்கஜேப். குனிந்து சகோதரியின் கருள் கேசத்தை அன்போடு வருடினான். அவள் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தபோது, அருள் மயமான அந்தக் கண்களில் கண்ணீர் மின்னும் காட்சி அவனை என்னவோ செய்தது.

வயோதிக மன்னன் ஔரங்கஜேப் புரண்டு புரண்டு படுக்கிறான். கண்களுக்குள் தெரியும் காட்சியில் இப்போது தெளிவில்லை. ரத்தம்... ஓலம்.... "எத்தனை இந்துக்களை உன் மத வெறியால் அழித்தாய்!" என்று ஏதோ குரல் இடி முழக்கம் செய்கிறது. பிரஜைகள் எல்லோரும் மன்னவனுக்குச் சமமாக இருக்க வேண்டாமா? அவர்களை முஸல்மான்கள் என்றும் முஸல்மான்கள் அல்லாதவர்கள் என்றும் பிரித்த நீ அரசனா?" என்று அந்தக் குரல் சிரிக்கிறது.

மறுபடியும் தண்ணென்று இதமான ஸ்பரிசத்தை உணர்கிறான் ஔரங்கஜேப். கண்களைத் திறக்கிறான். அவனுடைய மகள் ஜேப்புன்னிஸா நிற்கிறாள், கையில் மருந்துக் கிண்ணத்தோடு..... "எனக்கு வேண்டாம்" என்று அவன் முகத்தைச் சுளிக்கிறான். அவள் அந்த அருள்மயமான முறுவலோடு அவனுடைய தலையை உயர்த்திக் கிண்ணத்தை அவன் உதட்டின் மேல் வைக்கிறாள். பிடிவாதம் அடங்கிய சிறு குழந்தையைப் போல் அவன் அதைக் குடிக்கிறான். அவள் தன் பொன் விரல்களால் அவனுடைய வாயைத் துடைக்கிறாள். நரைத்த தாடி வெள்ளியாய் மின்னுகிறது. அவன் முறுவலிக்கிறான். அவள் கண்களில் கருணை, கடலாகத் தேங்கிக் கிடப்பதைக் காணும்போது அவன் இதயம் சுமை நீங்கினாற்போல் சிரிக்கிறது, ஒரு கணம்.

சட்டென்று, "இந்தக் கண்களில் கண்ணீர் மின்னினால்?" என்று அவன் நினைக்கிறான்.

இமைகளுக்குள் மற்றுமொரு காட்சி.....

ஜஹானரா அவனைக் கண்டு முறுவலித்தாள்.... அவன் அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தான்.

வைத்தியர் சொல்லிவிட்டார், அவளுக்கு அல்லாவிடமிருந்து அழைப்பு வந்து விட்டதென்று.... அவள் அழைத்து அவன் வந்திருந்தான்... அவனிடமிருந்து விடைபெற அவனை அழைத்தாளோ? என்னதான் ஒதுங்கி ஒதுங்கியே அவள் இருந்து விட்டாலும் அவள் முகலாய சாம்ராஜ்யத்தின் அரசனுடைய சகோதரி அல்லவா!

அவள் சாந்தமாக ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தாள்.

" நம் தந்தை இதை உன்னிடம் கொடுக்கச் சொன்னார். நீயும் நானும் கிழவர்களான பிறகு உன்னிடம் கொடுக்கலாம் என்று என்னுடனேயே பொக்கிஷம் போல் வைத்துக் கொண்டுவிட்டேன். இப்போதோ நம் உலகங்கள் பிரியும் வேளை வந்துவிட்டது. இதைப் பெற்றுக் கொள், ஔரங்கஜேப்!" அவள் கடிதத்தை அவனிடம் கொடுத்தாள், அவன் தலையை வருடி விட்டாள்.....

கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான் அவன். குழம்பிப் போய்ச் சிலையாய் அமர்ந்திருந்தான், சில நிமிடங்கள்....மறுபடியும் சகோதரியைப் பார்த்தபோது அவளுடைய இமைகள் மூடியிருந்தன.

கடிதத்தை அவன் பிரிக்கவும் இல்லை, படிக்கவும் இல்லை. அது ஜஹானரா அவனுக்காகக் காத்து வைத்த பொக்கிஷம். அதன் மதிப்பு அவ்வளவுதான். அதை அவன் தன் உடைமைகளோடு வைத்தான்.

புரண்டு புரண்டு படுக்கும் ஔரங்கஜேப் ஏதோ தெளிவு கண்டவன்போல் ஜேப்புன்னி

ஸாவை அருகே அழைக்கிறான். ஜஹனாராவின் கடிதத்தைத் தான் வைத்திருக்கும் இடத்தைச் சொல்கிறான். ''அதை எடுத்து வா.... நீயே, உன் கையால், எடுத்து வா'' என்று பணிக்கிறான்.

அவள் விரைந்து செல்கிறாள். கருள் கேசப் பின்னல் பாம்பாக நெளிகிறது. காதுக் குண்டலங்களும் கழுத்து மாலைகளும் இன்பமாய்ப் பிரகாசிக்கின்றன. பாதச் சிலம்புகளின் இன்னிசை மங்கி மங்கி அடங்குகிறது.

ஔரங்கஜேப் கண்களை மலர்த்தி அவள் சென்ற திசையையே பார்க்கிறான்.... அவளுடைய பாதச் சிலம்புகளின் ஒலிக்காக அவன் செவிகள் ஏங்கிக் கிடக்கின்றன.

அதோ! அந்த இன்னிசை கேட்கிறது.... ஒலி கூடி அருகே வருகிறது.... அவள் கையில் கடிதம் வெண் புறாவாக அசைகிறது.

''பிரித்துப் படி, மகளே!'' என்கிறான் ஔரங்கஜேப்.

அவள் பிரிக்கிறாள், படிக்கிறாள்!

''மகனே!

என் கிழக் காலத்தில் என்னைச் சிறை வைத்த என் மைந்தனே!

இந்தக் கடிதத்தின் மூலம் உன்னை நான் சபிக்கப் போகிறேன் என்று நினைக்காதே! என் சிறைவாசம் ஆரம்பித்த நாட்களில் அந்த மாதிரியான மன நிலையில் நான் இருந்திருக்கலாம். ஆறு வருடங்கள் கழிந்துவிட்டன.' இப்போது என் மனத்தில் உன் மேல் கோபமே இல்லை.....

தினமும் காலையில் எழுந்தவுடன் நான் தாஜ்மஹாலைப் பார்க்கிறேன். அல்லாவின் கருணையையே நினைக்கிறேன். நன்றி கூறுகிறேன்.

ஆனால் தாஜ்மஹாலில் இருப்பது ஓர் உத்தமியின் உடல் மட்டும்தான். அவளுடைய அன்பின் சான்றை நான் ஊனாலும் உதிரத்தாலுமான எழில் உருவாகத் தினமும் காண்கிறேன் — ஜஹனாராவின் உருவில் என் மகனே! என்னைச் சிறை வைத்து எத்தகைய நன்மையை எனக்குச் செய்துவிட்டாய்!.... உலகிலேயே அழகான காட்சி நிலவொளியில் தாஜ்மஹால் தரும் காட்சிதான் என்று நினைத்திருந்தேன். எத்தகைய அறிவிலி நான்! உலகிலேயே அழகானது உன் சகோதரியின் இதயம். கிழத் தந்தைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிக்கத் துணிந்தவளுடைய இதயத்தைவிட அழகான பொருள் இருக்கவே முடியாது.

ஔரங்கஜேப்! என் கண்கள் மங்க ஆரம்பித்துவிட்டன.... உடலிலிருந்த பலம் உடுத்திக் களைந்த ஆடையைப் போல் நழுவி விழுகிறது. தாஜ்மஹால் என் கண்களுக்குள்ளேயே பதிந்துவிட்டது. என் வாழ்நாள் இனி அதிகக் காலமில்லை என்று உணர்கிறேன்.....

இந்த நிலை — முதுமை — உனக்கும் ஒரு நாள் வரும்.... உலக வாழ்க்கையை மாயை என்று நீயும் உணர்வாய்.

அப்போது என்னைப் போல் நீயும் பீதியடையாமல் இருப்பாயாக! எனக்கு அளித்ததுபோல் அல்லா உனக்கும் ஒரு மகளை அளிக்கட்டும். அவள் கண்களின் மூலம் தன் கருணையைக் காட்டட்டும்!

என் மகனே! மும்தாஜின் மைந்தனே! ஜஹனாராவின் சகோதரனே! இதுவே உனக்கு என் ஆசீர்வாதம். விடை கொடு...

ஷாஜஹான்

கடிதத்தைப் படித்து முடிக்கும் ஜேப்புன்னிஸாவின் குரல் தேய்கிறது. ஔரங்கஜேப்பின் கண்கள் ஒளி மயமாகின்றன. உதட்டில் முறுவல் படர்கிறது.

ஜேப்புன்னிஸாவின் பொற்கரத்தை எடுத்துத் தன் இதயத்தின் மீது வைத்துக் கொள்கிறான் மொகலாய சாம்ராஜ்யத்தின் முதிய மன்னன்..... நடுங்கும் கிழக் கைகளால் அதை மூடிக் கொள்கிறான்.

அவனிடம் சலனமே இல்லை.

படித்துப் பாருங்கள்


இளஞ்சிறார்களுக்கு இரு கதைகள்

நவீனமான சிலைத் திருட்டுக்கள் பற்றிய கதை இது. என்றாலும் **கொல்லிமலைக் குள்ளன்** என்ற பழங்காலத் தலைப்புக்கு ஏற்பக் கத்தாழை மடலில் கடிதம் எழுதுதல், ரகசியக் குகையைக் கண்டுபிடித்தல், பரிசல் பயணம் போன்ற நிகழ்ச்சிகளும் நாட்டுப்புறக் காட்சிகள், திருவிழாக் கோலாகலம், கானகத்தின் தோற்றம் போன்ற வர்ணனைகளும் ஏராளமாய் உண்டு. சாமர்த்தியமாகச் சிலைகளைத் திருடும் 'குள்ளனை'ப் பிடிக்கப் புறப்படும் பிள்ளைகளின் வீரத்தை மட்டுமல்லாது அவர்களுடைய அச்சங்கள், ஹாஸ்யங்கள் போன்றவற்றையும் இயற்கையாகப் புகுத்தி எழுதியுள்ளார் ஆசிரியர் திரு பெ. **தூரன்**. ராமனுக்கு அனுமான் போல் இங்கும் குழந்தைகளுக்கு ஒரு குரங்கு உதவுகிறது. தூது போகிறது; எதிரியைத் தாக்குகிறது. வெற்றிக்கு உதவுகிறது. ''பலே ஜின்கா!'' என்பார்கள் இதனைப் படிக்கும் சிறுவர்கள்.

கிராமியச் சூழலில் ஓர் அர்த்தமுள்ள நாடகத்தை எழுதியுள்ளார் **பூவண்ணன்**. செல்வந்தர் மகனை தங்கராஜன் தன்னை ராஜாவாக நினைத்துக் கொண்டு அட்டகாசம் செய்கிறான். ஆக, அவன் பெயரில் மட்டும் தான் தங்கமானவன் என்பது தெளிவு. பட்டணத்திலிருந்து வந்து ராஜாவை உண்மையாகவே தங்க ராஜாவாக மாற்றுகிற கந்தன், இந்த முயற்சிக்குத் தனது தமிழாசிரியர் எடுத்துரைத்த, காந்தி, புத்தர் ஆகியோர் காட்டிய வழிகளைப் பின்பற்றுகிறான். தங்கராஜனைப் பாம்பு கடித்தபோது கந்தன் உறிஞ்சிய விஷ ரத்தத்துடன் அவனது விஷமயமான குணங்களையும் உறிஞ்சி உமிழ்ந்துவிடுவதாக ஆசிரியர் படைத்திருக்கும் காட்சி அமிர்தமான கற்பனை. விடுமுறை நாட்களில் சிறுவர், சிறுமியர் வீட்டிலோ அல்லது பள்ளிக்கூட நிகழ்ச்சிகளிலோ அரங்கேற்ற அருமையான நாடகம் **அன்பு நிலையம்**.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14; விலை: ஒவ்வொன்றும் ரூ. 3.50.

நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:



இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:



ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றுதான் பற்சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

ஒப்பற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளூரைடு

ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கிங்கல், ஸ்டோலிடே...400 குழந்தைகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளூரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445-460). எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளூரைடு? பல் எனாமலோடு அது ஒருங்கிணைகிறது; பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதையுடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தினருக்கும் இதுவன்றோ நற்காப்பு: ஸிக்னல் சிகிச்சையே முற்காப்பு.

வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னல் உள்ள எஸ்-14

அமெரிக்காவிலே டாக்டர் ஹாவர்டு E. கிளை... மருத்துவ பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை ஒழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆனபின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., நார்த் வெஸ்டர்ன் யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)

ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் டிரைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல் தூய்மை அளிக்கிறது, பல் எனாமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: கிலார் ரிவியு 7 நவ 1969, வெளியிட்டோர் U.R. லேபாரட்டரீஸ், நூல்வொர்த், U.K.) ஒப்பில்லாச் சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளூரைடு, எஸ்-14 — இம் மும்மணிகளும் இணையிடம்: ஸிக்னல் ஒன்றுதான். இன்னொரு பற்பசை இவ்வளவு செய்யாது.




இந்துஸ்தான்
லீவரின் உத்தரவாதம்
தாங்கியது ஸிக்னல்.


காப்புரிமை ... எண் 114718

அத்தாட்சி காட்டுவது

ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றே—
கேளுங்களேன் பல் டாக்டரை.

லிண்டாஸ்-SGF 63-140 TM





மண்ணில் விளைந்த மாயம்

இரு கோடி ஆண்டுகள்! எண்ணித் தொலையாத இவ்வாண்டுகள் விளைவித்த அற்புதம் எண்ணி மாளாது. கப்பும் கிளையுமாய்ப் பரவி வளர்ந்து பார்ப்பவர் கண்களில் பசுமையைப் பரப்பும் மரங்கள் காலப் போக்கில், கல்லாக மாறிவிடும் அற்புதத்தை இயற்கையின் இந்திர ஜாலமாகத்தான் கருத வேண்டும்.

காலத்தின் சுழற்சியில், கல்லுருவம் பெற்றுவிட்ட மரங்கள் உருவத்தில் மரங்களைப்போல் தோன்றினாலும் கன பரிமாணத்திலும் உறுதியிலும் கல்லாகவே இருக்கின்றன. எத்தனைதான் வைரம் பாய்ந்த மரமானாலும் கோடாலிக்குத் தப்ப முடியாதல்லவா? ஆனால் இந்தக் கல் மரங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் காற்று, மழை, வெய்யில் இவற்றில் அடிபட்டு, நனைந்து, காய்ந்து, இறுகிக் கடைசியில் பாறையிலான மரங்கள் போலத் தோன்றுகின்றன.

கற்கால மனிதனுக்கும் முற்பட்ட காலத்தில் பல அதிசயப் பிராணிகள் உயிர் வாழ்ந்திருக்கின்றன. அவற்றை இன்று நாம் காண முடியாவிட்டாலும் அவற்றின் எலும்புக் கூடுகளை மியூஸியத்தில் பார்த்து அதிசயிக்கிறோம். ஹிமாசலப் பிரதேசத்தில் ஸாகேதி என்ற ஊரில், சரித்திர காலத்துக்கு முன் தோன்றிய ராக்ஷஸப் பிராணிகளின் எலும்புக் கூடுகள் கிடைத்திருக்கின்றன. ஆந்திர மாநிலத்தில், எம்மனப்பள்ளியில், புலால் தின்னும், புலால் தின்னாத இரண்டுவித இனங்களையும் சேர்ந்த பூதாகாரமான பிராணிகளின் எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டுப் புதைபொருள் இலாகாவினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கால வெள்ளத்தின் போக்கில் உரு மாறினாலும் மறைந்து போகாது, வரலாற்றுத் தொன்மையைக் கணக்கிட்டுக் கூறும் மேற்படி தொல்பொருள்களோடு சேர்த்து மதிக்கக்கூடியவை மரக்கல் வனங்கள் (Fossil Wood Parks).

Fossils என்றால் புதைந்த உயிரினச் சின்னங்கள் என்று பொருள்.

இப்போது 'அரசியல் முக்கியத்துவமும் பிரசித்தியும்' பெற்று விளங்கும் பாண்டிச்சேரியிலிருந்து பதின்மூன்று மைல் தூரத்தில் உள்ள திருவக்கரை என்னும் கிராமத்தில் உள்ள மரக்கல் வனங்களைப் பார்வையிட மத்திய அரசு புவி இயல் ஆராய்ச்சி இலாகாவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

திருவக்கரை மிகவும் அழகிய சிறு கிராமம். அது சம்பந்தரால் பாடப்பெற்ற சிவஸ்தலம். சந்திரமௌளீசுவரர்—வடிவுடையம்மன் சங்கராபரணி நதியெனப்படும் வராக நதிக் கரையில் 'திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர். சற்று ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதனமான ஆலயம். சிதிலமடைந்து கொண்டு வரும் மிகப் பழைய கோபுரம், மூப்பு அடைந்துவிட்டாலும் கம்பீரமாக நிற்கிறது. ஆலயத்தின் நுழை வாயிலையடுத்து வக்கிரகாளி (உக்கிரகாளி அல்ல!) சந்நிதி இருக்கிறது. வக்கிராசுரனை வென்ற காளி. அதன் காரணமாகவே ஊருக்குத் திருவக்கரை என்ற பெயர் வந்தது. கர்ப்பக்கிருகத்தில் முகலிங்கேசுவரர்—லிங்கத்தின் மூன்று பக்கங்களிலும் பிறைசூடிய பெருமானின் தோற்றம் காணப்படுகிறது. நான்காவது முகம் கலியுகத்தின் முடிவில் தோன்ற இருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆலயத்தினுள்ளே சிற்ப வேலைப்பாடுகள் பிரமாதமாயிருக்கின்றன. கிலமாகிப் போன நூற்றுக் கால் மண்டபம் ரதம் போல் பல சக்கரங்களுடன் காணப்படுகிறது.





கலைச் சிறப்புமிக்க இந்தப் புராதன ஆலயத்துக்குச் சற்றுத் தொலைவில் சுமார் பன்னிரண்டு மைல் அகலம், ஆறு மைல் நீளத்துக்கு மரக் கல்கள் காணப்படுகின்றன. இந்தப் பகுதியை மத்திய அரசு முள்வேலி விட்டுப் பாதுகாத்து வருகின்றது.

காலப் போக்கில் கல்லாகிவிட்ட மரங்களை வக்கிராசுரனின் எலும்புகள் என்று இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். ராட்சத மரங்கள் கீழே விழுந்தும், பூமியில் அழுந்தியும் கிடக்கும் அப்பிரதேசத்தைப் பார்க்கும் போது ஸ்ரீராம ராவண யுத்தம் முடிந்த பிறகு அந்த யுத்த களம் இப்படித்தான் இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

அது சரி. மரம் எப்படிக் கல்லாக மாறும்? மண்ணில் புதைந்த மரம் பட்டுப் போய் மண்ணோடு மண்ணாகிவிடுமேயல்லாமல், அப்படியே கல்லாகிவிடுவது அதிசயமாயிருக்கிறதே என்று எண்ணத் தோன்றும்.

தென்னார்க்காடு மாவட்டத்தின் கடல் ஓரப் பிரதேசங்களில் பெய்யும் மழை வெள்ளம் பாண்டிச்சேரிக் கடலில் சேரும் முன் பரவலாக விசித்திர மாற்றங்களைச் செய்கிறது. பொங்கி வரும் புதுப் புனலின் வேகத்துக்கு ஈடு கொடுத்துத் தலை நிமிர்ந்து நிற்க இயலாத மரங்கள் பல காத தூரம் வெள்ளத்தில் ஓடி வந்து மண் மேடிட்டுப் பல இடங்களில் ஒதுக்கப்படுகின்றன. களிமண்ணும், மணலும், நீரும் சேர்ந்து மரங்களை முழுக்காட்டித் தம் அற்புதக் கலவையினால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளில் அவற்றை மரக் கற்களாக மாற்றிவிடுகின்றன. இயற்கையின் இணையற்ற சக்தியினால் இந்த ரசவாத வித்தை நிகழுமுன் எத்தனையோ நூற்றாண்டுகள் கால வெள்ளத்தில் ஓடிவிடுகின்றன.

இயற்கை இன்முகம் காட்டினால் எழில் கொஞ்சுவதாய் உள்ளது; சீற்றம் கொண்டாலோ அதன் சக்தி சிலிர்க்கச் செய்வதாய் உள்ளது !

— ஸோமாஸ்



தேனீ ஆடும் நடனம்

தேனீக்கள் நடனமாடுகின்றன என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா?

தேன் இருக்கும் மலர்களை நாடிச் செல்லும் தேனீக்களின் முன்னோடி, மலர்களிலிருந்து தேனை உறிஞ்சி எடுத்துக் கொண்டு கூட்டுக்குத் திரும்புகிறது. நிறையத் தேன் கிடைத்துவிட்டால் அதை மற்றத் தேனீக்களுக்குத் தெரிவிப்பதற்காக மகிழ்ச்சியுடன் அது நடனமாடுகிறது. அது ஆடும் நடன வகைகளின் மூலம் பல செய்திகள் வெளிப்படுகின்றன. கிடைக்கக் கூடிய தேனின் அளவு, திக்கு, தொலைவு போன்ற விவரங்களையெல்லாம் முன்னோடித் தேனீ ஆட்டத்தின் மூலம் மற்றத் தேனீக்களுக்குத் தெரிவிக்கிறது!

உதாரணமாக, கூட்டுக்குத் திரும்பிய தேனீ கூட்டின் மீது வட்டமாகச் சுற்றிச் சுற்றி ஒருவகை நடனம் ஆடினால் தொண்ணூறு மீட்டர் தொலைவுக்குள் தேன் கிடைக்கும் மலர்கள் உள்ளன என்று மற்றத் தேனீக்கள் புரிந்து கொள்ளும்.

இப்படிப் பலவித நடனங்களின் மூலம் பலவிதச் செய்திகளைத் தெரிவிக்கிறது முன்னோடி தேனீ! அத்துடன் மற்றத் தேனீக்களும் உற்சாகமடைந்து நடனத்தில் பங்கு கொள்கின்றன. முதன் முதலில் நடனமாடத் தொடங்கிய தேனீயை நெருங்கித் தமது உணர் இழைகளால் தொட்டு வாசனையை நுகர்கின்றன. இதனால் தேன் இருக்கும் மலரின் வாசனையை அறிந்து கொள்கின்றன.

சமீப காலம்வரை தேனீக்களுக்குக் காது கேட்பதில்லை என்றே விஞ்ஞானிகள் கருதி வந்தனர். செய்திகளை அறிவிப்பதற்கு அவை 'நடன' முறையைக் கடைப்பிடிக்கின்றன என்று மட்டுமே பொதுவாகக் கருதினர். ஆனால் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளத் தேனீக்கள் ஒருவகை ஒலியை எழுப்புகின்றன என்றும் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தேனீ ஒலியை எப்படி உண்டாக்குகிறது என்பதும் அதை எவ்வாறு கேட்கிறது என்பதும் புதிராகவே இருந்து வந்துள்ளன. தேனீ அதன் இறகுகளால் ஒலி எழுப்புகிறது என்று நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின் தெரிய வந்துள்ளது. ஒலியின் அதிர்வை உணர்வதற்கு அது தன் உணர் இழைகளையும் (தலைப்பக்கத்தில் நீண்டு இரண்டு கொம்புகள் போன்றிருக்கும் உறுப்பு) கால்களையும் பயன்படுத்துகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இத்துறையில் மேலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது.

எஸ்.எஸ். இராமசாமி

காரியம் இருக்கக் கார்ட்டூன் எதற்கு ?



முன்பெல்லாம் அமைச்சர்களின் செயல்களைக் கார்ட்டூன் போட்டுக் காட்டி மக்களைச் சிரிக்க வைக்க வேண்டும். இப்பொழுதெல்லாம் அமைச்சர்களுடைய செயல்கள் மக்களுக்குத் தாமாகவே சிரிப்பை வரவழைக்கின்றன.

-இல்லஸ்டிரேடட் வீக்லியில் ஆர்.கே. லக்ஷ்மண்

-பாபு

தலையணை மந்திரம்



தந்தை கடுமையாக உழைத்துவிட்டுச் சோர்ந்தது போல் வீடு திரும்பியபோது குழந்தைகள் விஷமம் செய்வதைக் கண்டு கோபாவேசம் கொண்டு கடிந்து கொண்டார். மறுநாள் காலையில் அவர் விழித்தெழுந்தபோது அவரது தலையணைமீது மேற்கண்ட வாசகம் அடங்கிய தாள் காணப்பட்டது: ''குழந்தைகளிடம் அன்பாயிரு. அவர்களும் நல்லவர்களாயிருப்பார்கள். - கடவுள்.'' பி. எஸ். எம்.

நன்றி: லிமெக்ஸ்



உதய ராகம்


ஆண்டுகள் தோறும் உலகம்
அமைதியைக் காணு தேங்க
நீண்டன போர்கள்; எங்கும்
நிலைத்தது பகைமை: அதனால்
மூண்டன தூர்கள்; அங்கே
முளைத்தது வறுமை, அந்தோ!
மாண்டன தோந் தோறும்
மக்களின் தெய்வ நீதி
ஆண்டதில் லாபங் கண்டோர்
அரசியல் எத்தர் தாமே.


சிதங்கொல் பங்குனி ஏக
சித்திரைத் திங்களோடு
மாதங்கள் பன்னிரண்டும்
மறுபடி தோன்று மாறு
வேதங்கள் போற்றும் முன்னோன்
விக்கினன் ஆணை யாலே
சேதங்கள் சிதைத்து வாழ்வுச்
சீதனம் நல்கி, மக்கள்
ஆதங்கம் தீர்த்த தாக
'ஆனந்தம்' வருக! வாழ்க!!

பாடுங்கள் உதய ராகம்
பகையெலாம் ஒழிந்த தென்று
தீருங்கள் இதய மோகம்
நீக்கறு முறிந்த தின்று
காணுங்கள் புதிய ஆண்டின்
கடமையே மனித நீதி
நாடுங்கள், நாடு தோறும்
நட்பெனும் பந்தல் கட்டி
ஆடுங்கள் விழாக் கோலம்
ஐங்கரன் அருளுவானே!

தீட்டுவோம் புதிய சட்டம்
திறமையே பதவி என்று
ஓட்டுவோம் சோம்பல் பேயை
ஊக்கத்தின் உதவி கொண்டு
நாட்டுவோம் புதிய வாழ்க்கை
நாமெல்லாம் ஒன்றே யாகி
ஊட்டுவோம் ஒருமைப் பாடு
'உலகமே குடும்பம்' என்று
ஏற்றுவோம் ஆன்ம தீபம்
இருள் எலாம் விலகுமாறே.

கி. பாலதண்டபாணி




மிகமென்மையான பிளேடு-களையும், விண்வெளி பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன.
கத்திமுனைபோல கூரான பிளேடுகளையும் விதவிதமான விசேஷ உலோகங்களடங்கிய பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
வெட்டுக்காயங்களும், கீறல்களும், எரிச்சலும்தான் மிச்சம்.
கடைசியாக சில்வர் ப்ரின்ஸ் உபயோகித்துப் பார்த்தேன். முகக்ஷவரம் மழமழப்பாகவும், சுத்தமாகவும் இருந்தது... நிறைவேற்ற முடியாத உறுதி மொழிகளல்ல.
சில்வர் ப்ரின்ஸ்
சுத்தமான, மழமழப்பான க்ஷவரத்தைத் தரும்...
உறுதிமொழியை நிறைவேற்றிடும் பிளேடு.
SILVER PRINCE
STAINLESS
சில்வர் ப்ரின்ஸ்–சுகமான க்ஷவரம்...சோக்குசான க்ஷவரம்
நீங்கள் சில்வர் ப்ரின்ஸ் கொண்டு மழமழப்பாகவும், சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்ளலாம். ஏனெனில் இறக்குமதியான மிகச் சிறந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில், இந்தியாவில் அதி முன்னேற்றமான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகிறது சில்வர் ப்ரின்ஸ். நீங்களும் சுகமான க்ஷவரத்தைப் பெறுகிறீர்கள். எனவேதான் சில்வர் ப்ரின்ஸ் முகக்ஷவரத்தை சுகக்ஷவரம் என்கிறோம்.
SILVER
PRINCE
STAINLESS
Grant.5.TM

வட்ட மேஜை

பெரியவாள் உகந்த சிவாஸ்தானம்

ஒரு நாள் அதிகாலையில் காஞ்சிபுரம் சிவாஸ்தானத்தில் பெரியவாளின் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறோம். உள்ளே ஒரு கைங்கரியபரரிடம் பல விஷயங்களைப் பற்றிப் பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிறகு ஸ்ரீ பெரியவாள் அந்த அறையிலிருந்து கிழக்கே வாயிலருகில் வந்து கம்பிக் கதவுக்கு உள்ளிருந்தபடியே தரிசனம் கொடுத்த காட்சி இன்னும் அப்படியே மனக் கண் முன் நிலைத்திருக்கிறது.

மகோன்னத தரிசனம்! அருள் நிறைந்த பார்வை! ஜோதி ஸ்வரூபமான திருமுக மண்டலம்! இவை எல்லாவற்றுக்கும் மேல் இப் பூவுலகத்தில்தான் உள்ளோமா என வியப்படையச் செய்யும் விதத்தில் ஸ்ரீ பெரியவாளுக்கே உரித்தான புன்சிரிப்பு எங்களை விசாரித்தது! மௌனம் கலந்து நீண்ட நேரம் உள்ளம் நெகிழப் பேசுகிறார்.....

ஸ்ரீ பெரியவாள்: உங்களுக்கு இந்த இடம் ஏற்கனவே தெரியுமா? நான் ஆந்திரப் பிரதேசத்தில் பல சிறு கிராமங்களுக்குச் சென்று விட்டு இங்கு வந்திருக்கிறேன். இப்பொழுது நான் இருக்கும் இவ்விடம் புதிதாகக் கட்டப்பட்டது. நான் யாசகம் செய்து பலர் பணம் கொண்டு கட்டப்பட்டது. இக்கோயிலைப் பார்த்தீர்களா? (ஒருவரைக் கூப்பிட்டு ஸ்ரீ பெரியவாள் அக்கோயிலைத் திறந்து காண்பிக்கச் சொன்னார்கள் எங்களுக்கு.) இக்கோயிலுக்குள் ஸ்ரீலிங்கஸ்வரூபியாக எழுந்தருளியிருக்கும் ஈசுவரனைத் தரிசனம் செய்து கொள்ளுங்கள். அப்பொழுது அம் மூர்த்திக்குப் பின் பக்கத்துச் சுவரில் கவனித்துப் பாருங்கள். அங்கு ஒரு சித்திரம் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்கள். அது என்ன தெரியுமா? ஆதி சங்கர பகவத்பாதாள் பல்வேறு திக்குகளில் மடங்களை ஸ்தாபித்த பிறகு, இங்கு வந்து இந்த ஈசுவரனைப் பூஜித்து வந்தார்கள். நன்றாகக் கவனித்துப் பாருங்கள். ஆசார்யாள் கையில் தண்டத்துடன் ஈசுவரனை வழிபடும் கோலம் சிற்பத்தில் இருக்கிறது. பக்கத்தில் சோமாஸ்கந்தரும் இருப்பதைப் பாருங்கள். இந்தக் கோயிலுக்கு அதனால்தான் தனிச் சிறப்பு! இதற்கு "சிவஆஸ்தானம் அல்லது சிவாஸ்தானம்" என்று பெயர். நான் வெறுமனே சொல்லவில்லை. இதற்குச் சான்று உண்டு....

நீங்கள் காஞ்சிபுரம் சென்று, "காஞ்சி புராணம்" என்கிற புத்தகத்தை வாங்கி, அதில் இது பற்றிக் கூறியுள்ள பாட்டை எடுத்து, அதைப் பிரசுரியுங்கள். அவ்வளவு மஹாசிரேஷ்டமான ஓர் இடமாகும் இக் கோயில்! அதனால்தான் நான் இங்கு வந்து இருக்கிறேன்!

என்னே ஸ்ரீ பெரியவாளின் கருணை! எங்களிடம் இது பற்றிக் கூறியது!....

காஞ்சி புராணம் - சிவத்தானப் படலம்

என்றன் ஆத்தானமாக யான் உறை
இருக்கை தன்னை
உன்றன் ஆத்தானமாக கோடலான்
உம்பர் ஏறே
நன்றும் இத்தானம் என்றும் நவில்
சிவாத்தானப் பேரால்
நின்றிட இங்கு நாளும் நீ இனிது
உறைதல் வேண்டும்.

தேவ தேவ மமாஸ்தானம் தவாஸ்தானமிதம் க்ருதம் |
சிவாஸ்தானேச்வரம் நாமஸ்தான மேதத் ப்ரஸித்திமத ||

(பொருள்: என்னுடைய இருப்பிடமாக யான் உறைகின்ற இவ்விருக்கையை உன்னுடைய இருப்பிடமாகக் கொள்ளுதலினால், தேவர் தலைவனே! பெரிதும் இவ்விடம் என்றும் பேசப் பெறும் சிவாத்தானம் எனும் பெயரால் நிலைபெற இங்கு எக்காலத்தும் நீ இனிதாக எழுந்தருளியிருத்தல் வேண்டும்.)

சிவபெருமான் தமது இருக்கையாக உகந்த சிவாஸ்தானத்தைத்தான் பெரியவாள் தற்போது உகந்திருக்கிறார்.

பாண்டிச்சேரி — இரு பக்தர்கள்

□

வேண்டாம் மனவருத்தம்!

கல்கியில் எனது நாடகமான "சந்நிதான"த்தின் விமர்சனம் கண்டேன். அளவற்ற மகிழ்ச்சியின் ஊடே ஒரு சிறு மன வருத்தம் தோன்றியது. சந்நிதானம் நாடகத்தின் கதை, வசனகர்த்தா கடலூர் டி. என். துரைசாமி என்று பிரசுரிப்பதற்குப் பதிலாகக் கடலூர் டி. என். மூர்த்தி என்று தவறாக அச்சிடப்பட்டுள்ளதே அதற்குக் காரணம்.

16—3—74
கடலூர் — டி. என். துரைசாமி



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras - 600031 Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

வணக்கம்

இனிய எண்ணங்கள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்ருக எப்படித்தான் மலர்கின்றன!

எழுபது ஆண்டுகளுக்கு முன் ஜாம்ஷெட்ஜீ டாட்டாவின் மனதில் தோன்றியதொரு கனவு, இன்று பம்பாயில் தாஜ்மஹால் எனப்படும் இன்ப நனவாக மலர்ந்தது, தனது நகரத்தின் மீதும், நாட்டின்மீதும் அவர் கொண்டிருந்த அளவற்ற அன்பினுல் தாஜ் மஹாலேக் கட்டினுர்.

பல வருடங்களாக ஜனங்களே பம்பாய்க்கு ஈர்ப்பதில் தாஜ் பெரும்பங்காற்றியுள்ளது. அது தனது ஆயுட்காலத்திலேயே ஒரு அதிசயமாக ஆகிவிட்டது. அதைப் பற்றி புத்தகங்களில் எழுதப்படுகிறது. அது திரைப்படங்களில் காட்டப்படுகிறது. உலக நிறுவனம் ஒன்று அதை கிழக்கில் மிகச் சிறந்ததொரு யாத்திரைவிடுதி எனக்கூறியுள்ளது.

இப்பொழுது, 70 ஆண்டுகளுக்குப் பின், இன்னுமொரு மாநகரத்தை வெகுவிரைவில் மற்ருெரு தாஜ் அலங்கரிக்கும். இந்த ஏப்ரலில் திறக்கப்படவிருக்கும் தாஜ் கோரமாண்டல் சென்னையிலேயே மிகச் சிறந்த ஓட்டலாக விளங்கும்.

தென்னிந்தியாவிற்கு சுற்றுலாவைப் பெருமளவில் வளர்க்க அது உதவும். சென்னை மாநகரத்திலே வாணிப வளர்ச்சியை அதிகரிக்கவும் அது உதவும். பழம்பெரும் தாஜ் போலவே இந்தப் புதிய தாஜ் நீங்கள் எதிர்பார்ப்பது போலத் திகழும், நம்புராதனக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் என நம்புகிறேம்.

ஏப்ரல் 1974ல் திறக்கப்படுகிறது.



SIMOES/IT-364

தாஜ் மஹால் ஓட்டல் குழுவின் ஒரு அங்கம்

Taj Coromandel Hotel
Madras.